வள்ளுவ ஆண்டு 2057 – புரட்டாசி – 26 – செவ்வாய்க்கிழமை – 13.10.2026 | பக்கங்கள் – 36 | இதழ் – 09

BEHIND ME MEDIA

WE SEE BOTH AHEAD AND BEHIND

web : behindmenews.org

குறள் 9 : கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை

பொருள் : கேட்காத செவி பார்க்காத கண் முதலியனபோல் எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்.

செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கிடைக்குமா? – பின்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி!

இலங்கையின் செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளைச் சுயாதீனமாகவும் சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாகவும் முன்னெடுப்பது தொடர்பாக, பின்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான இன்கா ஹொப்சு (Inka Hopsu) மற்றும் ஏவா பியோடெ (Eva Biaudet) ஆகியோர் அந்நாட்டு அரசாங்கத்திடம் எழுத்துமூலக் கேள்விகளை முன்வைத்துள்ளனர்.





செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் உண்மையைக் கண்டறிதல், மனித எச்சங்களை அடையாளம் காணுதல் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைப்பதை உறுதிப்படுத்துதல் ஆகிய விடயங்களில் பின்லாந்து அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமது கேள்வியில், ஒகஸ்ட் மாத நடுப்பகுதி வரை செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து 580க்கும் மேற்பட்ட மனித உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் தகவல்களையும் ஊடகச் செய்திகளையும் மேற்கோள்காட்டி, கண்டெடுக்கப்பட்ட எச்சங்களில் குழந்தைகளின் உடல்களும் அடங்குவதாகவும், பாடசாலைப் பைகள் மற்றும் பால் போத்தல்கள் உள்ளிட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் மெதுவாக முன்னெடுக்கப்படுவது குறித்தும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மழை மற்றும் வளப் பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தப்பட்ட அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை, அத்துடன் சர்வதேச கண்காணிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்களையும் அவர்கள் தமது கேள்வியில் குறிப்பிட்டுள்ளனர். மேலும், சர்வதேச தடயவியல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் வலியுறுத்தியுள்ளதையும் அவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

மனித எச்சங்களை அடையாளம் காண்பதற்கான டி.என்.ஏ. மாதிரிகளைச் சேகரித்து ஆய்வுசெய்யும் பணிகளுக்கு சுயாதீனமான பொறிமுறைகள் அவசியம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் மற்றும் வாழ்க்கைத் துணைகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமலேயே வயதான பெற்றோர்களும் உறவினர்களும் உயிரிழந்து வருவது குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உண்மையையும் நீதியையும் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாண்டு பெப்ரவரியில் பின்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் நிறுவப்பட்ட அரசியல் ஆலோசனைப் பொறிமுறையைப் பயன்படுத்தி, மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை முன்வைப்பதற்கும் இலங்கை அரசாங்கத்துடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடுவதற்கும் உள்ள வாய்ப்புகள் குறித்தும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குறிப்பாக, செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளுக்கு சர்வதேச தடயவியல் நிபுணத்துவம், தொழில்நுட்ப உதவி மற்றும் நிதியுதவிகளை வழங்க பின்லாந்து தயாராக உள்ளதா என்பதையும், அவ்வாறான உதவிகள் இருதரப்பு உறவுகள், ஐரோப்பிய ஒன்றியம் அல்லது ஐக்கிய நாடுகள் சபை ஊடாக வழங்கப்படுமா என்பதையும் அவர்கள் வினவியுள்ளனர்.

இந்நிலையில் நாளை ஒக்டோபர் 14ஆம் திகதி இலங்கையின் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க பின்லாந்துக்கு விஜயம் செய்யவுள்ளதாகக் குறிப்பிடப்படும் சூழலில், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பியுள்ள கேள்விகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளில் வெளிப்படைத் தன்மை, சுயாதீனத்தன்மை மற்றும் சர்வதேச நிபுணத்துவத்தின் பங்களிப்பு ஆகியவை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை, இந்த எழுத்துமூலக் கேள்விகள் மூலம் மீண்டும் கவனத்துக்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

வருடாந்திர நன்றி தெரிவிப்பு நிகழ்வில் Toronto மேயர் வேட்பாளர்கள் பங்கேற்பு

நன்றி தெரிவிப்புத் திருநாளை முன்னிட்டு, டொராண்டோவில் உள்ள டெய்லி பிரெட் உணவு வங்கியில் அதன் வருடாந்திர உணவுத் தரமிடும் நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது. இதில் டொராண்டோவின் முக்கிய மேயர் வேட்பாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கான தன்னார்வலர்கள் கலந்துகொண்டனர்.



உணவு வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரியான நெய்ல் ஹெத்தரிங்டன், இதுவரை சுமார் 84,000 கிலோகிராம் உணவுப் பொருட்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும், நன்றி தெரிவிப்புத் திருநாளுக்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில், அமைப்பு தனது 5 மில்லியன் டாலர் இலக்கில் பாதியை மட்டுமே எட்டியுள்ளது என்றார்.

"தேவை இப்போது அதிகமாக உள்ளது" என்று அவர் தெரிவித்தார்.

டெய்லி பிரெட் உணவு வங்கியின் இந்த உணவுத் தரமிடும் நிகழ்வில் 400 க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஒன்றுகூடி, நன்கொடையாக வழங்கப்பட்ட பொருட்களைப் பிரித்து பொதி செய்யும் பணியில் ஈடுபட்டனர். இந்தப் பொருட்கள் கதகதப்பான நன்றி தெரிவிப்பு உணவுத் தேவைப்படுவோருக்கு வழங்கப்படுகின்றன. P- 22

அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கத்துக்கு அவுஸ்திரேலியாவில் அஞ்சலி!

அண்மையில் யாழ்ப்பாணத்தில் காலமான அரசியல் ஆய்வாளரும் சமூக, அரசியற் செயற்பாட்டாளரும், சமூக விஞ்ஞான ஆய்வுமையத்தின் தலைவருமான சி.அ.யோதிலிங்கத்தின் மறைவையொட்டி அவருக்கு அவுஸ்திரேலியாவில் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. P- 22

அதிகரித்துக் கொண்டு செல்லும் Toronto வின் நகராட்சித் தேர்தல் பரபரப்புக்கள்!



டொரன்டோவின் நகராட்சித் தேர்தல் இன்னும் இரண்டே வாரங்களுக்குள் வரவுள்ள நிலையில், வாக்களிப்பதற்கு முன்பு நீங்கள் விழிப்புணர்வு பெற பல குடிமை சமூக அமைப்புகள் முன்வந்துள்ளன. P- 22

மேயர் தேர்தல் வாக்குறுதிகளைத் தாண்டி மேலதிகமாக எதிர்பார்க்கும் Scarborough!





Toronto மேயர் தேர்தலில் Scarborough பகுதி ஒரு முக்கிய போர்க்களமாக உருவெடுத்து வருகிறது. தேர்தல் நாள் நெருங்கி வரும் வேளையில், Olivia Chow மற்றும் Brad Bradford ஆகிய இரு வேட்பாளர்களும் அப்பகுதியில் தங்கள் பிரச்சார நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். P- 22

செம்மணி பற்றி வினோத உடைப் போட்டி : சிறுவனின் பெற்றோருக்கு விசாரணை!

செம்மணியில் இடம்பெற்ற அவலத்தை சித்தரித்து வினோத உடைப் போட்டியில் அதனைப் பிரதிபலித்த மாணவனின் பெற்றோரை மருதங்கேணிப் பொலிஸார் இன்று விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

யாழ்.வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு சென் பிலிப் நேரிஸ் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா செம்பியன் பற்று வடக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலய முன்றலில் நேற்று இடம்பெற்றது இதன்போது வினோத உடை போட்டியில் பங்குகொண்ட ஓர் சிறுவனே செம்மணியில் புதையுண்ட சிறுவர்களாக காட்சியளித்தான். இவ்வாறு வேடமணிந்த சிறுவனின் பெற்றோரே இன்றைய தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அனோஜன் பற்றிய கருத்து: பிரித்தானிய மருத்துவருக்கு எதிராக விசாரணை?

அனோஜனுக்கு சவுதி அரேபிய நீதிமன்றம் விதித்த மரண தண்டனை தொடர்பான விவகாரம் பிரித்தானியாவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. P- 13

மலேஷிய நாடாளுமன்றில் திருக்குறள்!

மலேஷிய நாடாளுமன்றில் திருக்குறளை மேற்கோள் காட்டி மலேசிய பார்லியில் அந்நாட்டு பிரதமர் அன்வர் இப்ராஹிம் உரையாற்றியது, வலைதளங்களில் வைரல் ஆகியுள்ளது. P- 22

ஷிரந்தி கைதானமை சட்டவிரோதம்?

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ச சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. P- 22

Toronto இந்தியத் துணைத் தூதரகத்தால் “கனடாவில் இந்தியப் பெண்களுக்கு அதிகாரத்தை வழங்குதல்” கருத்தரங்கு



கனடாவில் உள்ள இந்தியப் பெண்களுக்குக் கிடைக்கும் ஆதரவு வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, பெண்கள், சமூக அமைப்புகள், சட்ட மற்றும் ஆலோசனை வல்லுநர்கள் மற்றும் பிற பங்குதாரர்களை ஒன்றிணைத்து, ரொறன்ரோவில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் கடந்தவாரம் “கனடாவில் இந்தியப் பெண்களுக்கு அதிகாரத்தை வழங்குதல்” என்ற தலைப்பில் ஒரு சிறப்புக் கருத்தரங்கை ஏற்பாடு செய்தது.

கடினமான அல்லது துன்பகரமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் பெண்களுக்கு சட்ட, உளவியல் சமூக, தூதரக மற்றும் சமூக ஆதரவு சேவைகளை எளிதாக்குவதற்காக, டிசம்பர் 2025-ல் ரொறன்ரோவில் தொடங்கப்பட்ட இந்திய அரசின் ஒரு முயற்சியான பெண்களுக்கான ஒற்றை நிறுத்த மையத்தை (One Stop Centre for Women) இந்தக் கருத்தரங்கு முன்னிலைப்படுத்தியது.

இந்தியப் பெண்கள், சர்வதேச மாணவர்கள், மகளிர் குழுக்கள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், அத்துடன் பெண்களுக்கு ஆதரவளிக்கப் பணியாற்றும் தனிநபர்களும் பீல் பிராந்திய காவல்துறையின் பிரதிநிதிகள், பெண்களுக்கான ஒற்றை நிறுத்த மையத்துடன் தொடர்புடைய சட்ட மற்றும் ஆலோசனை வல்லுநர்கள், மற்றும் பெண்கள் நலன், சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் ஆகிய துறைகளில் பணியாற்றும் முன்னணி சமூக அமைப்புகள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். பங்கேற்பாளர்கள் வழக்கறிஞர்கள், ஆலோசகர்கள், காவல்துறைப் பிரதிநிதிகள் மற்றும் சமூக சேவை வல்லுநர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி, கிடைக்கக்கூடிய ஆதரவு, வளங்கள் மற்றும் உதவிக்கான வழிகள் குறித்த மதிப்புமிக்க தகவல்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சி ஆரம்பத்தில் துர்க்கைக்கான வழிபாட்டுப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து, ரொறன்ரோவில் உள்ள இந்தியத் துணைத் தூதர் மகாவீர் சிங்வி உரையாற்றினார். அவர், “கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் பெண்கள் ஆதரவின்றி விடப்படாமல் இருப்பதை உறுதி செய்வதில் இந்திய அரசின் அர்ப்பணிப்பை ‘பெண்களுக்கான ஒற்றை நிறுத்த மையம்’ (One Stop Centre for Women) பிரதிபலிக்கிறது. உதவியைப் பெறுவதற்கான முதல் மற்றும் மிக முக்கியமான படி விழிப்புணர்வு ஆகும். இந்த முயற்சியின் மூலம், கனடாவில் உள்ள இந்தியப் பெண்கள் தங்களுக்குத் தேவைப்படும்போது சட்ட வழிகாட்டுதல், ஆலோசனை, தூதரக உதவி மற்றும் சமூக ஆதரவுக்காக எங்கு செல்வது என்பதை அறிந்துகொள்வதை உறுதிசெய்ய நாங்கள் முயல்கிறோம். இந்த வளங்களை மேலும் எளிதில் அணுகக்கூடியதாக மாற்றுவதற்கும், இந்தியப் பெண்களுக்குக் கிடைக்கும் ஆதரவு வலையமைப்பை வலுப்படுத்துவதற்கும் எங்கள் சமூகப் பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுவதில் தூதரகம் உறுதியாக உள்ளது” என்று கூறினார்.



இந்தக் கருத்தரங்கம், பெண்களுக்கான ஒற்றை நிறுத்த மையத்தை (OSCW) அறிமுகப்படுத்தியதுடன், OSCW மற்றும் அதன் கூட்டாளர் அமைப்புகள் மூலம் கிடைக்கக்கூடிய பாதுகாப்பு, சட்ட, உளவியல் மற்றும் சமூக ஆதரவு வழிமுறைகள் குறித்து இந்திய சமூகம், குறிப்பாகப் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தியது.



பீல் பிராந்திய காவல்துறையினரால் “பெண்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு” அமர்வு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தனிப்பட்ட பாதுகாப்பு, அபாயங்கள் குறித்த விழிப்புணர்வு, கிடைக்கக்கூடிய ஆதரவு சேவைகள், மற்றும் உள்ளூர் சட்ட அமலாக்கம் மற்றும் சமூக வளங்களை அணுகுவதற்கான நடைமுறை வழிகாட்டுதல்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. சட்ட மற்றும் மனநல நிபுணர்களுடன் நடைபெற்ற ஒரு கலந்துரையாடல் மற்றும் கேள்வி-பதில் அமர்வில், சட்ட உரிமைகள், சட்ட உதவி, ஆலோசனை மற்றும் உளவியல் சமூக ஆதரவு, சமூக வளங்கள் மற்றும் உதவிக்கான வழிகள் ஆகியவை விவாதிக்கப்பட்டன.

இது இந்தியப் பெண்கள் தகுந்த ஆதரவை நன்கு புரிந்துகொள்ளவும், வழிநடத்தவும் மற்றும் அணுகவும் வலுவூட்டியது. இந்த நிகழ்வில், சர்வதேச மாணவர்கள் எதிர்கொள்ளும் பாலியல் கடத்தல் அபாயங்களை எடுத்துக்காட்டும் ஒரு விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றது.

இது எச்சரிக்கை அறிகுறிகளை அடையாளம் காண்பதன் முக்கியத்துவத்தையும், OSCW மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து சரியான நேரத்தில் ஆதரவைப் பெறுவதன் அவசியத்தையும் வலியுறுத்தியது. இந்நிகழ்வு, பங்கேற்றவர்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் அனைவருக்கும் பாராட்டு தெரிவித்து நிறைவடைந்தது.



ரொறன்ரோவில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம், அரசாங்க நிறுவனங்கள், தொழில்முறை சேவை வழங்குநர்கள் மற்றும் சமூக அமைப்புகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம், இந்தியப் பெண்களுக்கு வலுவூட்டுவதிலும், கனடாவில் உள்ள பரந்த இந்தியப் புலம்பெயர்ந்தோருக்கு ஆதரவளிப்பதிலும் உறுதியாக உள்ளது. இதன் மூலம் விழிப்புணர்வை மேம்படுத்தவும், தகுந்த உதவி மற்றும் ஆதரவை சரியான நேரத்தில் அணுகுவதை எளிதாக்கவும் முடிகிறது.

பெண்களுக்கான ஒன் ஸ்டாப் மையம் (OSCW), ரொறன்ரோவில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திலிருந்து செயல்படுகிறது. இதன் மைய நிர்வாகி, +1 (437) 552-3309 என்ற உதவி எண் மற்றும் osc.toronto@mea.gov.in என்ற மின்னஞ்சல் வழியாக 247 மணி நேரமும் தொடர்பில் இருப்பார் எனவும் அங்கு அறியத்தரப்பட்டது.

Toronto வாக்காளர்களுக்கு எச்சரிக்கை வாக்குச் சீட்டில் ஒரே பெயரில் இரண்டு வேட்பாளர்கள்?



Totonto வில் நடைபெற்று வரும் மேயர் இருவரின் இயற்பெயரும் 'Chow' என ஒரே தேர்தலுக்கான முன் கூட்டிய வாக்குப்பதிவின் மாதிரியாக இருப்பதாலும், பெயர் சிறிய போது, வாக்குச் சீட்டில் எழுந்த எதிர்பாராத குழப்பம் காரணமாக தற்போதைய மேயர் Olivia Chow தனது வாக்காளர்களுக்கு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

Totonto மேயர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் அகரவரிசையில் அமைக்கப்பட்ட தொகுப்பில், தற்போதைய மேயர் Olivia Chow மற்றும் மற்றொரு சுயேச்சை வேட்பாளரான Braeden Chow ஆகிய இருவரின் பெயர்களும் அருகருகே இடம்பெற்றுள்ளன.

வாக்குச் சீட்டில் Braeden Chow எண் 8-லும், மேயர் Olivia Chow எண் 9-லும் வரிசைப படுத்தப்பட்டுள்ளனர்.

எழுத்துக்களில் குறிக்கப்பட்டிருப்பதாலும், அவசரத்தில் வாக்களிக்கும் பொதுமக்கள் தவறுதலாக Braeden Chow விற்கு வாக்களிக்க வாய்ப்புள்ளதாக அச்சம் ஏற்பட்டுள்ளது.

சமூக வலைத்தளத்தில் Olivia Chow வின் விழிப்புணர்வுப் பிரச்சாரம்:

வாக்காளர்களிடையே ஏற்பட்டுள்ள இந்த குழப்பத்தைத் தவிர்க்க, மேயர் Olivia Chow தனது பிரச்சாரப் பக்கங்கள் வாயிலாக விழிப்பு ணர்வுப் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், Totonto வின் பிரபல 'சி.என் டவர்' கோபுரத்தின் அருகே "9" என்ற எண்ணைக் குறிப்பிட்டுள்ள புகைப்படத்தைப் பகிர்ந்துள்ள அவர், Totonto ராப் பாடகர் ட்ரேக்கின் பாடல் வரிகளை மேற்கோள்காட்டி:

BEHIND ME MEDIA

இருவரின் இயற்பெயரும் 'Chow' என ஒரே மாதிரியாக இருப்பதாலும், பெயர் சிறிய எழுத்துக்களில் குறிக்கப்பட்டிருப்பதாலும், அவசரத்தில் வாக்களிக்கும் பொது மக்கள் தவறுதலாக Braeden Chow விற்கு வாக்களிக்க வாய்ப்புள்ளதாக அச்சம் ஏற்பட்டுள்ளது.

"வாக்குச் சீட்டில் இரண்டு "சௌ" பெயர்கள் உள்ளன. எனது வரிசை எண் 9. இதனை உங்கள் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டாருக்குத் தெரியப்படுத்துங்கள்" என வேண்டுகோள் விடுத்துள்ளார்.



Toronto மேயர் தேர்தல் பந்தயத்திலிருந்து முன்னாள் எம்பி Chris Alexander விலகல்!



Stephen Harper கூட்டாட்சி ஆட்சியில் முன்னாள் குடிவரவுத்துறை அமைச்சராகப் பணியாற்றிய முன்னாள் கன்சர்வேடிவ் நாடாளுமன்ற உறுப்பினர் Chris Alexander, Totonto மேயர் தேர்தலுக்கான தனது போட்டியில் இருந்து விலகுவதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பான முக்கிய விவரங்கள்: விலகலுக்கான காரணம்: தேர்தல் கருத்துக்கணிப்புகளில் தனக்குக் குறைந்த ஆதரவே (சுமார் 9%) கிடைத்துள்ளதாகவும், வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாக இருப்பதால் போட்டியில் இருந்து விலகுவதாகவும் அவர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

வேட்பாளர்கள் நிலவரம்: Chris Alexander ரின் விலகலைத் தொடர்ந்து, Toronto மேயர் தேர்தலில் தற்போது 52 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். தற்போதைய மேயர் Olivia Chow கருத்துக்கணிப்புகளில் முன்னணியில் உள்ளார்.

அரசியல் ஆதரவு: தான் போட்டியிலிருந்து விலகினாலும், வேறு எந்த வேட்பாளருக்கும் தனது ஆதரவை அளிக்கப்போவதில்லை என்றும், வாக்காளர்கள் திட்டங்களைச் சரிபார்த்துத் தகுதியான வேட்பாளரைத் தேர்வு செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்

மிசிசாகா மேயர் வேட்பாளரின் ஆதரவாளருக்கு மிரட்டல்!

கனடாவின் மிசிசாகா மேயர் தேர்தலில் போட்டியிடும் ஆல்வின் தேஜோ என்பவரின் பிரச்சாரப் பணிக்காகத் தேர்தல் விளம்பரப் பலகையைப் பொருத்திக் கொண்டிருந்த தன்னார்வலர் ஒருவரை நபர் ஒருவர் கத்தியைக் காட்டி மிரட்டிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவத்தின் முக்கிய விவரங்கள்: கடந்த திங்கட்கிழமை இரவு 7:30 மணியளவில் மிசிசாகாவின் டிரஸ்காட் டிரைவ் மற்றும் சவுத்டவுன் வீதி சந்திப்புப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தேர்தல் பலகையைப் பொருத்தியபோது வந்த அடையாளம் தெரியாத நபர் கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளார். ஆயினும், சுதாகரித்துக் கொண்ட தன்னார்வலர் அந்த நபரை ஆயுதமற்றவராக்கினார். இச்சம்பவத்தில் தன்னார்வலருக்குச் சிறிய அளவிலான காயங்கள் ஏற்பட்டுள்ளன.

கைது மற்றும் வழக்குப் பதிவு:

இச்சம்பவத்தில் தொடர்புடைய 60 வயது நிரம்பிய சந்தேக நபரைக் கைது செய்த பீல் பிராந்திய பொலிஸார், அவர் மீது ஆயுதத்தைக் கொண்டு தாக்குதல் நடத்தியதாக வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகும் நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இத்தாக்குதல் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மேயர் வேட்பாளர் ஆல்வின் தேஜோ, "அரசியலில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் ஆனால் நமது ஜனநாயகத்தில் பங்கேற்பதற்காகவோ அல்லது நகரத்தை மேம்படுத்த உழைப்பதற்காகவோ எவரும் வன்முறையை எதிர்கொள்ளக் கூடாது" எனக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மிசிசாகா மாநகரசபை மேயர் தேர்தலுக்கான வாக்களிப்பு எதிர்வரும் அக்டோபர் 26, 2026 அன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Majestic Asian உணவுத் திருவிழா!

Scarborough - வில் கடந்த 10, 11 மற்றும் 12ஆம் திகதிகளில் Majestic Asian Food Festival வெகு சிறப்பாக நடைபெற்றது.

வெவ்வேறு நாடுகளதும் பல்சுவை உணவு விற்பனையாளர்கள், நேரடி கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் அனைத்து வயதினரையும் மகிழ்விக்கும் பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என தொடர் கேளிக்கைகளும் கொண்டாட்டங்களுமாக நடைபெற்ற மேற்படி நிகழ்வின் சிறுதொகுப்பைப் படங்களில் காணலாம்.

















































நச்சுக்கள், அபின்கள் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளைச் சட்டத்தின் இரண்டு திருத்தச் சட்டமூலங்களையும் சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்ற முடியும் என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக பிரதிச் சபாநாயகர் ரிஸ்வி சாலி பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றத் தீர்மானம் அறிவிப்பு!

உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை பாராளுமன்றத்தில் அறிவித்த பிரதி சபாநாயகர், அரசியலமைப்பின் 121 (1) உறுப்புரையின் கீழ் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த 2026 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க நச்சுக்கள், அபின்கள் மற்றும் ஆபத்தான மருந்துகள் (திருத்த) சட்டமூலம் (LDO 8/2026) மற்றும் 2026 ஆம் ஆண்டின் 80 ஆம் இலக்க நச்சுக்கள், அபின்கள் மற்றும் ஆபத்தான மருந்துகள் (திருத்த) சட்டமூலம் (LDO 11/2026) ஆகியவற்றை உயர் நீதிமன்றம் பரிசீலித்ததாகத் தெரிவித்தார்.

இதில் 2026 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்கச் சட்டமூலம், குழு நிலையின் போது குறிப்பிட்ட சில திருத்தங்களை மேற்கொள்வதற்கு உட்பட்டு, சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்றப்படலாம் என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இந்தத் திருத்தங்களில், முன்மொழியப்பட்ட பிரிவு 77A(5) இல் மாற்றங்களை மேற்கொள்வதுடன், சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலையாதல் மற்றும் தொடர்புடைய அறிக்கைகள் சந்தேகநபரிடம் அல்லது அவரது சட்டத்தரணியிடம் கையளிக்கப்படும் திகதி தொடர்பான சொற்களைச் சேர்ப்பதும் அடங்கும். உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்மானங்களை அண்றைய தினத்தின் உத்தியோகபூர்வ பாராளுமன்ற நடவடிக்கைகளின் அறிக்கையில் உள்ளடக்குமாறும் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி மேலும் பணிப்புரை விடுத்தார்.

BEHIND ME MEDIA
2026 October, 13
219, Kandy Road Jaffna.
Tel : +94762390159,
+14376883493
Email:
info@behindmemedia.com,
website:
www.behindmenews.org

தமிழ் நூல்கள் முடக்கப்பட்டமை பாரிய அடிப்படை உரிமை மீறல் - மனித உரிமைகள் ஆணைக்குழு



இலங்கை சுங்கத்தால் தமிழ் நூல்கள் தனது சட்ட பகுப்பாய்வில் மனித உரிமைகள் முடக்கப்பட்டமை அடிப்படை உரிமைகளை மீறியதாக குற்றஞ்சாட்டியுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த எழுத்தாளர் பி.பிரதீபனின் தமிழ் நூல்களை இலங்கை சுங்கத் திணைக்களம் தொடர்ந்து தடுத்து வைத்துள் ளமையானது, அவரது அடிப்படை மனித உரிமைகளை நேரடியாக மீறும் செயலாகும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்தியாவின் சென்னையில் அச்சிடப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட 288 புத்தகங்கள் அடங்கிய குறித்த தொகுதி, "தேசிய நல்லிணக் கத்திற்குப் பாதகத்தை ஏற்படுத்தக்கூடும்" என்ற காரணத்தைக் காட்டி சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட தொகுதியில் 'இப்போதும் இங்கே இரண்டு தேசங்கள்தான்', 'எழுத்தால் நான் யுத்தம் செய்கிறேன்', 'பயங்கரவாதி' மற்றும் 'சயனைட்' ஆகிய நான்கு தலைப்பிலான புத்தகங்கள் அடங்கியிருந்தன. இதில் 'பயங்கரவாதி' மற்றும் 'சயனைட்' ஆகிய இரு நூல்களும் புனைகதைகள் (புதினங்கள்) என இலங்கை கலைக் பேரவை வகைப்படுத்தியதை அடுத்து விடுவிக்கப்பட்டன. இருப்பினும், 'இப்போதும் இங்கே இரண்டு தேசங்கள்தான்' நூலின் 75 பிரதிகளையும், 'எழுத்தால் நான் யுத்தம் செய்கிறேன்' நூலின் 147 பிரதிகளையும் சுங்கத் திணைக்களம் தொடர்ந்து தடுத்து வைத்திருந்தது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி. தெஹிதெனிய தலைமையிலான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணையின் போது இலங்கை சுங்கத் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு, மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு உள்ளிட்ட பல அரசு நிறுவனங்கள் தெளிவான அதிகார வரம்பை நிறுவத் தவறி, பொறுப்புகளை ஒன்றின் மீது ஒன்று சாட்டி மாற்றி மாற்றித் தப்பித்து வந்தமை அம்பலமானது.

அரசு நிறுவனங்களுக்குள் தமிழ் மொழி ஆளுமை இல்லாமை மற்றும் ஒரு புத்தகத்தின் அட்டையில் சித்தரிக்கப்பட்டிருந்த பிரிக்கப்பட்ட இலங்கை வரைபடம் குறித்த நிறுவனங்களின் அச்சமுமே, இந்த ஆரம்பக்கட்டப் பறிமுதல் நடவடிக்கைக்கு முக்கியக் காரணம் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆணைக்குழு பின்வருமாறு தெளிவுபடுத்தி யுள்ளது:

அரசியலமைப்பின் 14(1)(ய) பிரிவானது பேச்சுரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்தை உறுதியளிக்கிறது இது அரசுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ அதிர்ச்சியளிக்கும், வழக்கத்திற்கு மாறான அல்லது சர்ச்சைக்குரிய கருத்துகளையும் வெளிப்படையாகப் பாதுகாக்கிறது.

நிறுவப்பட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்புகளை மேற்கோள்காட்டிய ஆணைக்குழு, தண்டனைச் சட்டக்கோவையின் 120ஆம் பிரிவின் கீழ் தனிப்பட்ட குற்ற உணர்வு, நோக்கம் மற்றும் காரணி ஆகியவற்றின் அவசியமான சட்ட வரம்புகளைப் பிரதிவாதிகள் நிரூபிக்கத் தவறிவிட்டனர் எனச் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், இலங்கையில் 2002ஆம் ஆண்டிலேயே குற்றவியல் அவதூறுச் சட்டம் நீக்கப்பட்டு விட்டதால், அரச அதிகாரிகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ எதிராக அவதூறு பரப்பும் கருத்துகள் இருப்பதாகக் கூறி புத்தகங்களைக் கைப்பற்றுவதற்கு சுங்கத் திணைக்களத்திற்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்றும் ஆணைக்குழு தெளிவுபடுத்தியுள்ளது.

கருத்துச் சுதந்திரத்திற்கு அப்பால், இவ்வாறான தன்னிச்சையான நீண்டகாலத் தடுப்புக் காவலாது:

அரசியலமைப்பின் 12(2) பிரிவின் கீழ் மொழி அடிப்படையிலான சட்டவிரோத பாகுபாடு ஆகம்,

12(1) பிரிவின் கீழ் சட்டத்தின் முன் சமத்துவத்தை மீறுவதாகும்,

14(1)(க) பிரிவின் கீழ் எழுத்தாளரின் கலாசாரத்தை மேம்படுத்துவதற்கும், தாய்மொழியைப் பயன்படுத்து வதற்குமான உரிமையை மீறுவதாகும் என மனித உரிமைகள் ஆணைக்குழு முடிவெடுத்துள்ளது.

இதன் விளைவாக, தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு நூல்களின் அனைத்துப் பிரதிகளையும் உடனடியாக விடுவிக்குமாறும், இது தொடர்பான முறையான இணக்கப்பாட்டு அறிக்கையை 2026 டிசம்பர் 02ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

இவ்வழக்கில் முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணிகளான நடராஜா காண்டீபன், கலாநிதி விராஞ்சன் ஹேரத் மற்றும் எச். தமிழவள் காண்டீபன் ஆகியோர் ஆஜராகி யிருந்தனர்.

யாழ் மாவட்டத்தில் புதிய மதுபானசாலைகளுக்கு வழங்கப்பட்ட அனுமதியும் வலுக்கும் எதிர்ப்புகளும்!

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக் காலமாக புதிதாக நான்கு மதுபானசாலைகளை அமைப்பதற்கு எதிராகப் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்கள் மற்றும் சமூக அமைப்புகள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகள், பிரதேச செயலகங்கள், சந்தைகள் மற்றும் கடைத்தொகுதிகளுக்கு மிக அருகில் மதுபானசாலைகள் அமைக்கப் படுவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்படும் என சகல வயதுத் தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. அது மாத்திரமன்றி யாழ். மாவட்டத்தில் புதிதாக 4 மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டமை குறித்து ஜனாதிபதி உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைப்புகள் கோரிக்கை விடுத்துக் கொண்டு வருவதும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

புதிய மதுபானசாலைகளால் சமூகப் பிரச்சினைகள், குடும்ப வன்முறைகள் அதிகரிப்பதுடன், மாணவர்களின் கல்வியும் எதிர்காலமும் சீரழி யும் என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்திற்குட்பட்ட சங்கானை பகுதியில் புதிதாக மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தப்பட்டது. அதே போல இவ்வாரம் நெல்லியடிப் பகுதியிலும் புதிய மதுபானசாலை அமைப்பதற்கு எதிராகப் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உள்ளூராட்சிப் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புகள், வட பிரதேச நல்லொழுக்க சமூகத்தினர், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் என எமது சமூகத்தின் முக்கியஸ்தர்கள் பலரும் இதில் பெருமளவில் கலந்து கொண்டனர்.

குறித்த மதுபானசாலை களுக்கான அனுமதிகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் மேலும் அனுமதிகள் வழங்கப்பட்ட நடைமுறையில் சட்டமா அதிபர் திணைக்களத் தின் செயற்பாடுகளில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தால் அவை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பொறுப்புக்கூறல் உறுதிப் படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப் பட்டு வருகின்றது.

சட்டத்திற்கு உட்பட்ட உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து, யாழ்ப்பாண மக்களின் நலன் களையும் சமூகப் பாதுகாப்பை யும் உறுதிப்படுத்து மாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சட்டத்திற்கு உட்பட்ட உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து, யாழ்ப்பாண மக்களின் நலன்களையும் சமூகப் பாதுகாப்பை யும் உறுதிப்படுத்துமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மதுபானசாலைகள் அமையும் போது அந்தப் பகுதிகளில் மதுப்பிரியர்களின் நடமாட்டம் அதிகரிப்பதோடு, பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் செயல்களும் அதிகரிக்கின்றன. குடியிருப்புப் பகுதிகள், பள்ளிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் மதுக்கடைகள் அமையும் போது, அந்த வழியே செல்லும் பெண்கள் மற்றும் பள்ளிச் சிறுமிகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறார்கள்.

நடுத்தர மற்றும் வாழ்வாதாரம் கீழ் மட்டத்தில் உள்ள மக்கள் வாழும் பகுதிகளில் மதுக்கடைகள் இருக்கும் போது, பலர் தங்களின் அன்றாட வருமானத்தை மதுவுக்காகவே செலவழித்து, குடும்பங்களை வறுமையில் தள்ளுகின்றனர். மதுவினால் ஏற்படும் நோய்கள், சாலை விபத்துகள் மற்றும் மரணங்கள் அதிகரித்து, சமூகப் பேரழிவை ஏற்படுத்துகின்றன.



Brad bradford திட்டத்துக்கு Olivia chow மற்றும் போக்குவரத்து ஆர்வலர்கள் எதிர்ப்பு?

ஸ்கார்பரோவின் 12 கி.மீ பிரத்யேக பேருந்து தடங்களை நீக்க பிராட் பிராட்.்.போர்ட் திட்டம்: ஒலிவியா சௌ மற்றும் போக்குவரத்து ஆர்வலர்கள் எதிர்ப்பு

ரொறன்ரோ மாநகரசபை மேயர் தேர்தலில் போட்டியிடும் பிராட் பிராட்.்.போர்ட், நகரத்தில் நிலவும் கடுமையான போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில் ஸ்கார்பரோ (Scarborough) பகுதியில் அமைந்துள்ள 12 கிலோமீட்டர் நீளமான சிவப்பு நிறப் பிரத்யேக பேருந்து தடங்களை (Red Bus Lanes) அகற்றுவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

பிராட்.்.போர்ட்டின் திட்ட விவரங்கள்:

பேருந்து தடங்கள் மாற்றம்: கிங்ஸ்டன் வீதி (Kingston Road), மோர்னிங்சைட் அவென்யூ (Morningside Avenue), கென்னடி வீதி (Kennedy Road) மற்றும் மிட்லேண்ட் வீதி (Midland Road) ஆகிய பகுதிகளில் உள்ள சிவப்பு பேருந்து தடங்கள் நீக்கப்பட்டு பொதுப் போக்குவரத்து வாகனங்களின் பயன்பாட்டிற்கு மாற்றப்படும்.

HOV தடங்களாக மாற்றம்: கென்னடி மற்றும் மிட்லேண்ட் வீதிகளில் உள்ள தடங்கள் உடனடியாகப் பொதுப் போக்குவரத்திற்குத் திறந்துவிடப்படும். அதேவேளை, கிங்ஸ்டன் மற்றும் மோர்னிங்சைட் வீதிகளில் உள்ள தடங்கள், குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்துச் செல்லும் பெற்றோர்களுக்கு



உதவும் வகையில் HOV தடங்களாக (அதிக பயணிகள் பயணிக்கும் வாகனங்களுக்கான தடம்) மாற்றப்படும்.

எக்லிண்டன் அவென்யூ விலக்கு: அதிக அளவிலான பேருந்துகள் பயணிக்கும் எக்லிண்டன் அவென்யூ ஈஸ்ட் பகுதியில் உள்ள பேருந்து தடங்கள் மாற்றமின்றித் தொடரும்.

LRT திட்டம் குறித்த விமர்சனம்: $4.65 பில்லியன் செலவிலான எக்லிண்டன் ஈஸ்ட் LRT (Eglinton East LRT) இரயில் திட்டம் தொடங்கும் வரை மட்டுமே இந்த பேருந்து தடங்கள் தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்டதாகக் கூறிய பிராட்.்.போர்ட், ஒலிவியா சௌவின் தலைமையில் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படவோ அல்லது பணிகள் முன்னேறவோ இல்லை எனக் குற்றம் சாட்டினார்.

ஒலிவியா சௌ மற்றும் “TTCriders” அமைப்பின் எதிர்ப்பு:

பிராட்.்.போர்ட்டின் இந்த அறிவிப்பிற்கு மேயர் ஒலிவியா சௌவின் (Olivia Chow) பிரச்சாரக் குழு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. ஸ்கார்பரோ பேருந்து பாதை (Scarborough Busway) திறக்கப் பட்டதைத் தொடர்ந்து, கென்னடி மற்றும் மிட்லேண்ட் வீதிகளில் உள்ள பேருந்து தடங்களை நீக்குவதற் கான மாறுதல் திட்டத்தை (Transition plan) ஏற்கனவே சௌவின் நிர்வாகம் தயாரித்து வைத்துள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். மேலும், எக்லிண்டன் ஈஸ்ட் இலகுரக இரயில் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து $15 மில்லியன் நிதியை ஒதுக்கி யுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே, 'TTCriders' என்ற பொதுப்போக்கு வரத்து ஆதரவாளர் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆண்ட்ரூ புல்சி.்.பர், “வெற்றிகரமாக இயங்கிவரும் பேருந்து தடங்களை அகற்றுவது தினசரி பயணிக்கும் ஆயிரக்கணக்கான ஸ்கார்பரோ மக்களின் பயணத்தை வேண்டுமென்றே தாமதப் படுத்துவதாகும் இத்தடங்களை அழிப்பதற்குப் பதிலாக விரிவாக்கவே நடவடிக்கை எடுக்க வேண்டும்” என வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, தமது வீடமைப்புத் திட்டத்தின் மூலம் ஜி.டி.ஏ (GTA) பகுதி முழுவதும் சுமார் 40,000 கட்டுமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக ஒலிவியா சௌ ஸ்கார்பரோவில் நடைபெற்ற மற்றொரு நிகழ்வில் சுட்டிக்காட்டினார்.



நவநீதம்பிள்ளைக்கு நோபல் பரிசு: போர்க்குற்றங்கள் இனப்படுகொலைகளுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்தார்

2026ம் ஆண்டிற்கான சமாதானத்திற்கான நோபல் பரிசு மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டத்தினை பாதுகாப்பதற்காக தளர்வின்றி போராடியமைக்காக ஐக்கியநாடுகள் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளைக்கு வழங்கப்படுவதாக பரிசுக்கு அறிவித்துள்ளது.

நவநீதம் பிள்ளை ஒரு தமிழ் வழிதோன்றல் என்பது குறிப்பிடத்தக்கது.

நோபல் பரிசுகுழு இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது

விதிவிலக்கான துணிச்சலுடனும் நேர்மையுடனும் , மிகவும் விரிவான உலகளாவிய சட்ட அமைப்பை ஏற்படுத்திக்கொடுத்தமைக்காகவும் , போர்க்குற்றங்கள்,மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள்,மற்றும் இனப்படுகொலைகள் ஆகியவற்றுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக முக்கிய பங்காற்றியமைக்காக நவநீதம் பிள்ளைக்கு இந்த நோபல் பரிசு வழங்கப்படுகின்றது.

நிறவெறி ஆட்சிக்கு எதிராக உறுதியுடன் நின்ற நெல்சன் மண்டேலா உட்பட பல தலைவர்களுக்காக வழக்காடியது முதல் நமது காலத்தின் முக்கிய நீதிமன்றங்களில் பணியாற்றியது வரை அவரது பணிகளில் ஒரேநேர்கோடு புலப்படுகின்றது.

சர்வதே சட்ட அமைப்பு கடுமையான அழுத்தத்திற்கும் அதன் அமைப்புகள் தொடர்ச்சியாக தாக்குதலிற்கும் உள்ளாகியிருக்கும் இந்த காலகட்டத்தில் நவநீதம் பிள்ளைக்கு நோபல் பரிசு வழங்கப்படுகின்றது.

சட்டநடவடிக்கைகள் மூலம் யுததத்தையும் வன்முறைகளையும் நிறுத்தலாம் என்பதை நவநீதம் பிள்ளை நிரூபித்துள்ளார்.



அவரது சுயாதிபத்தியம் நிபுணத்துவம் தளராத உறுதி ஆகியவை சர்வதேச அளவில் எங்கள் காலத்தில் மிகவும் மதிக்கப்படும் நேசிக்கப்படும் நீதிபதிகளில் ஒருவராக அவரை மாற்றியுள்ளது என நோபல் பரிசு குழு தெரிவித்துள்ளது.

ஈரானுடனான போரில் 81 போர் விமானம், 45 ட்ரோன்கள் வீழ்த்தப்பட்டதால் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட இழப்பு



ஈரானில் இந்த ஆண்டின் தொடக்கத்தில் போர் தொடங்கியதில் இருந்து அமெரிக்காவின் 81 ராணுவ விமானங்கள் மற்றும் 45 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. இதன் மொத்த மதிப்பு சுமார் ரூ.32 ஆயிரம் கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, அமெரிக்க காங்கிரஸின் ஆய்வு சேவை (சிஆர்எஸ்) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஈரானுக்கு எதிராக அமெரிக்கா தொடர்ந்து போரில் ஈடுபட்டு வருகிறது.

இதனால், இரு நாடுகளுக்கும் இழப்பு ஏற்படுகிறது. ஈரானில் போர் தொடங்கியதில் இருந்து அமெரிக்காவின் 81 ராணுவ விமானங்கள் மற்றும் 45 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. அமெரிக்காவின் மேம்பட்ட போர் விமானங்களான எப்-35ஏ லைட்னிங் 2, எப்-15 மற்றும் எம்க்யூ-9 ரீப்பர் ட்ரோன்கள் உள்ளிட்டவை இந்த இழப்பில் அடங்கும்.

ஒவ்வொரு எப்-15 போர் விமானத்தின் மதிப்பு 30 மில்லியன் டாலருக்கும் அதிகமாகும். எம்க்யூ-9 ரீப்பர் ட்ரோன்களின் மதிப்பு தலா 30 முதல் 50 மில்லியன் டாலர் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நவீன 5-ம் தலைமுறை போர் விமானங்களில் ஒன்றான எப்-35ஏ-யின் மதிப்பு 92 மில்லியன் டாலருக்கும் அதிகமாகும்.

மேலும், அமெரிக்கப் படைகள் 12 எப்-15இ விமானங்கள், ஒரு எப்-35ஏ லைட்னிங் 2 போர் விமானம், 2 ஏ-10 தண்டர்போல்ட் தரைத்தாக்குதல் விமானங்கள் மற்றும் 7 கேசி - 135 ஸ்ட்ராடோடேங்கர் வான்வழி எரிபொருள் நிரப்பும் விமானங்களை இழந்துள்ளன.



போரின்போது அமெரிக்கா ஒரு ஏஎச்-64 அப்பாச்சி தாக்குதல் ஹெலிகாப்டர், 4 ஏச்-6 லிட்டில் பேர்ட் இலகுரக தாக்குதல் ஹெலிகாப்டர்கள் மற்றும் ஒரு எம்எச்-60 சீஹாக் கடற்படை ஹெலிகாப்டரையும் இழந்துள்ளது. மொத்தத்தில், இப்போரால் அமெரிக்காவுக்கு 3.3 பில்லியன் டாலர் (ரூ.32 ஆயிரம் கோடி) இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஈரானுக்கு எதிரான போரில் அமெரிக்க ராணுவம் பயன்படுத்திய ஆயுதங்களுக்கான செலவும் ஒரே மாதத்தில் 6 பில்லியன் டாலருக்கும் மேல் அதிகரித்துள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த அறிக்கை குறித்து வெள்ளை மாளிகையும், அமெரிக்க பாதுகாப்புத் துறையும் இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

ஃபிளை துபாய் விமானத்தில் '45 நிமிடம் போராடி மச்சாரின் ரத்தக்கசிவை கட்டுப்படுத்தினேன்'

.ஃபிளை துபாய் விமானத்தில் பயணம் செய்த ஜார்ஜியாவைச் சேர்ந்த பல் மருத்துவர் ஷோட்டா முசாயேவ் சுமார் 45 நிமிடங்கள் இந்திய பைலட் ஸ்மித் மச்சாருக்கு சிகிச்சை அளித்து உயிரை காப்பாற்றினார்.

இதுகுறித்து ஷோட்டா முசாயேவ் தனியார் சேனலுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: இந்திய பைலட் மச்சாருக்கு தலையிலும் இடது கையிலும் கடுமையான ரத்தக்கசிவு இருந்தது. காயங்களின் மீது அழுத்தம் கொடுத்து ரத்தக்கசிவை கட்டுப்படுத்த முதலில் டி-ஷர்ட்களை பயன்படுத்தினேன். ஒவ்வொரு முறையும் டி-ஷர்ட்டை அகற்றி காயத்தைப் பார்த்தபோது மீண்டும் அதிகமாக ரத்தம் வெளியேறியது.

எனவே மெதுவாக அழுத்தம் கொடுத்து, காயத்தில் ஐஸ் கட்டிகள் வைத்து கவனித்தேன். மச்சார் மயக்கமடையாமல் இருக்க அவருடன் தொடர்ந்து பேசினேன். அவர் என்னிடம் 'தயவுசெய்து எனக்கு உதவுங்கள். நான் இங்கே இறக்க விரும்பவில்லை' என்று கூறினார். ஒரு கட்டத்தில் அவரது நாடித்துடிப்பு மிகவும் குறைந்தது. அதனால் அவரது கால்களை உயர்த்தி வைத்தேன். அதன் பிறகு நாடித்துடிப்பு மீண்டும் சீரானது.

மேலும் கவலைக்குரிய ஒரு அறிகுறியாக மச்சாரின் உதடுகள் நீல நிறமாக மாறின. அதைப் பார்த்ததும், விமானப் பணியாளரிடம் 'நாம் உடனடியாக தரையிறங்க வேண்டும்' என்று சொன்னேன். மச்சார் வலி நிவாரண மாத்திரை கேட்டார். அதற்கு நான் ஒப்புக்கொள்ளவில்லை.





சுமார் 45 நிமிடங்கள் மச்சாரின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணித்தேன். விமானம் தரையிறங்கிய பிறகு மச்சாரை அங்கிருந்த மருத்துவர்களிடம் ஒப்படைத்தேன். 'குட் லக், என் நண்பரே. எல்லாம் நன்றாக நடக்கும்' என்று நம்பிக்கை வார்த்தைகளை கூறி அவரை அனுப்பி வைத்தேன். இவ்வாறு ஷோட்டா முசாயேவ் கூறினார்.

---

89 ஆண்டுகளுக்கு முன்பு வரையப்பட்ட ஓவியத்தில் இருப்பது ஸ்மார்ட்போனா?



89 ஆண்டுகளுக்கு முன்பு வரையப்பட்ட புகழ்பெற்ற ஓவியம் ஒன்றில், நபர் ஒருவர் ஸ்மார்ட்போன் போன்ற ஒரு பொருளைக் கையில் வைத்திருப்பது போன்ற புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இத்தாலிய-அமெரிக்க ஓவியரான உம்பர்ட்டோ ரொமானோ (Umberto Romano) என்பவரால் 1937-ஆம் ஆண்டு வரையப்பட்ட 'மிஸ்டர் பின்சன் அண்ட் தி செட்லிங் ஆ.ப் ஸ்பிரிங்.பீல்ட்" (Mr Pynchon and the Settling of Springfield) என்ற ம்யூரல் பாணி ஓவியம் தான் இந்த விவாதத்துக்கு காரணம்.

17-ம் நூற்றாண்டில் அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் பகுதியில் பூர்வக்குடி மக்களுக்கும், ஆங்கிலேய குடியேறிகளுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பை இந்த ஓவியம் சித்தரிக்கிறது.

இந்த ஓவியத்தின் நடுவே இருக்கும் பழங்குடியின நபர் ஒருவர், தனது கையில் கருப்பு நிறத்தில், செவ்வக வடிவிலான ஒரு பொருளைப் பிடித்துக்கொண்டு, நாம் இன்று ஸ்மார்ட்போனைப் பார்ப்பது போன்றே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

இந்த ஓவியத்தைப் பகிர்ந்த பல சமூக வலைதள பயனர்கள், "1937-ல் வரையப்பட்ட ஓவியத்தில் ஐபோன் உள்ளதா? இது டைம் டிராவல் செய்ததற்கான ஆதாரமா?" என்று வியப்புடன் கேள்விகளை எழுப்பி வந்தனர்.

இருப்பினும், இந்த ஓவியத்தில் இருப்பது எந்தவொரு நவீனத் தொழில்நுட்பச் சாதனமும் அல்ல என்று கூறப்படுகிறது. 17 - ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய குடியேறிகள், அமெரிக்க பழங்குடியின மக்களுடன் வர்த்தகம் செய்த போது வழங்கிய சிறிய முகம் பார்க்கும் கண்ணாடி தான் அது என்று தகவல் வெளியாகியுள்ளது.

அப்பொருளை பூர்வக்குடி நபர் ஒருவர் ஆச்சரியத்துடன் உற்று நோக்கும் பாவனை, ஸ்மார்ட்போனைப் பயன்படுத்துவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. சிலர் அது சிறிய அளவிலான மத புத்தகமாகவோ அல்லது ஏதேனும் ஆயுதமாகவோ இருக்கலாம் என்றும் சிலர் கூறுகின்றனர்.

1930-களில் அமெரிக்க பொருளாதார மந்தநிலையின் போது, கலைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் அரசின் சிறப்புத் திட்டத்தின் கீழ் ஸ்பிரிங்.பீல்ட் அஞ்சலகத்தின் சுவர்களுக்காக இந்த ஓவியம் உருவாக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



BGIA - அமைப்பினால் Behind Me Media வுக்கு விருது!



Business Global International award அமைப்பு 'Excellence Award' என்ற நிகழ்வை யாழ்ப்பாணம் திவ்ய மஹால் மண்டபத்தில் கடந்தவாரம் நடாத்தியிருந்தது.

BGIA என்பது தொழில், சமூக சேவை, தலைமைத்துவம், கலை, ஊடகம், கல்வி, சுகாதாரம், சுற்றுலா, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களை அடையாளம் கண்டு கௌரவிக்கும் ஒரு விருது வழங்கும் அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

அந்தவகையில் மேற்படி நிகழ்வில் Behind Me Media வுக்கு Best Media Personalty Award வழங்கப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எமது சமூகத்தில் பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்டு வருகின்ற தொழில் முனைவோர், சமூக சேவையாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுடைய திறமை, உழைப்பு மற்றும் சமூகப் பங்களிப்புகளை பாராட்டி, அவர்களுக்கு சர்வதேச தரத்திலான ஒரு கௌரவத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் Excellence Awards நிகழ்வை நடத்தும் எண்ணம் உருவானது





எனவும் Business Global International award -வின் நோக்கமும் சிறந்த சாதனையாளர்களை அடையாளம் கண்டு, அவர்களை கௌரவிப்பதுடன், மேலும் பலரை சாதனைப் பாதையில் பயணிக்க ஊக்குவிப்பது எனவும் Business Global International award அமைப்பு அறிவித்திருக்கின்றது.







இலங்கையில் மலையக மக்களை இழிவுபடுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை - ஜீவன் தொண்டமான்

மலையக மக்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடுபவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஊழல் எதிர்ப்புத் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவிக்கையில், "அண்மையில் வடக்கு - கிழக்கில் திலீபனின் சிலை தொடர்பான பிரச்சினை எழுந்தபோது, அனுராதபுரத்தில் உள்ள தேசிய பாடசாலையொன்றின் ஆசிரியர் ஒருவர் சமூக வலைத்தளங்களில் பதிவொன்றை வெளியிட்டிருந்தார். அதில், "இந்த நாட்டுக்குக் கழிவறைகளைக் கழுவவும் தேயிலை பறிக்கவும் வந்த மக்கள் இந்தப் பிரச்சினை பற்றிப் பேசக் கூடாது" என்று தெரிவித்திருந்தார்.

குறித்த ஆசிரியரின் அறியாமை தொடர்பில் வெட்கப்பட வேண்டும். அவர் இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்தி ஒரு சமூகத்தைக் கேவலப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் நாங்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்து சட்ட நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த விடயத்தில் கட்டாயம் நாங்கள் பாடம் கற்பித்துக் கொடுக்க வேண்டும். எந்த நபரையும் அவரின் பிறப்பு, இனம் மற்றும் வேலை ஆகியவற்றின் அடிப்படையில் இழிவுபடுத்த இடமளிக்கக் கூடாது. இதேவேளை, இந்தப் பிரச்சினை முடிவதற்குள், லவர்சிலீப் தோட்டத்தில் உதவி முகாமையாளர் அங்குள்ள குடும்பமொன்றைப் பார்த்து "கள்ளத்தோனி" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார். இந்த வார்த்தை எப்படி வந்தது என்று பார்க்க வேண்டும். இந்த நாடு சுதந்திரமடையும் வரை நாங்கள் தொழிலாளர்களாகவே அழைத்து வரப்பட்டோம். தமிழ்நாடு, கேரளா போன்ற பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்டனர். அப்போது காடுகளை நாடாக்கி, மலைகளுக்குள் பாதைகளை உருவாக்கி, தேயிலை செடிகளையும் நட்டோம். இவற்றைச் செய்த எங்களுக்குக் கள்ளத்தோனி என்ற பெயர் பயன்படுத்தப்படுகிறது. வரலாற்றை எடுத்துப் பார்த்தால் கள்ளத்தோனியில் யார் வந்தது என்று அனைவருக்கும் தெரியும்.

மலையகத் தமிழர்கள் தேயிலை பறிக்கின்றனர் அது 7, 8 சதவீதமாகவே அமையும். அந்த மக்கள் செய்யும் தொழில் முழு சமூகத்திற்கும் அடையாளமாக இருக்கின்றது. அவர்களுக்குக் காணி உரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஏதாவது பிரச்சினைகள் வரும்போது "கழிவறை கழுவ வந்தவர்கள்", "தேயிலை பறிக்க வந்தவர்கள்", "கள்ளத்தோனிகள்" என்றெல்லாம் கூறுகிறார்கள். எவராக இருந்தாலும் மதம், கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு அசிங்கப்படுத்துவது தவறாகும்.

நாங்கள் எங்கிருந்து வந்துள்ளோம் என்று கூறுவதற்கு நீங்கள் யார்? உங்களுக்குள்ள அதே உரிமையே எங்களுக்கும் உள்ளது. தேயிலை பறிப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதையைத் தேயிலைத் தண்ணீரைக் குடிப்பவர்களுக்கு வழங்கினால் நாடு ஏற்றுக்கொள்ளுமா?



ஒரு காலத்தில் சுற்றுலாத்துறையும் கிடையாது, அந்நியச் செலாவணியும் கிடையாது தேயிலை மட்டுமே இந்த நாட்டைக் காப்பாற்றியது. இப்படியான மக்களுக்குக் கிடைக்கும் மரியாதை "கள்ளத்தோனி" என்பதா? இது மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினையாகும். ஒரு அடிப்படை மரியாதை எங்களுக்குக் கிடைக்காவிட்டால் எப்படி? நாங்கள் நூற்றாண்டு காலமாக இருக்கிறோம் இலங்கை வரலாற்றில் எனது முன்னோரும் இருக்கிறார்கள். இப்படி இருக்கையில் எங்களை வந்தேறிகள் என்று கூறுவதற்கு உங்களுக்கு என்ன உரிமை உள்ளது? ஒவ்வொரு தேயிலை செடியிலும் எமது முன்னோரின் கைரேகைகள் உள்ளன.

மலையக மக்கள் நிறைய விடயங்களை விட்டுக்கொடுத்துப் பழகிவிட்டனர். நாட்டுக்கு நல்ல தலைவர் கிடைத்துவிட்டார் என்று கருதி மலையக ஆளுமையை விட்டுக்கொடுத்துள்ளனர். இந்த விடயங்களில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்றார்.



தமிழ்ச் சமூக மையத்தின் 2026 - 2027 இயக்குநர் சபை

செப்டம்பர் 26, 2026 அன்று நடைபெற்ற தமிழ்ச் சமூக மையத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தைத் தொடர்ந்து, புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 2026-2027 தமிழ்ச் சமூக மைய இயக்குநர் சபையை தமிழ்ச் சமூக மையம் அறிமுகப்படுத்தி யுள்ளது.

இது குறித்த ஊடக அறிக்கையில்,

தமிழ்ச் சமூக மையம் மற்றுமொரு முக்கியமான ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இவ்வேளையில், எமது அங்கத்துவ அமைப்புகள், தன்னார்வலர்கள், நன்கொடையாளர்கள், பங்காளர்கள் மற்றும் பரந்த தமிழ்ச் சமூகத்துடன் இணைந்து, தமிழ்ச் சமூக மையத் திட்டத்தையும் எமது பொதுவான எதிர்கால நோக்கையும் முன்னெடுத்துச் செல்ல புதிய இயக்குநர் சபை பணியாற்றவுள்ளது.

தமது அர்ப்பணிப்பு, தலைமைத்துவம் மற்றும் பங்களிப்புகளின் மூலம் தமிழ்ச் சமூக மையத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த முன்னைய இயக்குநர் சபை உறுப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2026-2027 இயக்குநர் சபையை வரவேற்று, அவர்களின் பதவிக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துவதில் எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள் எனவும் தமிழ்ச் சமூக மையம் தெரிவித்துள்ளது.





















BEHIND ME MEDIA

“முன்னாள் விமானப்படை அதிகாரி - விமானப்படை அதிகாரியின் விதவை“ பொண்ணொருத்தியின் சட்டப் போராட்டம்!

இது ஒரு பெண் இந்திய ராணுவத்தில் சேர்ந்த சாதாரண செய்தி அல்ல. முன்பு 10 ஆண்டுகள் இந்திய விமானப்படையில் பணியாற்றிய ஒரு பெண் விமானி, தன் கணவர் விமான விபத்தில் உயிரிழந்த பின்னர் ‘வீரப் பெண்மணியாக மீண்டும் விமானப் படையில் சேருவதற்காக நடத்திய நீண்ட சட்டப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி குறித்த செய்தி.

உச்சநீதிமன்றம் அண்மையில் வழங்கிய அதிரடி தீர்ப்பு, ஏற்கனவே இருந்த விதிமுறைகளில் உள்ள ஒரு இடைவெளியையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளதுடன், ஒரு வீரப் பெண்மணிக்கு நியாயம் கிடைக்க வழி செய்துள்ளது.

ஸ்குவாட்ரன் லீடர் பிரியங்கா சக்சேனாவின் வாழ்க்கை யில் நடந்த இந்தத் திருப்பம், தனிப்பட்ட துயரத்தின் கதை மட்டுமல்ல் ராணுவத்தில் பெண்களின் சேவை, விதிமுறைகளின் வரம்பு, மறுவாழ்வு கொள்கை ஆகியவற்றைப் பற்றிய முக்கியமான சட்ட விவாதமாகவும் மாறியுள்ளது.

பிரியங்கா சக்சேனா 2002 ஜனவரியில் ஹைதராபாத்தில் உள்ள விமானப்படை அகாடமியில் பயிற்சியில் சேர்ந்தார். 2003 டிசம்பர் 20 அன்று இந்திய விமானப்படையில் குறுகிய கால கமிஷண்டு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் உள்ள விமானப்படையின் 41 பிரிவில் தன் சேவையைத் துவக்கினார். இவர் தனது பணிக்காலத்தில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக சிறப்பு சான்றிதழ் பெற்றவர்.

2006 நவம்பர் 13 அன்று அவர் இந்திய விமானப்படையில் .ப்பைட்டர் பைலட் ஆக இருந்த விங் கமாண்டர் ஹர்ஷித் சின்ஹாவைத் திருமணம் செய்துகொண்டார். பிரியங்கா தனது பணியில் பத்து ஆண்டுகளை நிறைவு செய்தபோது, நிரந்தரப் பணிக்கோ அல்லது சேவை நீட்டிப்புக்கோ விண்ணப்பிக்காமல், 2013-ல் விமானப்படையை விட்டு வெளியேறினார். இந்தத் தம்பதிக்கு இரண்டு மகள்கள்.



உச்சநீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பு, ஏற்கனவே இருந்த விதிமுறைகளில் உள்ள ஒரு இடைவெளியையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளதுடன் ஒரு வீரப் பெண்மணிக்கு நியாயம் கிடைக்க வழி செய்துள்ளது!



2021 டிசம்பர் 24 அன்று ஜெய்சால்மர் விமானத் தளத்திற்கு அருகே ஒரு மிக்21 பைசன் ரக விமானம் விபத்துக்குள்ளானதில் அந்த விமானத்தில் இருந்த விங் கமாண்டர் ஹர்ஷித் சின்ஹா உயிரிழந்தார்.

தான் ஏற்கெனவே பத்து ஆண்டுகள் விமானப்படையில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர் என்பதையும், இப்போது இரண்டு குழந்தைகளின் தாயாக இருப்பதையும் கருத்தில் கொண்டு, மீண்டும் விமானப்படையில் சேர அனுமதிக்க வேண்டும் என்று அவர் கோரினார்.

“நான் ஏற்கெனவே பயிற்சி பெற்ற அதிகாரி”

இதுதான் அவரது சட்டப் போராட்டத்தின் மையக் கருத்து. பொதுவாக ராணுவ வீரர்களின் விதவை மனைவிகளுக்கு ராணுவத்தில் சில மறுவாழ்வு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. 2017 நவம்பர் கொள்கையின்படி, தகுதியுடைய ராணுவத்தினரின் விதவைகளுக்கு சில சூழ்நிலைகளில் அதிகபட்சம் 35 வயது வரை வயது தளர்வு வழங்கும் நடைமுறை இருந்தது.

ஆனால் பிரியங்காவின் நிலைமை வேறுபட்டது. அவர் சாதாரணமாக கல்வித் தகுதியின் அடிப்படையில் ராணுவத்தில் புதிதாகச் சேர விரும்பும் ஒரு விதவை அல்ல. அவர் ஏற்கெனவே பத்து ஆண்டுகள் விமானப்படையில் அதிகாரியாகப் பணியாற்றியவர்.

இதனால், “முன்னாள் பயிற்சி பெற்ற பெண் அதிகாரி + விமானப்படை அதிகாரியின் விதவை” என்ற தனிப்பட்ட பிரிவுக்கு விதிமுறைகளில் தெளிவான இடம் இல்லை.

பிரியங்காவின் கோரிக்கையை அரசு மற்றும் விமானப் படை நிர்வாகம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவரது வயதும் தடையாக இருந்தது. ஏற்கெனவே இருந்த கொள்கையின் 35 வயது என்ற வரம்பை அவர் கடந்திருந்தார். மேலும், அவர் தனது குறுகிய காலப் பணியை முடித்துவிட்டு தன்னிச்சையாகச் சேவையிலிருந்து வெளியேறியிருந்ததால், மீண்டும் அதே அடிப்படையில் பணியில் சேர உரிமை கோர முடியாது என்று அரசுத் தரப்பு வாதிட்டது. மேலும் அரசு தரப்பு, கருணை அடிப்படையில் யாருக்கும் அரசு வேலை அல்லது ராணுவப் பதவி உரிமையாகக் கிடையாது எனவும் மறுத்தது.

விமானப்படையின் மறுப்புக்குப் பிறகு பிரியங்கா ராணுவ தீர்ப்பாயத்தை அணுகினார். “என்னை மீண்டும் விமானப் படை வேலைக்கு எடுத்துக்கொள்ளுங்கள்” என்பது மட்டுமில்லாமல், முன்பு 10 அல்லது 14 ஆண்டுகள் வரை ராணுவத்தில் பணியாற்றிவிட்டு பின்னர் ராணுவத்தினரின் விதவைகளாக மாறும் பெண்களுக்கு மீண்டும் சேவைக்குத் திரும்பும் வகையில் ஒரு கொள்கை உருவாக்க வேண்டும் என்பதும் அவரது வாதத்தின் முக்கிய அம்சமாக இருந்தது. அங்கும் அவருக்கு நிவாரணம் கிடைக்காத சூழலில் அவர் உச்ச நீதி மன்றத்தை நாடினார்.

விமானப்படையின் மறுப்புக்குப் பிறகு பிரியங்கா ராணுவ தீர்ப்பாயத்தை அணுகினார். “என்னை மீண்டும் விமானப் படை வேலைக்கு எடுத்துக்கொள்ளுங்கள்” என்பது மட்டுமில்லாமல், முன்பு 10 அல்லது 14 ஆண்டுகள் வரை ராணுவத்தில் பணியாற்றிவிட்டு பின்னர் ராணுவத்தினரின் விதவைகளாக மாறும் பெண்களுக்கு மீண்டும் சேவைக்குத் திரும்பும் வகையில் ஒரு கொள்கை உருவாக்க வேண்டும் என்பதும் அவரது வாதத்தின் முக்கிய அம்சமாக இருந்தது. அங்கும் அவருக்கு நிவாரணம் கிடைக்காத சூழலில் அவர் உச்ச நீதி மன்றத்தை நாடினார்.

இந்த வழக்கின் மிக முக்கியமான திருப்பம் 2026 செப்டம்பரில் ஏற்பட்டது. தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான உச்சநீதிமன்ற அமர்வு,

பிரியங்காவின் வழக்கு “மிகவும் தனித்துவமானது” என்று குறிப்பிட்டது. அவர் ஒரே நேரத்தில் முன்னாள் விமானப்படை அதிகாரி, விமானப்படை அதிகாரியின் விதவை என இரண்டு தகுதிகளைப் பெற்றிருக்கிறார். இந்த இரு நிலைகளையும் ஒன்றாகக் கொண்டவர் களைப் பற்றிய தெளிவான கொள்கை ஏற்கெனவே இல்லை என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. மேலும், அவருக்கு இரண்டு பள்ளி வயது மகள்கள் இருப்பதையும் நீதிமன்றம் கவனத்தில் கொண்டது.

இந்த வழக்கில் மிகவும் முக்கியமான சட்ட அம்சம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 142 ஆகும். இச்சட்டப்பிரிவு, ஒரு வழக்கில் “முழுமையான நீதி” கிடைக்கத் தேவையான உத்தரவை உச்சநீதிமன்றம் பிறப்பிக்க அனுமதிக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்திய உச்சநீதிமன்றம், பிரியங்கா சக்சேனாவை மீண்டும் விமானப்படையில் சேர்க்க உத்தரவிட்டது.

ஆனால் இங்கே ஒரு முக்கியமான நிபந்தனையையும் நீதிமன்றம் விதித்தது. இந்தத் தீர்ப்பு ஒரு தனிப்பட்ட வழக்குக்கான ஒருமுறை நிவாரணம் மட்டுமே இதை எதிர்கால வழக்குகளுக்கான பொதுவான முன்னுதாரணமாகக் கருதக்கூடாது என்று தெளிவுபடுத்தியது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி பிரியங்கா சாக்சனா ஒரு ஆண்டு கால புத்தாக்கப்பயிற்சி முடித்துவிட்டு, அதற்குப் பிறகு கட்டாய மருத்துவத் தகுதிகளையும் பூர்த்தி செய்ய பின் மீண்டும் இந்திய விமானப் படையின் ஸ்குவாட்ரன் லீடர் பிரியங்கா சாக்சனாவாக மீண்டும் வானில் பறப்பார்.

நன்றி : இணையம்

Toronto மேயர் தேர்தல்: 10,000 புதிய வாடகை வீடுகள் பற்றிய அறிவிப்பு

மீண்டும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், 2027 ஆம் ஆண்டில் 10,000 புதிய வாடகை வீடுகளுக்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதாக Olivia Chow தெரிவித்துள்ளார்.

வியாழக்கிழமை காலை நடைபெற்ற தேர்தல் பிரச்சார அறிவிப்பின் போது பேசிய Chow, நகரில் தற்போது கட்டுமானத்தில் உள்ள 60 வீடமைப்புத் திட்டங்களின் தொடர்ச்சியாகவே இந்த வாக்குறுதி அமைவதாகக் கூறினார். இத்திட்டங்கள் நிறைவடையும் போது, மலிவு விலை மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வாடகை வசதி கொண்ட ஆயிரக்கணக்கான வீடுகள் உட்பட மொத்தம் 16,000 வாடகை வீடுகள் மக்களுக்குக் கிடைக்கும்.

“இங்குள்ள பலருக்கு ஒரு சொந்த வீடு என்பது எட்டாத கனவாக மாறிவருகிறது. இது எனக்கு ஏற்புடையதல்ல. நீங்கள் ஒரு செவிலியராக, ஆசிரியராக, கட்டுமானத் தொழிலாளியாக அல்லது தனிநபர் பராமரிப்பு உதவியாளராக (PSW) இருந்தால், இங்கு வசதிப்பட வாழும் சூழல் இருக்க வேண்டும். அதில் மாற்றுக்கருத்து இல்லை. இதனால்தான் வீடமைப்பு என்பதில் நான் தீவிர கவனம் செலுத்தி வருகிறேன். நாங்கள் வீடுகளைக் கட்டி வருகிறோம்,” என்று சௌ கூறினார்.

வளர்ச்சிக் கட்டணங்களை 60 சதவீதம் வரை குறைப்பதற்காக, கடந்த வசந்த காலத்தில் மாகாண மற்றும் கூட்டாட்சி அரசாங்கங்களால் செய்யப்பட்ட 1.5 பில்லியன் டொலர் முதலீட்டின் மூலம் இத்திட்டங்களுக்கான நிதி ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளதாக Chow தெரிவித்தார். மேலும், கட்டுமான நிறுவனங்களின் செலவுகளை ஈடுசெய்வதற்காக, மாநகரசபை தனது இயங்கு மற்றும் மூலதன வரவு செலவுத் திட்டங்களில் இருந்து 1.2 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது.

2030 ஆம் ஆண்டிற்குள் நகரில் 65,000 வீடுகளைக் கட்டும் இவரது திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த வாக்குறுதி அமைந்துள்ளது. இதில் குறைந்தபட்சம் 20 சதவீத வீடுகள் மலிவு விலையிலான வாடகை இடங்களாக ஒதுக்கப்படும்.

இந்த வீடுகளைக் கட்டுவதற்கான காலக்கெடு மிகவும் விரைவானது என்று சுட்டிக்காட்டிய Chow, இத்திட்டத்தில் தகுதிபெற அடுத்த 12 மாதங்களுக்குள் கட்டுமானப் பணிகளைத் தொடங்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்றார். நவம்பர் 2024 இல் முதற்கட்ட கட்டுமானங்கள் தொடங்கப்பட்டபோது, வெறும் மூன்று மாதங்களிலேயே கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகின.

“10,000 வீடுகளைப் பிணையாகப் பிடித்துள்ளார்“: Bradford குற்றச்சாட்டு

சௌவின் இந்த அறிவிப்பிற்குப் பதிலளித்துள்ள Brad Bradford தேர்தல் பிரச்சாரக் குழு, Chow “10,000 வீடுகளைப் பிணையாகப் பிடித்துள்ளதாகக” குற்றம் சாட்டியுள்ளது.

“இந்தத் திட்டங்கள் தயாராக இருப்பதாகவும், குடும்பங்களால் தங்களது வாழ்க்கையை ஒத்திவைக்க முடியாது என்றும் மேயர் கூறுகிறார். ஆனால், தான் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் மட்டுமே இவை முன்னெடுத்துச் செல்லப்படும் என்கிறார். வீடுகள் கட்டத் தயாராக இருந்தால், அவற்றை உடனடியாகக் கட்டுங்கள்,” என்று Bradford டின் பிரச்சாரப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு Toronto வில் 28,500 வீடுகளின் கட்டுமானம் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வெறும் 13,928 வீடுகளின் (இலக்கில் 48.9 சதவீதம்) கட்டுமானப் பணிகளே தொடங்கப்பட்டதாக Bradford டின் குழு சுட்டிக்காட்டியது.

இந்த ஆண்டு 33,250 வீடுகள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், ஜூன் மாத நிலவரப்படி 7,164 வீடுகளின் (இலக்கில் 21.5 சதவீதம்) கட்டுமானப் பணிகள் மட்டுமே தொடங்கப்பட்டுள்ளன.

“65,000 கட்டுப்படுத்தப்பட்ட வாடகை வீடுகளைக் கட்டுவதாக சௌ வாக்குறுதி அளித்தார். ஆனால் மார்ச் மாத நிலவரப்படி, மாநகரசபை கணக்கில் எடுத்துக்கொண்ட வீடுகளில் சுமார் 1,500 வீடுகள் மட்டுமே நிறைவடைந்துள்ளன. இந்த ஆண்டிற்கான இலக்கையே எட்ட முடியாத ஒரு மேயரிட மிருந்து 2030 க்குள் 65,000 வீடுகள் என்ற இலக்கு எவ்வித அர்த்தமும் அற்றது.”

வாக்குச்சீட்டில் இரண்டாவது ‘Chow’ பெயர் குறித்து Olivia Chow மீண்டும் கவலை

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, ஒரே இயற்பெயரைக் கொண்ட மற்றொரு மேயர் வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இந்த வார தொடக்கத்தில் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்த கவலையை சௌ மீண்டும் வலியுறுத்தினார்.

முன்கூட்டியே வாக்களிக்கும் மையங்களில் (Advanced polls) வாக்களித்தபோதே இதை முதன்முதலில் கண்டறிந்ததாகக் குறிப்பிட்ட சௌ, “நான் மிகவும் கவலையடைந்துள்ளேன்” என்றார்.

“ஏனெனில் அனைவருக்கும் ஆங்கிலம் முதல் மொழியாக இருக்காது. ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கொண்டவர்கள், ஏற்கனவே ஒரு இயற்பெயரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் சிரமப்படுகிறார்கள். அப்படித் தேடும்போது, அவர்களுக்கு முதலில் கண்ணில்படும் பெயருக்கு நேரே அவர்கள் புள்ளடியிட்டு விடுவார்கள். ஏனெனில் வலது பக்கத்தில் பெயருக்கு அருகிலேயே வாக்களிக்கும் இடம் உள்ளது.”

அவர் குறிப்பிடும் வேட்பாளரான Braeden Chow, அகரவரிசைப்படி பெயர்கள் பட்டியலிடப் பட்டுள்ளதால் வாக்குச்சீட்டில் முதலிடத்தில் வருகிறார். தன் கவலையைத் தணிப்பதற்குத் தன்னால் செய்யக்கூடியது எல்லாம், நகர எழுத்தர் (City clerk) அல்லது தேர்தல் அலுவலகம் “இந்தப் பிரச்சனையைத் தணிக்கும்” என்று “நம்புவது மட்டுமே” என்று சௌ ஒப்புக்கொண்டார். இருப்பினும் அது எவ்வாறு சாத்தியமாகும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சௌவின் கருத்திற்குப் பதிலளித்து Toronto மாநகரசபை பேச்சாளர் CTV News Toronto செய்தி நிறுவனத்திற்கு அனுப்பிய மின்னஞ்சலில்:

“நகராட்சித் தேர்தல் சட்டத்தின்படி, வேட்பாளர்களின் பெயர்கள் இயற்பெயரின் அகரவரிசைப்படியே பட்டியலிடப்பட வேண்டும். ஒரே பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒரே இயற்பெயரைப் பகிர்ந்துகொள்ளும் பட்சத்தில், சட்டத்தின்படி அவர்களின் முதல் பெயரைக் கொண்டு அவை மேலும் வரிசைப்படுத்தப்பட வேண்டும்.

வேட்பாளர்கள் அவர்களின் முதல் பெயர்கள் மற்றும் நகர எழுத்தாளரால் ஒதுக்கப்படும் தனித்துவமான எண் ஆகியவற்றின் மூலம் வேறுபடுத்தப்படுகிறார்கள்,” என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கடந்தகாலத் தேர்தல்களிலும் ஒரே பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒரே இயற்பெயரைப் பகிர்ந்துகொண்ட “பல சந்தர்ப் பங்கள” நடந்துள்ளதாக அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.



அவரது மருத்துவர் பதிவு தற்காலிகமாக GMC ஆல் நிறுத்தப்பட்டுள்ளது.

BEHIND ME MEDIA

கனேடிய எழுத்தாளர் Anne Carson னுக்கு இலக்கிய நோபல் பரிசு!



2026 ஆம் ஆண்டிற்கான இலக்கியத்திற்கான புகழ்பெற்ற நோபல் பரிசு, கனடாவைச் சேர்ந்த பிரபல கவிஞரும், கட்டுரையாளரும், மொழிபெயர்ப்பாளருமான Anne Carson அறிவிக்கப்பட்டுள்ளது.

விருதுக்கான காரணம் மற்றும் முக்கிய விவரங்கள்:

விருதுக்கான காரணம்: “பண்டைய பாரம்பரியத்துடனான விளையாட்டுத்தனமான உரையாடல் வழியே, காலத்திற்கு ஏற்ற புதிய இலக்கிய வடிவங்களை உருவாக்கிய இவரது தைரியமான மற்றும் புதுமையான படைப்புகளுக்காக” இந்த நோபல் பரிசு வழங்கப்படுவதாக ஸ்வீடிஷ் அகாடமி தெரிவித்துள்ளது.

பரிசுத் தொகை: வாழ்நாள் சாதனைக்காக வழங்கப்படும் இந்த நோபல் பரிசுடன் 1.2 மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் 12 மில்லியன் ஸ்வீடிஷ் குரோனர்) தொகையும் சான்றிதழும் வழங்கப்படும்.

எழுத்தாளரின் எதிர்வினை: தற்போது ஐஸ்லாந்தில் தங்கியிருக்கும் 76 வயதான ஆன் கார்சன், இந்த அறிவிப்பு குறித்து நகைச்சுவையாகக் கூறுகையில், “நடுவர்கள் அனைவருக்கும் பைத்தியம் பிடித்துவிட்டது என்றே நினைக்கிறேன்... ஆனால் இது உண்மையிலேயே ஆச்சரியமான ஒன்று” எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் வாழ்த்து: கனடா பிரதமர் மார்க் கார்னி தனது வாழ்த்துச் செய்தியில், “இது கனடாவிற்கு ஒரு பெருமையான தருணம். பண்டைய கதைகளை புதிய வாசகர்களிடம் கொண்டு சேர்த்து, இலக்கியத்தைப் பற்றிய நமது பார்வையை ஆன் கார்சன் மாற்றியமைத்துள்ளார்” எனப் பாராட்டியுள்ளார்.

முக்கிய படைப்புகள்: ‘Autobiography of Red’, ‘The Glass Essay’, ‘Nox’, ‘The Beauty of the Husband’ ஆகியவை இவரது புகழ்பெற்ற படைப்புகளாகும். கிரேக்க இலக்கியத்தில் நிபுணத்துவம் பெற்ற இவர், பண்டைய நாடகங்களை நவீன காலத்திற்கு ஏற்ப மறுவாக்கம் செய்வதில் வல்லவர்.

இவரது படைப்புகள் கவிதை, புனைகதை மற்றும் ஆராய்ச்சிகளுக்கு இடையிலான எல்லைகளைக் கடந்து புதிய பாணியில் அமைந்திருப்பதாக நோபல் பரிசுக் குழு புகழாரம் சூட்டியுள்ளது.

அனோஜன் பற்றிய கருத்து: பிரித்தானிய மருத்துவருக்கு எதிராக விசாரணை?

தொடர்ச்சி

இஸ்லாமிய மதத்தையும் புனித நபியையும் நிந்தித்ததாகக் கூறப்படும் அனோஜனுக்கு சவுதி அரேபியா விதித்த மரண தண்டனை சரியானது என்ற தொனியில், பிரித்தானியாவில் மருத்துவராகப் பணியாற்றும் ரஹ்மே அலத்வான் சமூக ஊடகத்தில் கருத்து வெளியிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.இந்தப் பதிவு தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹைம வுஅழவால ஆீ, குறித்த மருத்துவரின் கருத்துகள் குறித்து விசாரணை நடத்தி, அவரை மருத்துவப் பதிவிலிருந்து நீக்குவது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு பொது மருத்துவ மன்றத்திடம் (General Medical Council – GMC) கோரி கடிதம் எழுதியுள்ளார்.

பதிவில், “ரஹ்மே அலத்வான் பிரிட்டனில் ஒரு மருத்துவர். இஸ்லாத்தை நிந்திப் பவர்கள் கொல்லப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இதுபோன்ற நம்பிக்கைகளைக் கொண்டவர்களுக்கு நம் நாட்டில் இடமில்லை. அவரை மருத்துவப் பதிவிலிருந்து நீக்கக் கோரி பொது நபர் ஒருவர் பொது மருத்துவ மன்றத்திற்கு கடிதம் எழுதியுள்ளேன்” எனக் குறிப்பிட்டுள்ளார். மருத்துவரின் சமூக ஊடகக் கருத்துகள் தொடர்பாக விசாரணை கோரப்பட்டுள்ள நிலையில், இந்த விவகாரம் பிரித்தானியாவில் கருத்துச் சுதந்திரம், மருத்துவர்களின் தொழில் முறைப் பொறுப்பு கருத்துகளின் தாக்கம் தொடர்பான விவாதங்களை ஏற்படுத்தி யுள்ளது.

கவின் கலாலயாவின் 11வது ஆண்டுவிழா!

கனடா கவின் கலாலயாவின் 11ஆவது ஆண்டு நிறைவையொட்டிய மாபெரும் கலை நிகழ்வு கடந்தவாரம் Whitby Courthouse Theater இல் சிறப்பாக நடைபெற்றது.

இசைக்கலைமாணி கலாவித்தகர் கவினாளி ரவீந்தரும் அவரது குழுவினரும் இணைந்து மேற்படி நிகழ்ச்சியை நடாத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





















கனடாவைச் சேர்ந்த பாட்டி புதிய உலக சாதனை

கனடாவைச் சேர்ந்த 61 வயது வீராங்கனை டோனாஜீன் வைல்ட் (DonnaJean Wilde), அமெரிக்காவின் உடாவில் நடைபெற்ற உலக சீனியர் விளையாட்டுப் போட்டிகளில், தொடர்ந்து 5 மணி நேரம் அசையாமல் பிளாங்க் (Plank) நிலையில் இருந்து புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.

ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியையான இந்த 61 வயது பாட்டி, ஏற்கனவே கடந்த 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 மணி நேரம் 30 நிமிடங்களுக்குப் பிளாங்க் நிலையில் இருந்து கின்னஸ் உலக சாதனை படைத்திருந்தார்.



தற்போது அந்த சாதனையை அவரே தகர்த்து, 5 மணி நேரம் பிளாங்க் செய்து புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.

தனது 12 பேரக்குழந்தைகளும் நேரில் வந்து உற்சாகப்படுத்தியதே இந்த அசாத்திய சாதனைக்கு முக்கிய காரணம் என அவர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். தீராத நாள்பட்ட வலியால் அவதிப்பட்டு வந்த நிலையிலும், கடுமையான பயிற்சியின் மூலம் டோனாஜீன் வைல்ட் நிகழ்த்திய இந்த இமய சாதனை, உலக அளவிலான விளையாட்டு ரசிகர்களைப் பிரமிக்க வைத்துள்ளது.

BEHIND ME MEDIA

CANADA
HUMANITY
SINCE 2024
BEHIND ME FOUNDATION

மனிதநேயம் - Behind me foundation

வாழ்வாதாரத்தைத் தேடும் கரங்களை பலப்படுத்தும் நோக்கோடு கடந்த 2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது **மனிதநேயம் - Behind me foundation** நிறுவனம் தனிநபர்களுக்கும் பேரிடர்களால் நிலைகுலையும் மக்களுக்குமான சேவைகளைத் தொடர்ச்சியாக ஆற்றிவருகின்றது.

உதவிகள் தேவைப்படுவோர் **Behind me foundation** ஊடாக எம்மைத் தொடர்புகொள்ளும் பட்சத்தில் உங்களுக்கான தேவைகளை நாம் எமது ஊடகங்களின் வாயிலாக அறிவித்து தனி நபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஊடாக உங்களுக்கான அனுசரணைகளைப் பெற்றுத் தருவோம்.



எமது சேவைகள்

- உதவிகளை பெற்றவர்கள் - வழங்கியவர்கள் பணம் மற்றும் பொருள் விபரங்களின் வெளிப்படைத்தன்மை பேணப்படும்.
- உதவி தேவைப்படும் மக்கள் மற்றும் காரணங்கள்
- உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள்
- உதவிகள் உரியவர்களைச் சென்றடைந்த உறுதிப்படுத்தல்கள்

எமது **Behind me International Media** ஊடக வலையமைப்பில் பகிரப்படும்

தொடர்புக்கு

இலங்கை	-	+94 76239 0159
இந்தியா	-	+ 91 917632 3079
கனடா	-	+ 437 688 3493
மின்னஞ்சல்	-	info@behindmemedia.com

BEHIND ME FOUNDATION

உதவுவது நம் கடமை
மாற்றம் கொண்டுவருவது நம் குறிக்கோள்

நாம் இணைவோம்... பலரை உயர்வோம்...

இந்த வாரம், உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கான தளராத அர்ப்பணிப்பால் தனது அசாதாரணமான வாழ்க்கைப் பயணத்தை வரையறுத்த நவி பிள்ளைக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டதைக் கண்டு உலகம் கொண்டாடியது.

தென்னாப்பிரிக்காவில் நிறவெறி ஆட்சியின் போது நெல்சன் மண்டேலா உட்பட ரொபன் தீவிலிருந்த அரசியல் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாத்து பெற்றுத் தந்தது முதல், ஐநா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராகவும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் பிற சர்வதேச நீதிமன்றங்கள் மற்றும் அமைப்புகளில் நீதிபதியாகவும் பணியாற்றியது வரை, நவி தனது வாழ்க்கையை மனித உரிமைகள் மற்றும் சர்வதேச நீதியை மேம்படுத்துவதற்காகவே அர்ப்பணித்துள்ளார்.

அவரது குறிப்பிடத்தக்க வாழ்க்கைப் பயணத்தைப் பற்றி ஏற்கனவே நிறைய எழுதப்பட்டுள்ளது.

தமிழ் சமூகம், ஒரு தலைமுறை சட்டப் வழக்கறிஞர்கள்.ஆர்வலர்கள் மற்றும் எனது சொந்த வாழ்க்கையில் அவர் ஏற்படுத்திய தாக்கத்தை நான் இங்கே பிரதிபலிக்க விரும்புகிறேன்.

நீதிக்காக தளராத அர்ப்பணிப்பைக் கொண்டு இயங்குபவர் நவி பிள்ளை!

ஹரிணி சிவலிங்கம்



எனது கணவரும் நானும் 2009 மார்ச்சில் ஜெனீவாவில் ஐநா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராக நவி பிள்ளை இருந்தபோது அவரை முதன்முதலில் சந்தித்தோம். நாங்கள் எங்களது ஐந்து மாத பெண் குழந்தையுடன் ஜெனீவாவுக்குப் பயணம் செய்தோம். அந்தச் சந்திப்பு எங்களது வாழ்க்கையின் பாதையையே மாற்றியமைத்தது.

அன்றிலிருந்து இரண்டு விஷயங்கள் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன. முதலாவது, மனித உரிமைகள் மற்றும் நீதியின் மீதான பிள்ளையின் உண்மையான அர்ப்பணிப்பு. முன்னதாக ஒரு சட்டப் பயிற்சி மாணவியாக சர்வதேச மனித உரிமை நிறுவனங்களைக் கவனிப்பதற்காக ஜெனீவாவில் நேரத்தைச் செலவிட்ட நான், அவர்களின் அதிகாரத்துவ அமைப்பு மற்றும் அரசியல் கட்டுப்பாடுகள் குறித்து தீவிர விரக்தியடைந்திருந்தேன்.

பிள்ளையைச் சந்தித்தது அந்த விரக்தியைப் போக்கியது. நீதிக்கான அர்ப்பணிப்பு என்பது வெறும் பேச்சு சார்ந்ததாக அல்லாமல், கொள்கைப் பிடிப்புள்ள வாழ்நாள் நடவடிக்கைகளில் அடித்தளமிட்ட ஒருவரை அங்கே நான் கண்டேன்.

அரசியல்மயமாக்கப்பட்ட சர்வதேச நிறுவனங்களுக்குள்ளும் கூட அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை அவர் எனக்கு மீண்டும் அளித்தார்.

இரண்டாவது, எங்களது சந்திப்பின் முடிவில் அவர் கூறிய ஒரு கருத்து. தமிழ் சமூகமும் புலம்பெயர் தமிழர்களும் சர்வதேச மனித உரிமை வழிமுறைகளுடன் ஈடுபடுவதன் மூலம் மனித உரிமைகளுக்கான தங்கள் போராட்டத்தைப் போதுமான அளவிற்கு 'அறிவுசார்மயப் படுத்தவில்லை' என்று அவர் அவதானித்தார்.

அவரது வார்த்தைகள் ஒரு பதிற்றாண்டுக்கும் மேலாக என்னுடன் இருந்து வருகின்றன. தாயகத்திலும் புலம்பெயர் தேசமெங்கிலும் உள்ள தலைமுறை தலைமுறையான தமிழர்களால் தயாரிக்கப்பட்ட கணிசமான ஆதரவுப் பணிகள், புலமைப்பரிசில் மற்றும் ஆராய்ச்சிகளை நிராகரிப்பதாக அது அமையவில்லை.

மாறாக, இதனை ஒரு சவாலாகவே நான் புரிந்துகொண்டேன்: எமது அறிவுசார் மரபுகளை வளர்ப்பது, கல்வித்துறையுடனான எமது ஈடுபாட்டை வலுப்படுத்துவது, எமது அனுபவங்களையும் நீதிக்கான கோரிக்கைகளையும் பரந்த பார்வையாளர்களிடம் கொண்டு சேர்ப்பது, மற்றும் புதிய தலைமுறை தமிழ் அறிஞர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு வழிகாட்டுவது ஆகியவையே அச்சவாலாகும்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் உச்சமடைந்த, தமிழ் மக்களுக்கு எதிராக பல தசாப்தங்களாக நடத்தப்பட்ட கொடூரங்களுக்கு நீதியையும் பொறுப்புக்கூறலையும் வழங்குவதில் இலங்கையின் தோல்விகளை பிள்ளை தொடர்ந்து கேள்விக்குட்படுத்தி வந்துள்ளார். நீதியைப் பின்தொடர்வது என்பது கொடூரங்களை ஆவணப்படுத்துவதற்கும் அப்பால், பொறுப்புக்கூறலைக் கோருவதாகவும் தடியடி விலக்கிற்கு எதிராக நிற்பதாகவும் அமைய வேண்டும் என்பதை அவரது பணிகள் நிரூபித்துள்ளன.

அந்தச் சவால், முதுகலை ஆய்வுகளைத் தொடர்வதற்கான எனது சொந்த முடிவை எடுக்க உதவியது. தமிழ் உரிமைகளின் பாதுகாப்பு, தமிழ் மக்களின் அரசியல் மற்றும் தமிழ் ஆய்வுகளின் வளர்ச்சிக்குத் தொடர்ச்சியான அறிவுசார் ஈடுபாடும் வலுவான நிறுவனங்களும் தேவை என்ற நம்பிக்கையையும் அது வலுப்படுத்தியது.

டொரன்டோவிலிருந்து ஒட்டாவாவுக்கான விமானப் பயணத்தின் போது, டர்பனில் தான் வளர்ந்த வாழ்க்கையைப் பற்றி அவர் பேசினார். அவர் கடந்து வந்த மற்றும் கண்ட போராட்டங்கள் நீதிக்கான அவரது தளராத அர்ப்பணிப்பை எவ்வாறு வடிவமைத்தன என்பது தெளிவாகத் தெரிந்தது. அந்தப் பயணம் இன்னும் நீண்டதாக இருக்கக்கூடாதா, அதனால் அவரது ஞானத்தை இன்னும் அதிகமாக உறிஞ்சிக்கொள்ள முடியுமே என்று நான் ஆசைப்பட்டது நினைவிருக்கிறது.

கொள்கை ரீதியான ஆதரவுப் பிரசாரம் எதைச் சாதிக்க முடியும் என்பதைப் பற்றிய எனது புரிதலை வடிவமைத்த நவி பிள்ளையிடமிருந்து கற்றுக்கொண்டது ஒரு பாக்கியம். அவரது மரபு அவர் பணியாற்றிய நிறுவனங்களிலோ அல்லது அவர் சவாலுக்குட்படுத்திய அநீதிகளிலோ மட்டும் இல்லை, மாறாக அந்த வேலையை முன்னோக்கிச் செல்ல அவர் ஊக்கமளித்த மக்களிடமும் உள்ளது.

உலகெங்கிலும் உள்ள தமிழர்களுக்கு, 2026 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவராக அவர் அங்கீகரிக்கப்பட்டிருப்பது, உண்மையைப் பின்தொடர்வது, எமது வரலாற்றைப் பாதுகாப்பது, எமது அறிவுசார் மரபுகளைக் கட்டியெழுப்புவது மற்றும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான போராட்டத்தைத் தொடர்வதன் முக்கியத்துவத்தை நினைவூட்டுவதாகும். நீதியைக் கோருவது மட்டுமல்லாமல், அதை முன்னோக்கி எடுத்துச் செல்லக்கூடிய புலமைப்பரிசில், நிறுவனங்கள் மற்றும் இயக்கங்களைக் கட்டியெழுப்பவும் அவரது முன்னுதாரணம் நம்மை அழைக்கிறது.

எமது தமிழ் சமூகத்திற்கும், உலகம் முழுவதும் அநீதிகளைச் சந்தித்த அனைத்து சமூகங்களுக்கும், நீதியைத் தொடர்வதற்காகத் தொடர்ந்து குரல் கொடுப்பதற்கான மகத்தான பெருமையும் உத்வேகமும் தரும் தருணம் இதுவாகும்.

உலகத் தமிழ் ஆய்வு மாநாடு 2026:
“செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்”



“செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்” என்ற கருப்பொருளில், அனைத்துலகத் தமிழர் பேரவை ஏற்பாடு செய்யும் “உலகத் தமிழ் ஆய்வு மாநாடு 2026”, அக்டோபர் 15-18 வரை கனடாவின் டொரொன்டோவில் நடைபெறுகிறது.

ஏற்பாடுகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், பல நாடுகளிலிருந்து அறிஞர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் சமூக-பொருளாதாரத் துறை பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

அக்டோபர் 15 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பதிவுகள் தொடங்கும். அதனைத் தொடர்ந்து தொடக்க நிகழ்வுகள் மற்றும் ஆய்வரங்குகள் நடைபெறும்.

தமிழ் மொழி, செய்யறிவு, புதிய தொழில்நுட்பம், பண்பாடு, பொருளாதாரம், வரலாறு, நாகரிகம் மற்றும் வடக்கு-கிழக்கு பொருளாதார மேம்பாடு உள்ளிட்ட துறைகளை மையப்படுத்தி, பல அரங்குகளில் ஆய்வுக் கட்டுரை அமர்வுகள் நடைபெறும்.

மாபெரும் கலை இரவு - அக்டோபர் 17

அக்டோபர் 17 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும் கலை மற்றும் பண்பாட்டு இரவில், கனடா, ஐரோப்பா மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்பர்.

மாநாட்டு மீளாய்வும் ஆய்வாளர்கள் ஒன்றுகூடலும்

அக்டோபர் 18 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, மாநாட்டு ஆய்வுகள், கலந்துரையாடல்கள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்த மீளாய்வு நடைபெறும்.

அக்டோபர் 18 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, மாநாட்டு ஆய்வுகள், கலந்துரையாடல்கள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்த மீளாய்வு நடைபெறும்.

முன்வைக்கப்படும் சிந்தனைகள் எதிர்கால ஆய்வு, அறிவு, சமூக மற்றும் பொருளாதார முன்னேற் றத்திற்கான நடைமுறைச் செயற் பாடுகளாகத் தொடர்வதற்கான வழிமுறைகளும் ஆராயப்படும்.

FGT இரண்டாவது ஆண்டு விருந்து மற்றும் விருது விழா

நான்கு நாள் நிகழ்வுகளின் நிறைவாக, அக்டோபர் 18 ஞாயிற்றுக்கிழமை மாலை “FGT இரண்டாவது ஆண்டு விருந்து மற் றும் விருது விழா” நடைபெறும்.

கல்வி, ஆய்வு, சமூக சேவை, தொழில் உள்ளிட்ட துறைகளில் சிறப்புப் பங்களிப்பு வழங்கிய வர்கள் அங்கீகரிக்கப்படுவர்.

உலகத் தமிழ்ச் சமூகத்திற்கு அழைப்பு

இம்மாநாடு, தமிழின் அறிவு, அடையாளம், பண்பாடு, பொருளாதாரம் மற்றும் அடுத்த தலைமுறையின் எதிர்காலம் குறித்த உலகளாவிய உரையாட லுக்கான தளமாக அமையும்.

கனடாவிலும் உலகெங்கும் வாழும் தமிழர்கள், தமிழ் அமைப் புகள், கல்வி நிறுவனங்கள், தொழில் முனைவோர், இளைய தலைமுறையினர் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவரும் பங்கேற்று ஆதரவு வழங்குமாறு அழைக்கப்படுகின்றனர்.

“தமிழால் இணைவோம் அறிவால் உயர்வோம் உலகத் தமிழர் வலிமையை ஒன்றிணைப் போம்.”

மேலதிக தொடர்புகளுக்கு:

+1 416-473-5348

admin@tamilfederation.org

mailto:admin@tamilfederation.org

www.globaltamilconference.org

http://www.globaltamilconference.org

உலகத் தமிழ் ஆய்வு மாநாடு 2026

அக்டோபர் 15-18, 2026’ ரொறன்ரோ, கனடா

ஏற்பாடு:

அனைத்துலகத் தமிழர் பேரவை

Federation of Global Tamils (FGT)

இந்த வாரம்



BEHIND ME MEDIA

13-10-2026

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். சுக்ல பட்சம். சக 1948 ஆஷ்வினம் 21
சூரியன் எந்த ராசியில் இருக்கிறரோ, அதன் நிலையை நாழிகையில் குறிப்பது லக்ன இருப்பு நாழிகை ஆகும்.
திரிதியை மா.11.40 வரை, பின்பு சதுர்த்தி - சுவாதி கா.01.52 வரை, பின்பு விசாகம்.

ஸ்ரீ பராபவ புரட்டாசி 26 | OCT - TUE செவ்வாய் | ஜமாஅத்துல் அவ்வல் 1 | வளர்பிறை 286 / 079

வளர். திரிதியை 44.05 (மா. 11.40) விசாகம் 51.39 (கா. 02.42) தியாஜ் 02.12 மரண 51.39 மேல் சித்த யோகம். மதுரை ஸ்ரீமீனாட்சியம்மனுக்கு கொலு மண்டபத்தில் பட்டாபிஷேக காட்சி. திருவெம்பல் ஸ்ரீசிவபெருமான் பவனி. ஆழ்வார் திருநகரி நம்மாழ்வார் புறப்பாடு. ஹஸரத் உமர் பிறந்த நாள்.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை 10.45-11.45	1.45-2.45	03.00	12.00	09.00
மாலை : 4.45-5.45	7.30-8.30	04.30	01.30	10.30

சூலம் : வடக்கு | கன்னியா லக்கனம் | சந்திராஷ்டமம்
பரிகாரம் : பால் | இருப்பு நா. 0 வி. 50 | அசுபதி
கரணம் : 7.30-9 | சூரிய உதயம் : 6.02

தீய நண்பனை விட தனிமை மேலானது

சனி, ரா, 3 கட-செ, 8 துலா-புத, செவி, கே, புசு, சூ, கீழ், திதி திரிதியை

இராசிபலன்
மேஷம் - பொறுமை
ரிஷபம் - ஆக்கம்
மிதுனம் - பாசம்
கடகம் - உயர்வு
சிம்மம் - விவேகம்
கன்னி அனுகூலம்
துலாம் - ஏமாற்றம்
விருச்சி - ஆதரவு
தனுசு - சிரமம்
மகரம் - அசதி
கும்பம் - மேன்மை
மீனம் - மகிழ்ச்சி

14-10-26



சதுர்த்தி விரதம்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். சுக்ல பட்சம். சக 1948 ஆஷ்வினம் 22
நவராத்திரி நான்காம் நாள், கூந்தலை புனிதப்படுத்தி அம்மனை வழிபடுவதே துர்க்கா கேசசோதனம்.
சதுர்த்தி இன்று முழுவதும் - விசாகம் கா.02.42 வரை, பின்பு அனுஷம்.

ஸ்ரீ பராபவ புரட்டாசி 27 | OCT - WED புதன் | ஜமாஅத்துல் அவ்வல் 2 | வளர்பிறை 287 / 078

வளர். சதுர்த்தி 48.05 (கா. 01.16) அனுஷம் 57.05 (கா. 04.52) தியாஜ் 02.35 சித்த. **சதுர்த்தி விரதம்**. துர்க்கா கேசசோதனம். குலசேகரபட்டிணம் ஸ்ரீமுத்தாலம்மன் மயில் வாகனத்தில் பாலசுப்ரமண்யம் கோலத்துடன் காட்சி. சிருங்கேரி ஸ்ரீசாரதாம்பாள் ஸ்ரீவைஷ்ணவி கெரூட வாகனத்தில் புறப்பாடு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை : 9.15-10.15	10.45-11.45	12.00	10.30	07.30
மாலை : 4.45-5.45	6.30-7.30	01.30	12.00	09.00

சூலம் : வடக்கு | கன்னியா லக்கனம் | சந்திராஷ்டமம்
பரிகாரம் : பால் | இருப்பு நா. 0 வி. 40 | பரணி
கரணம் : 6-7.30 | சூரிய உதயம் : 6.02

வாதாட பலருக்கு தெரியும், உரையாட சிலருக்கே தெரியும்

சனி, ரா, 3 கட-செ, 8 துலா-புத, செவி, கே, புசு, சூ, சம, திதி சதுர்த்தி

இராசிபலன்
மேஷம் - இன்பம்
ரிஷபம் - இரக்கம்
மிதுனம் - உயர்வு
கடகம் - நட்பு
சிம்மம் - அலைச்சல்
கன்னி - சிரமம்
துலாம் - மகிழ்ச்சி
விருச்சி - துணிவு
தனுசு - நற்செயல்
மகரம் - சுகம்
கும்பம் - நலம்
மீனம் - வெற்றி

15-10-26



அப்துல் கலாம் பிறந்த நாள்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். சுக்ல பட்சம். சக 1948 ஆஷ்வினம் 23
நவராத்திரி நாளில் அம்மனின் கண்ணாடி பிரதிபலிப்பை புனித நீர் கொண்டு நீராட்டுவதே துர்க்காஸ்நானம்.
சதுர்த்தி கா.01.16 வரை, பின்பு பஞ்சமி - அனுஷம் கா.04.52 வரை, பின்பு கேட்டை.

ஸ்ரீ பராபவ புரட்டாசி 28 | OCT - THU வியாழன் | ஜமாஅத்துல் அவ்வல் 3 | வளர்பிறை 288 / 077

வளர். பஞ்சமி 52.49 (கா. 03.10) கேட்டை 60.00 (முழுவதும்) தியாஜ் 12.35 சித்த யோகம். துர்க்காஸ்நானம். இராமநாதபுரம் ஸ்ரீராஜராஜேஸ்வரி, காஞ்சிபுரம் ஸ்ரீகாமாட்சி, தல்லாகுளம் ஸ்ரீபிரசன்ன வெங்கடேச பெருமாள் இத்தலங்களில் நவராத்திரி சிறப்பு அலங்காரம். சிறிய நகசு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை 10.30-11.00	----------	01.30	09.00	06.00
மாலை : 1.00-1.30	6.30-7.30	03.00	10.30	07.30

சூலம் : தெற்கு | கன்னியா லக்கனம் | சந்திராஷ்டமம்
பரிகாரம் : தைலம் | இருப்பு நா. 0 வி. 30 | கார்த்திகை
கரணம் : 3-4.30 | சூரிய உதயம் : 6.02

கரும்பிலும் தேள் இருக்கும், கள்ளியிலும் பால் இருக்கும்

சனி, ரா, 3 கட-செ, 8 துலா-புத, செவி, கே, புசு, சூ, சம, திதி பஞ்சமி

இராசிபலன்
மேஷம் - கவலை
ரிஷபம் - பயம்
மிதுனம் - கவனம்
கடகம் - நற்செயல்
சிம்மம் - உயர்வு
கன்னி - அச்சம்
துலாம் - போட்டி
விருச்சி - லாபம்
தனுசு - பக்தி
மகரம் - குழப்பம்
கும்பம் - செலவு
மீனம் - ஊக்கம்

16-10-26



கரிநாள்



ஷஷ்டி விரதம்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். சுக்ல பட்சம். சக 1948 ஆஷ்வினம் 24
நவராத்திரி 7ம் நாள் சரஸ்வதியை அழைத்து கலசத்தில் எழுந்தருள செய்வதே சரஸ்வதி ஆவாஹணம்.
பஞ்சமி கா.03.10 வரை, பின்பு ஷஷ்டி - கேட்டை கா.07.19 வரை, பின்பு மூலம்.

ஸ்ரீ பராபவ புரட்டாசி 29 | OCT - FRI வெள்ளி | ஜமாஅத்துல் அவ்வல் 4 | வளர்பிறை 289 / 076

வளர். ஷஷ்டி 57.45 (கா. 05.08) கேட்டை 03.13 (கா. 07.19) தியாஜ் 25.23 மரண 03.13 மேல் அமிர்த யோகம். **ஷஷ்டி விரதம். கரிநாள்**. உபாங்க லலிதா கௌரீ விரதம். சரஸ்வதி ஆவாஹணம். மதுரை ஸ்ரீமீனாட்சியம்மன் அர்த்தநாரீஸ்வரர் காட்சி. நகசு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை : 9.15-10.15	12.15-1.15	10.30	07.30	03.00
மாலை : 2.00-3.00	6.30-7.30	12.00	09.00	04.30

சூலம் : மேற்கு | கன்னியா லக்கனம் | சந்திராஷ்டமம்
பரிகாரம் : வெல்லம் | இருப்பு நா. 0 வி. 20 | ரோகிணி
கரணம் : 1.30-3 | சூரிய உதயம் : 6.02

கோபத்தை விட்டவன் காயப்பட மாட்டான்

சனி, ரா, 3 கட-செ, 8 துலா-புத, செவி, கே, புசு, சூ, கீழ், திதி ஷஷ்டி

இராசிபலன்
மேஷம் - முயற்சி
ரிஷபம் - நன்மை
மிதுனம் - பக்தி
கடகம் ஆரோக்கியம்
சிம்மம் - கோபம்
கன்னி - சிக்கல்
துலாம் - பணிவு
விருச்சி - நலம்
தனுசு - நட்பு
மகரம் - சலனம்
கும்பம் - தெளிவு
மீனம் - உற்சாகம்

17-10-2026

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். சுக்ல பட்சம். சக 1948 ஆஷ்வினம் 25
சொத்து பரிவர்த்தனை, புதிய ஒப்பந்தம், தொழில் துவங்க விசேஷ தினம் - திரிதினஸ்பிரிக் இன்று.
ஷஷ்டி கா.05.08 வரை, பின்பு ஸப்தமி - மூலம் கா.09.53 வரை, பின்பு பூராடம்.

ஸ்ரீ பராபவ புரட்டாசி 30 | OCT - SAT சனி | ஜமாஅத்துல் அவ்வல் 5 | வளர்பிறை 290 / 075

வளர். ஸப்தமி 60.00 (முழுவதும்) மூலம் 09.38 (கா. 09.53) தியாஜ் 05.15, 36.10 சித்த யோகம். திரிதினஸ்பிரிக். மதுரை மீனாட்சி தண்ணீர் பந்தலில் அருளிய காட்சி. சிருங்கேரி சாரதாம்பாள் ராஜராஜேஸ்வரி அலங்காரம். காஞ்சிபுரம் ஸ்ரீகாமாட்சியம்மன் சிறப்பு அலங்காரம். சிறிய நகசு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை 10.45-11.45	12.15-1.15	09.00	06.00	01.30
மாலை : 4.45-5.45	9.30-10.30	10.30	07.30	03.00

சூலம் : கிழக்கு | கன்னியா லக்கனம் | சந்திராஷ்டமம்
பரிகாரம் : தயிர் | இருப்பு நா. 0 வி. 10 | மிருகசீருஷம்
கரணம் : 12-1.30 | சூரிய உதயம் : 6.02

வேளை அறிந்து பேசு, நாள் அறிந்து பயணம் செய்

சனி, ரா, 3 கட-செ, 8 துலா-புத, செவி, கே, புசு, சூ, கீழ், திதி ஸப்தமி

இராசிபலன்
மேஷம் - லாபம்
ரிஷபம் - உறுதி
மிதுனம் - உயர்வு
கடகம் - கவனம்
சிம்மம் - நட்பு
கன்னி - புகழ்
துலாம் - ஆதரவு
விருச்சி - செலவு
தனுசு - பரிவு
மகரம் - கோபம்
கும்பம் - வரவு
மீனம் - சுகம்

18-10-2026

அஷ்டமி

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். சுக்ல பட்சம். சக 1948 ஆஷ்வினம் 26
நவராத்திரி 8ம் நாள், மிக புனிதமான மஹாஷ்டமி என்றும், துர்க்காஷ்டமி என்றும் வழிபடும் நாள் இன்று.
ஸப்தமி கா.07.09 வரை, பின்பு அஷ்டமி - பூராடம் மா.12.22 வரை, பின்பு உத்திராடம்.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 1 | OCT - SUN ஞாயிறு | ஜமாஅத்துல் அவ்வல் 6 | வளர்பிறை 291 / 074

வளர். ஸப்தமி 02.48 (கா. 07.09) பூராடம் 15.50 (மா. 12.22) தியாஜ் 37.55 சித்த 15.50 மேல் அமிர்த யோகம். **அஷ்டமி**. விஷு புண்ணிய காலம். துர்க்காஷ்டமி. சதாபிஷேகஸ்நானம். திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் கோவில் ஆஞ்சநேயருக்கு அலங்கார திருமஞ்சன ஸேவை.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை : 7.45-8.45	10.45-11.45	04.30	03.00	12.00
மாலை : 3.15-4.15	1.30-2.30	06.00	04.30	01.30

சூலம் : மேற்கு | துலா லக்கனம் | சந்திராஷ்டமம்
பரிகாரம் : வெல்லம் | இருப்பு நா. 5 வி. 00 | மிருகசீருஷம்
கரணம் : 10.30-12 | சூரிய உதயம் : 6.02 | திருவாதிரை

உன்னைத்தவிர உனக்கு யாரும் நிம்மதி தர முடியாது

சனி, ரா, 3 சிம்-வியா, 27 மக-ரா, 27 கட-கே, செவி, கே, புசு, கீழ், திதி அஷ்டமி

இராசிபலன்
மேஷம் - கீர்த்தி
ரிஷபம் - நன்மை
மிதுனம் - சிரமம்
கடகம் - உயர்வு
சிம்மம் - கவலை
கன்னி - பக்தி
துலாம் - நட்பு
விருச்சி - பாசம்
தனுசு - வெற்றி
மகரம் - ஓய்வு
கும்பம் - அமைதி
மீனம் - மகிழ்ச்சி

19-10-2026

நவமி



அரசு விடுமுறை



சரஸ்வதி பூஜை



ஆயுத பூஜை

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். சுக்ல பட்சம். சக 1948 ஆஷ்வினம் 27
மகிஷாசுரனை அழித்து தீமையின் மீது நன்மையின் வெற்றியை நிலைநிறுத்திய துர்க்காபூஜையின் இறுதி நாள்.
அஷ்டமி கா.09.03 வரை, பின்பு நவமி - உத்திராடம் மா.02.44 வரை, பின்பு திருவோணம்.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 2 | OCT - MON திங்கள் | ஜமாஅத்துல் அவ்வல் 7 | வளர்பிறை 292 / 073

வளர். அஷ்டமி 07.32 (கா. 09.03) உத்திராடம் 21.46 (மா. 02.44) தியாஜ் 32.40 மரண 21.46 மேல் அமிர்த. **சரஸ்வதி பூஜை. ஆயுத பூஜை. திருவோண விரதம். மஹா நவமி. அரசு விடுமுறை**. ஸ்வாரோசிஷ மன்வாதி. மதுரை மீனாட்சியம்மன் சிவ பூஜை செய்தருளிய காட்சி.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை : 6.15-7.15	9.15-10.15	07.30	01.30	10.30
மாலை : 4.45-5.45	7.30-8.30	09.00	03.00	12.00

சூலம் : கிழக்கு | துலா லக்கனம் | சந்திராஷ்டமம்
பரிகாரம் : தயிர் | இருப்பு நா. 4 வி. 50 | திருவாதிரை
கரணம் : 9-10.30 | சூரிய உதயம் : 6.02 | புனர்பூசம்

தாயிற் சிறந்த கோவில் இல்லை

சனி, ரா, 3 சிம்-வியா, 27 மக-ரா, 27 கட-கே, செவி, கே, புசு, மேல், திதி நவமி

இராசிபலன்
மேஷம் - நன்மை
ரிஷபம் - அமைதி
மிதுனம் - களிப்பு
கடகம் - சிக்கல்
சிம்மம் - பயம்
கன்னி - பாராட்டு
துலாம் - வெற்றி
விருச்சி - பரிசு
தனுசு - லாபம்
மகரம் - நலம்
கும்பம் - வரவு
மீனம் - ஆக்கம்

மெல்பேர்ண் பௌத்த விகாரையில் சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை : இலங்கைப் பௌத்த துறவிக்கு 13 ஆண்டுகள் சிறை



மெல்பேர்ண் நகரில் உள்ள பௌத்த விகாரை ஒன்றில் 6 இளம் சிறுமிகளுக்குப் பாலியல் தொல்லை இழைத்த குற்றத்திற்காக, இலங்கையைச் சேர்ந்த பௌத்த துறவிக்கு ஆஸ்திரேலியாவில் 13 ஆண்டுகள் மற்றும் இரண்டு மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மெல்பேர்ண் நகரின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள 'தம்ம சரண' விகாரையின் தலைமைத் துறவியாகப் பணியாற்றிய 71 வயதுடைய நா-துன்ன விஜித என்பவருக்கே, விக்டோரியா மாகாண மாவட்ட நீதிமன்றத்தால் வியாழக்கிழமை (08) இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக 'ஏ.பி.சி. நியூஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

சமூகத்தில் தனக்கிருந்த நற்பெயரையும், பௌத்த சமூகத்தினர் தன் மீது வைத்திருந்த நம்பிக்கையையும் இந்தத் துறவி கடுமையாக மீறியுள்ளார் என நீதிபதி பர்தீப் திவானா சுட்டிக்காட்டினார்.

குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைத் தொடர்பிலான 9 குற்றச்சாட்டுகள் மற்றும் குழந்தைக்கு எதிரான ஒழுக்கக்கேடான செயல்களில் ஈடுபட்டமைக்கான 8 குற்றச் சாட்டுகள் உட்பட மொத்தம் 17 குற்றச்சாட்டுகள் விஜித மீதான வழக்கில் 2025 ஆம் ஆண்டில் நிரூபிக்கப்பட்டன.

மெல்பேர்ணின் ஸ்பிரிங்வேல் (Springvale) மற்றும் கீஸ்பரோ (Keysborough) ஆகிய பகுதிகளில் இயங்கி வந்த இந்த ஆலயத்தில், 1994 ஆம் ஆண்டுக்கும் 2002 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே இந்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர்கள் அருகிலுள்ள அறைகளில் இருந்த வேளையில், இளம் சிறுமிகளைத் தனது வதிவிட அறைக்கு அழைத்துச் சென்று விஜித தொடர்ச்சியாகப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப் பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமிகள் சமய நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்காகத் தங்கள் குடும்பத்தினருடன் இந்த ஆலயத்திற்கு வருகை தந்துள்ளனர். தங்கள் குழந்தைகள் ஆலயத்தில் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று நம்பிய பெற்றோர்களின் நம்பிக்கையை இந்தத் துறவி துஷ்பிரயோகம் செய்துள்ளதாகத் தீர்ப்பின் போது நீதிபதி திவானா தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நீடித்த மன உளைச்சல் ஏற்பட்டுள்ள தாகவும், அவர்களில் சிலர் பௌத்த சமய வழிபாடுகளுடன் தொடர்புடைய அச்ச உணர்வுகளை இன்னமும் எதிர்கொண்டு வருவதாகவும் நீதிபதி குறிப்பிட்டார்.

துஷ்பிரயோகம் நடந்து பல ஆண்டுகளுக்குப் பின்னர் பாதிக்கப்பட்ட பெண்கள் காவல் துறையினரிடம் புகார் அளித்ததை அடுத்து, 2023 ஆம் ஆண்டில் விஜித கைது செய்யப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டார்.

விசாரணையின் போது அவர் குற்றத்தை மறுத்ததுடன், சம்பந்தப்பட்ட புகார்தாரர்களில் சிலரைத் தனக்கு நினைவில் இல்லை என்றும் அவரது வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

இதன்படி, விஜித தனது சிறைத்தண்டனையின் முடிவில் குறைந்தது ஒன்பது ஆண்டுகள் மற்றும் நான்கு மாதங்களைக் கடந்த பின்னரே பிணையில்வெளிவருவதற்குத் தகுதி பெறுவார்.

தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நீதிமன்றத் தில் இருந்த ஆதரவாளர்களை நோக்கித் துறவி புன்னகைத்து, கையசைத்தமையைக் கண்டு பல பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது கோபத்தை வெளிப்படுத்தியதாக 'ஏ.பி.சி. நியூஸ்' தெரிவித்துள்ளது.

இலங்கையில் பிறந்து 15 வது வயதில் பௌத்த துறவு பூண்ட விஜித, பின்னர் சுவீடனுக்குக் குடிபெயர்ந்து அங்கு குடியுரிமை பெற்றவர் என்பதும், அதன் பின்னர் 1994 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று 'தம்ம சரண' ஆலயத்தின் தலைமைத் துறவியாகப் பொறுப் பேற்றார் என்பதும் நீதிமன்ற விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தனது சிறைத்தண்டனையை நிறைவு செய்த பின்னர் விஜித நாட்டை விட்டு வெளியேற்றப் படலாம் (Deportation) எனவும், தான் சுவீடனுக்கே திரும்பத் தயாராக இருப்பதாக அவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவருக்கு டிமென்ஷியா (ஞாபக மறதி நோய்) போன்ற உடல்நலப் பிரச்சினைகள் இருப்பதாக அவரது வழக்கறிஞர்கள் முன்னதாகவே நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர்.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இழைக்கப் பட்ட குற்றங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் தற்போது முடிவுக்கு வந்துள்ள போதிலும், விஜித கணிசமான காலத்திற்குச் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

BEHIND ME MEDIA

சட்டத்தை நடைமுறைப் படுத்துவது என்ற பெயரில் புத்தசாசனத்தின் கௌரவத்தைச் சீர்குலைக்க முடியாது!



சிறைச்சாலையிலுள்ள கலபொடஅத்தே ஞானசார தேரரின் துறவற ஆடையை அகற்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய சம்பவமானது மிகவும் பாரதூரமானது என "தேசத்தைக் காக்கும் தலைமுறை (Rata Rakina Parapura) அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் மூலம் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவது அரச கடமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு நாட்டில், இச்சம்பவம் பாரிய கேள்விகளை எழுப்பியுள்ளதாக அவ்வமைப்பின் செயலாளர் காஞ்சன டி சில்வா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பௌத்த துறவிகளின் கருத்துக்கள் தமது தரப்பின் கருத்துக்களுடன் ஒத்துப்போகாத போது அவர்களைத் தூற்றுவதும், விமர்சிக்கும் போது இழிவுபடுத்துவதும், இறுதியாக அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி துறவற ஆடையின் மீது கை வைப்பதும் தற்போதைய காலத்தில் சாதாரணமான ஒன்றாக மாற்றப்பட்டு வருகின்றது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், ஞானசார தேரர் சட்டத்துக்கு மேலானவர் எனத் தாம் ஒருபோதும் கூறவில்லை என்றும், ஒரு நபருக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பு இருக்குமாயின் அது சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது.

எனினும், சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்ற பெயரில் பௌத்த தேரர்களின் துறவற ஆடையை இழிவுபடுத்துவதற்கு எந்தவொரு அரச நிறுவனத்துக்கும் அதிகாரம் அளிக்க முடியாது எனச் சுட்டிக்காட்டியுள்ள அந்த அமைப்பு, சிறைச்சாலைத் திணைக்களம் அத்தகையதொரு செயலையே மேற்கொண்டுள்ள தாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.

போலி சமூக ஊடக கணக்குகள் மீது கடும் நடவடிக்கை



தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் போலியான முகநூல் கணக்குகளைத் தயாரித்து, சமூக வலைத்தளங்கள் ஊடாக இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் வெறுப்புப் பேச்சுக்களைப் பதிவேற்றும் செயற்பாடுகள் அவதானிக்கப் பட்டுள்ளன.

இவ்வாறான வெறுப்புப் பேச்சுக்கள் தொடர்பான பதிவுகள் குறித்து சைபர் குற்றப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சில பகுதிகளில் கைதுகளும் இடம்பெற்றுள்ளன் மேலும், இது குறித்த அறிக்கைகள் நீதிமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வில், நிலையியல் கட்டளை 27(2)-இன் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் எம். எல். ஏ. ஹிஸ்புல்லா எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"முஸ்லிம் சமூகத்தினரை மாத்திரம் இலக்காகக் கொண்டு சமூக வலைத்தளங்களில் வெறுப்புப் பேச்சுக்களும் முரண்பாடுகளை ஏற்படுத்தும் கருத்துக்களும் பதிவேற்றம் செய்யப்படுவதாக எவ்வித முறைப்பாடுகளும் தகவல்களும் கிடைக்கவில்லை.

எனினும், பொதுவாக இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் பதிவேற்றம் செய்யப் படுவதை அவதானிக்க முடிகிறது.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இருந்தவாறு போலியான முகநூல் கணக்குகளைத் தயாரித்து, அதன் ஊடாக வெறுப்புப் பேச்சுக்களைப் பரப்பும் செயற்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இவ்வாறான இன நல்லிணக் கத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தும் செயற்பாடுகள் மற்றும் வெறுப்புப் பேச்சுக்களுக்கு எதிராகச் சட்டத்தின்படி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கடந்த காலங்களில் இனவாதத்தை முன்னிலைப்படுத்திச் செயற்பட்ட தரப்பினர் இன்றும் அதே பழைய பழக்கத்துடன்தான் செயற்படுகின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டில் எத்தகைய முரண்பாடுகளும் தோற்றம் பெறவில்லை இனிவரும் காலங்களிலும் அவ்வாறான விரும்பத்தகாத நிலை எற்படாது" என்றார்.

முஸ்லிம்களின் அடையாளங்களைப் பயன்படுத்திப் போலிக் கணக்குகள்?



முஸ்லிம்களின் பெயர்கள், புகைப்படங்கள் மற்றும் அடையாளங்களைப் பயன்படுத்திப் போலியான சமூக ஊடகக் கணக்குகள் உருவாக்கப்பட்டு, அவற்றின் ஊடாக ஏனைய சமூகங்கள் மற்றும் மதங்களுக்கு எதிரான இனவாத, மதவாதக் கருத்துக்கள் வெளியிடப் படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் இன நல்லிணக்கம், சமூக அமைதி மற்றும் தேசிய பாதுகாப்பையும் பாதிக்கக்கூடிய பாரதூரமான விடயமாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நிலையியல் கட்டளை 27(2)-இன் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவிடம் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்த தாவது: நாட்டின் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத் தையும் சமாதானத்தையும் சீர்குலைக்கும் வகையில், சமூக ஊடகங்களைப் பயன்படுத்தித் திட்டமிட்ட சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவது தொடர்பில் அரசாங்கத்தின் கவனத் திற்குக்கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக, சில இனவாத சக்திகளால் முஸ்லிம்களின் பெயர்கள், புகைப்படங்கள் மற்றும் அடையாளங்களைப் பயன்படுத்திப் போலியான சமூக ஊடகக் கணக்குகள் உருவாக்கப்பட்டு, அவற்றின் ஊடாக ஏனைய சமூகங்கள் மற்றும் மதங்களுக்கு எதிரான இனவாத, மதவாதக் கருத்துக்கள் வெளியிடப் படுவதாக அவதானிக்கப்படுகிறது. சில சந்தர்ப் பங்களில், வெறுப்பையும் பதற்றத்தையும் தூண்டும் காணொளிகளும் பரப்பப்படுகின்றன.

இதனால், உண்மையான தகவல்களுக்கும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் போலியான பிரசாரங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை அறியாத பொதுமக்கள், குறிப்பாக ஏனைய சமூகங்களைச் சேர்ந்தவர்கள், முஸ்லிம் சமூகம் பற்றித் தவறான புரிதலுக்கு உள்ளாகும் நிலை ஏற்படுகிறது.

இது வெறுமனே சமூக ஊடகப் பிரச்சினை அல்ல் நாட்டின் இன நல்லிணக்கம், சமூக அமைதி மற்றும் தேசிய பாதுகாப்பையும் பாதிக்கக்கூடிய பாரதூரமான விடயமாகும்.

எனவே, முஸ்லிம்களின் பெயரில் போலியான கணக்குகளை உருவாக்கி, பிற சமூகங்களுக்கு எதிராக வெறுப்பைத் தூண்டும் பதிவுகளை வெளியிடுவதன் பின்னணியில் திட்டமிட்ட அமைப்புகளோ அல்லது குழுக்களோ செயற்படுகின்றனவா என்பதைக் கண்டறிய அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண் டுள்ளதா?

மேலும், இவ்வாறான போலியான கணக்குகள் மற்றும் வெறுப்புப் பிரசாரங்களை அடையாளம் கண்டு, அவற்றைத் தடுக்கவும், சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக் கவும் அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது?

எந்தவொரு சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், இன அல்லது மத வெறுப்பைத் தூண்டும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராகச் சட்டம் பாரபட்சமின்றி நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். எனவே, சமூக நல்லிணக்கத்தையும் நாட்டின் அமைதியையும் பாதுகாப்பதற்காக, இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன் என்றார்.

BEHIND ME MEDIA

அனோஜன் தொடர்பில் பொலிஸார் விசேட அறிவிப்பு

சவூதி அரேபியாவில் மரண தண்டனைத் தீர்ப்பை எதிர்கொண்டுள்ள சிவராசா அனோஜன் தொடர்பான தேவையற்ற கருத்து பரிமாற்றங்கள் தொடர்பில் கல்முனை தலைமையகப் பொலிஸார் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளனர்.

கல்முனை பொலிஸ் பிரிவில் வசித்து வந்த சிவராசா அனோஜனை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காக முயற்சிகள் தொடரும் நிலையில், சில விஷமிகளின் கருத்தாடல்கள் சமூக வலைத்தளங்களிலும் பொதுவான கலந்துரையாடல்களிலும் இன நல்லுறவைப் பாதிக்கும் வகையில் அமைவதை அவதானிக்க முடிவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் அவதூறான கருத்துகளை வெளியிடுவதையும், விஷமத்தனமான பேச்சுகள் மற்றும் முகநூல் பதிவுகளைப் பகிர்வதையும் தவிர்த்துக்கொள்ளுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் தொடர்பில் உடனடியாக பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறும், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

திருவள்ளுவர் பண்பாட்டு மைய நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முதலாவது கூட்டம்

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தை எதிர்காலத்தில் முறையாக நிர்வகித்து, அதன் செயற்பாடுகளைத் திட்டமிட்ட வகையில் முன்னெடுப்பதற்காக அமைச்சரவையின் அனுமதியுடன் உருவாக்கப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முதலாவது உத்தியோகபூர்வக் கூட்டம் சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையை உருவாக்குவதற்கான ஆவணத்தில் அதன் உறுப்பினர்கள் கடந்த செப்டம்பர் மாதம் 18ஆம் திகதி கையெழுத்திட்டிருந்த நிலையில், அதனைத் தொடர்ந்து சபையின் முதலாவது உத்தியோக பூர்வக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தை எதிர்காலத்தில் நிர்வகிப்பதற்கான நடைமுறைகள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஆவணங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

மேலும், இந்தக் கூட்டத்தின் போது திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் கட்டடக்கலை மற்றும் அதன் சிறப்பம்சங்கள் தொடர்பான விளக்கங்கள் சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதுடன், உறுப்பினர்கள் பண்பாட்டு மையத்தின் பல்வேறு பகுதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தமிழ் மக்களின் பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கத்தில்தான் கறுப்பு ஜூலை கலவரம் தோற்றுவிக்கப்பட்டது!



தமிழ் மக்களின் பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கத்தில்தான் 1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரம் திட்டமிட்டுத் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், இறுதியில் அது தமிழ் - சிங்கள கலவரமாக விஸ்வரூபம் எடுத்தது. எனவே, கறுப்பு ஜூலை சம்பவத்துக்குச் சிங்கள இனத்தவர் என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த தமிழ் மக்களிடமும் பகிரங்கமாக மன்னிப்புக் கோருகிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (அக்டோபர் 9, 2026) இடம்பெற்ற, 1983 கறுப்பு ஜூலையின் போது நடந்த இன வன்முறைகள் குறித்த உண்மையைக் கண்டறிவதற்கும், அதனால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்கும், மேலும் இதுபோன்ற இன வன்முறைகள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கான பரிந்துரைகளைச் செய்வதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும் என வலியுறுத்தி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் முன்வைத்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றி யபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தயாசிறி ஜயசேகர மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

“1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் வெடித்தபோது எனக்கு 14 வயது. அந்த இக்கட்டான காலகட்டத்தில் எனது தந்தை பெருமளவிலான தமிழ் மக்களை எமது வீட்டுக்கு அழைத்து வந்து, அவர்களுக்கு உணவளித்துப் பாதுகாத்தார். அந்தத் துயரமான நிகழ்வுகளை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது.

தமிழ் மக்களின் பொருளாதாரத்தை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கத்தில்தான் 1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரம் உருவாக்கப்பட்டது. எனினும், இறுதியில் அந்தக் கலவரம் தமிழ் - சிங்கள மக்களுக்கிடை யேயான மோதலாக மாறியது. இதன் நேரடி விளைவாகவே விடுதலைப் புலிகள் அமைப்பு மேலும் பலம்பெற்றதுடன், பெருமளவிலான தமிழ் இளைஞர், யுவதிகள் ஆயுதப் போராட்டத்தில் இணைந்தனர்.

இதனைத் தொடர்ந்து நாட்டில் 30 வருட கால கொடூர யுத்தம் தோற்றம் பெற்றதுடன், ஒட்டுமொத்த நாடும் சீரழிந்து போனது.

இதன் பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்கள் இன்றும் தொடர்கின்றன. 1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தைத் தொடர்ந்து பெருமளவிலான தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறினர்.

தாய்நாட்டைத் துறந்து சென்றோரின் பிள்ளைகள் இன்று இலங்கை தொடர்பில் நல்லதொரு நிலைப்பாட்டில் இல்லை. ஏனெனில், அந்த வடுக்களும் வேதனைகளும் இன்றும் அவர்களின் மனங்களில் ஆழமாகப் பதிந்துள்ளன.

கறுப்பு ஜூலை சம்பவத்தின் எதிர்விளைவுகள் இன்றும் சமூகத்தில் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் இவ்வாறான சோகமான நிலைமைகள் எக்காரணம் கொண்டும் எமது நாட்டில் மீண்டும் ஏற்படக் கூடாது. அதற்காக நாம் அனைவரும் கட்சி பேதங்களைக் கடந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அத்துடன், கறுப்பு ஜூலை சம்பவத்துக்குச் சிங்கள இனத்தவர் என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த தமிழ் மக்களிடமும் நான் மனப்பூர்வமாக மன்னிப்புக் கோருகிறேன்” என்றார்.

தன்னுயிரை ஈகம் செய்த முதல் பெண் 2ஆம் லெப்.மாலதி அவர்களின் நினைவேந்தல்!

மண்ணின் உரிமைக்காகத் தன் இளமைக் காலத்திலேயே தன்னுயிரை ஈகம் செய்த முதல் பெண் ஆளுமை 2ஆம் லெப். மாலதி அக்கா அவர்களின் 39-ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை முன்னிட்டு, 10.10.2026 அன்று காலை 9:15 மணி அளவில் யாழ் கோப்பாயில் உள்ள அவரது நினைவிடத்தில் ஈகைச்சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தி, அகவணக்கத்துடன் உணர்வுபூர்வமாக நினைவேந்தல் செலுத்தப் பட்டது.

வரலாற்றில் பெண்களின் துணிச்சலுக்கும், அர்ப்பணிப்பிற்கும் என்றும் அழியாத சான்றாக விளங்கும் மாலதி அக்காவின் நினைவுகளை இந்நாளில் போற்றி வணங்குவோம்.

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் அமைந் துள்ள மாங்குளம் பிரதேச மண்டபத்தில் 2ஆம் லெப். மாலதியின் 39ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் தாயக மகளிர் தின நிகழ்வும் தினம் இடம்பெற்றுள்ளது.

மாவீரர்கள் மற்றும் போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தினரின் ஏற்பாட்டில், ஆரம்பமான குறித்த நிகழ்வில் 2ஆம் லெப். மாலதியின் நினைவுகள் நினைவுகூரப்பட்டதுடன், தாயக மகளீரின் அர்ப்பணிப்புகளும் பங்களிப்புகளும் நினைவு கூரப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் குறித்த கிராமமக்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

மன்னார் ஆட்காட்டிவெளியில் உள்ள அவரது இல்லத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப் பட்டது.

இதன்போது, மாலதியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் இணைந்து அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.







































வருடாந்திர நன்றி தெரிவிப்பு நிகழ்வில் Toronto மேயர் வேட்பாளர்கள் பங்கேற்பு

தொடர்ச்சி

மேயர் வேட்பாளர்களின் கருத்துகள்

டெய்லி பிரெட் உணவு வங்கியில் செய்தியாளர்களிடம் பேசிய தற்போதைய மேயர் ஒலிவியா சௌ (Olivia Chow), நகரின் வாழ்க்கைச் செலவு நெருக்கடியைச் சமாளிக்க பள்ளி வயது குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும், பொதுப் போக்குவரத்துக் கட்டணங்களைக் குறைத்துள்ளதாகவும், மலிவு விலை வீடுகளைக் கட்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒலிவியா சௌ பதவியேற்றது முதல், நகருக்குச் சொந்தமான 5,271 குடியிருப்பு அலகுகளின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் கிரியேட்TO (CreateTO) நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்பட்ட 1,680 மலிவு விலை அலகுகளும் அடங்கும். இந்தத் திட்டங்கள் 2027 முதல் 2030 வரை குடியேறுவதற்குத் தயாராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

“எந்தக் குழந்தையும் பசியுடன் இருக்கக் கூடாது” என்று அவர் கூறினார். ”இங்கே உணவு வங்கியைப் பயன்படுத்துபவர்களில் நல்ல ஒரு பகுதியினர் வேலை செய்பவர்கள்தான். அவர்கள் பல வேலைகளைச் செய்தாலும், வாழ்க்கையை ஓட்ட முடியவில்லை.”

தற்போதைய கவுன்சிலரான பிராட் பிராட்போர்ட் (Brad Bradford) பேசுகையில், நகரில் வாழ்வது தாங்க முடியாத செலவைக் கொண்டதாக மாறியுள்ளது என்றார். அதனால்தான் சொத்து வரியை முடக்குவதற்கும், தண்ணீரை ஒரு பொதுப் பயன்பாடாக மாற்றுவதற்கும், நில கைமாற்று வரியைக் குறைப்பதற்கும் தான் விரும்புவதாகக் கூறினார். நில கைமாற்று வரி என்பது நகருக்கான முக்கிய வருவாய் ஆதாரம் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

“டொராண்டோவில் எங்களிடம் ஒரு பெரிய வாழ்க்கைச் செலவுச் சவால் உள்ளது” என்று அவர் கூறினார். ”இது குடும்பங்கள், முதியவர்கள் மற்றும் புதியவர்களுக்கான நகரமாக இருக்க வேண்டுமென்றால், அது மலிவு விலைக்கேற்ப வாழக்கூடிய நகரமாக இருக்க வேண்டும்.”

வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, குறிப்பாக இளைஞர்களுக்காக, மற்றும் பள்ளி உணவுத் திட்டத்தை விரிவுபடுத்துவது ஆகியவை தனது முன்னுரிமைகளில் அடங்கும் என்றும் கூறினார்.

அதிகரித்துக் கொண்டு செல்லும் Toronto வின் நகராட்சித் தேர்தல் பரபரப்புக்கள்!

தொடர்ச்சி

மேயர் பதவிக்காக 50-க்கும் மேற்பட்ட வேட்பாளர்களும், ஒவ்வொரு வட்டாரத்திலும் (ward) பல கவுன்சிலர்களும் போட்டியிடும் நிலையில் - அவர்கள் அனைவரும் வீட்டுவசதி முதல் பொதுப் போக்குவரத்து மலிவு விலை மற்றும் பொதுப் பாதுகாப்பு வரை அனைத்தையும் வாக்குறுதிகளாக அளித்து வருகின்றனர் - இதனால் மக்கள் குழப்பமடைவது எளிது.

நீங்களும் அப்படிப்பட்டவர்களில் ஒருவர் என்றால், தேர்தல் நாளுக்கு முன்பு உங்களை எவ்வாறு தகவல்களுடன் தயார்படுத்திக் கொள்ளலாம் என்பது இங்கே:

தேர்தல், வேட்பாளர்கள் மற்றும் ஜனநாயக முறை குறித்து குடியிருப்பாளர்கள் மேலும் அறிந்துகொள்ள உதவ, டொரன்டோ பொது நூலகம் “கொண்டாடுவோம் ஜனநாயகம்” என்ற நகர் தழுவிய முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

இதன் முக்கிய அம்சம் KnowYourVote.to ஆகும் இது ஒரு ஊடாடும் இணையதளமாகும். இதன் மூலம் குடியிருப்பாளர்கள் தங்கள் வட்டாரங்களில் போட்டியிடும் வேட்பாளர்களைக் கண்டறிந்து, பொதுப் பாதுகாப்பு மற்றும் வீட்டுவசதி உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளில் அவர்களின் நிலப்பாடுகளை ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

வாக்காளர் ஈடுபாடு, நிறுவனங்கள் மீதான நம்பிக்கை மற்றும் தவறான தகவல்கள் குறித்தும் நூலகம் நிகழ்வுகளை நடத்தி வருகிறது.

நூலகத்தின் கற்றல் மற்றும் சமூக ஈடுபாடு மேலாளர் நன் டேவீஸ் (Nan Davies) கூறுகையில், இந்த முன்னெடுப்பானது மக்கள் தங்கள் நகரம் மற்றும் ஜனநாயகம் ஆகிய இரண்டுடனும் அதிக நெருக்கக்க உணர்வைப் பெற உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார்.

“நூலகம் ஒரு நடுநிலையான வளம் என்பதாலும், அதிக நம்பகத்தன்மை கொண்ட வளம் என்பதாலும், நாங்கள் இந்தத் தகவலை முற்றிலும் கட்டணமின்றி வழங்குவது மட்டுமல்லாமல், இது முற்றிலும் பக்கச்சார்பற்றதாகவும் நடுநிலையானதாகவும் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய தாகவும் இருப்பது இதன் ஒரு தனித்தன்மையாகும்” என்று டேவனீஸ் கூறினார்.

மேயர் தேர்தல் வாக்குறுதிகளைத் தாண்டி மேலதிகமாக எதிர்பார்க்கும் Scarborough!

தொடர்ச்சி

Scarborough வில் அதிக கவனம் பெற்றுள்ள முக்கிய பிரச்சினைகளில் போக்குவரத்து, வீட்டுவசதி, இளைஞர் பாதுகாப்பு மற்றும் வீதிப் போக்குவரத்து நெரிசல் ஆகியவை அடங்கும்.

இருப்பினும், டொரன்டோவின் பொதுப் போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் நிலவும் நீண்டகால இடைவெளிகளைச் சுட்டிக்காட்டும் பல நிபுணர்களும் சமூகத் தலைவர்களும், வாக்குப்பெட்டியில் இந்தப் பிராந்தியம் ஏற்படுத்தக்கூடிய செல்வாக்கையும் தாண்டி இதற்கான முக்கியத்துவம் மிக அதிகம் என்று கூறுகின்றனர்.

”குறிப்பாக நகரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டதில் இருந்து , டொரன்டோ நகர அரசியலில் ஸ்கார்பரோ பிராந்தியம் பெரும்பாலும் கண்டுகொள்ளப்படாத ஒன்றாகவே இருந்துள்ளது,” என்று ‘Scarborough சமூக புதுப்பித்தல் அமைப்பின்“ தலைவர் லாரி வாட்மோர் தெரிவித்தார்.

இரு வேட்பாளர்களுக்கும் இடையிலான பிரதான கவனப் புள்ளியாக உருவெடுத்துள்ள ஒரு துறை, ஸ்கார்பரோவின் பொதுப்போக்குவரத்தும் சமீபத்திய ஆண்டுகளில் அதில் முன்னேற்றம் இல்லாத நிலையுமாகும்.

ஸ்கார்பரோ சுவு (ரயில் சேவை) மூடப்பட்டதைத் தொடர்ந்து, உள்ளூர் பஸ் பயணிகளுக்கான சேவை நம்பகத்தன்மையை மேம்படுத்தும் நோக்கில் தான் திறந்து வைத்த “ஸ்கார்பரோ பஸ்வே“ திட்டத்தை ஒலிவியா சௌ சுட்டிக்காட்டியுள்ளார்.

மேயராக இருந்த காலத்தில், நகரத்தின் போக்குவரத்து கட்டண உயர்வை நிறுத்தி வைப்பதையும் அவர் ஊக்குவித்தார். மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால், 2027 ஆம் ஆண்டில் நான்காவது ஆண்டாகவும் டொரன்டோ போக்குவரத்து ஆணைய கட்டணங்களை உயர்த்தாமல் நிறுத்தி வைப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கத்துக்கு அவுஸ்திரேலியாவில் அஞ்சலி!



தெடர்ச்சி

சிட்னி ரெக் பர்ன் சமூக மையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந் நினை வஞ்சலி நிகழ்ச்சி இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்று கலந்து கொண்ட தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சி.அ. யோதிலிங்கம் பற்றிய நினைவுரையை ஆற்றியிருந்தார்.

அவுஸ்திரேலியாவின் பிரபல இதய சிகிச்சை நிபுணர் வை. மன்மோகன் தலைமை தாங்கிய இந்நினைவஞ்சலி நிகழ்ச்சியில் ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தார்கள்.

இந்நிகழ்ச்சியை அவுஸ்திரேலியத் தமிழ்க் காங்கிரசும், நியூ சவுத் வேல்ஸ் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

BEHIND ME MEDIA

இதற்கிடையில், பிராட்போர்ட், ஸ்கார்பரோவின் பல வீதிகளில் உள்ள ”தேவையற்ற” சிவப்பு நிற பஸ் முன்னுரிமைப் பாதைகளை அகற்றி, அந்த இடத்தை பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்கு மீண்டும் வழங்குவதாக அல்லது அதிக ஆக்கிரமிப்பு வாகனப் பாதைகளாக மாற்றுவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

வேகமான பொதுப் போக்குவரத்தை விரும்பும் குடியிருப்பாளர்களுக்கும், வீதி நெரிசலில் இருந்து நிவாரணம் தேடுபவர்களுக்கும் இடையே சாலை இடத்தை பங்கீடு செய்யும் விவாதம் ஒரு பிளவை உருவாக்கியுள்ளதாக அவர் விளக்குகிறார்.

“அரசியல்வாதிகள் இதை ஒரு பூஜ்ஜிய தொகை விளையாட்டாக உருவாக்கிப் பயன்படுத்துகிறார்கள்,” என்று ∴பார்பர் கூறினார். ”ஒன்றில் கார்களின் நிலை மோசமடைவதன் மூலம் போக்குவரத்து சேவை மேம்படும், அல்லது அதற்கு நேர்மாறாக நடக்கும் என்ற நிலை உருவாக்கப்படுகிறது.”

சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் இன ரீதியான சுகாதார ஏற்றத்தாழ்வுகள் குறித்து ஆராய்ச்சி செய்யும் டொரன்டோ ஸ்கார்பரோ பல்கலைக்கழகத்தின் ஆரோக்கியம் மற்றும் சமூகத் துறையின் உதவிப் பேராசிரியர் நொடிஷா மாசாகுவா, சுகாதாரச் சேவையே மற்றுமொரு முக்கிய கவலை என்கிறார்.

ஸ்கார்பரோவில் அதன் மக்கள்தொகைக்குத் தேவையான அளவு சுகாதாரச் சேவைகளும் மருத்துவர்களும் இல்லை என்றும், இதனால் சிறப்புச் சிகிச்சைகளுக்காகச் சிலர் டவுன்டவுன் பகுதி வரை செல்ல வேண்டியுள்ளது என்றும் மாசாகுவா குறிப்பிட்டார்.

ஸ்கார்பரோ வாக்காளர்களில் 32 சதவீதம் பேர் இன்னும் யாருக்கு வாக்களிப்பது என்று தீர்மானிக்காமல் இருப்பதாக அந்த ஆய்வு காட்டியுள்ளது.

மலேஷிய நாடாளுமன்றில் திருக்குறள்!



தொடர்ச்சி

மலேஷிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் அந்நாட்டு பார்லிமென்டில், 2027ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்து உரையாற்றும் போது, திருக்குறளை மேற்கோள் காட்டிப் பேசினார்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு

என்ற திருக்குறளை மேற்கோள் காட்டி ஒரு சிறந்த நாட்டிற்குத் தேவையான தகுதிகள் எவை என்பதை அவர் விளக்கினார். இந்த வீடியோ இணையத்தில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

குறையாத விளைபொருள்களையும், தகுதியான சான்றோர்களையும், கேடில்லாத பெருஞ்செல்வர் களையும் கொண்டு, இவை அனைத்தும் ஒன்றாகக் கூடிப் பொருந்தி வாழும் இடமே உண்மையான சிறந்த நாடு என்பது திருக்குறளின் பொருளாகும்.

மலேஷிய பிரதமர், இந்தியர்கள் மீதும், குறிப்பாக தமிழர்கள் மீதும் பேரன்பு கொண்டவர். திருக்குறளை போற்றி புகழ்பவர். 2023ம் ஆண்டு பட்ஜெட் தாக்கலின்போது, ‘இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு’ என்ற திருக்குறளை பார்லியில் கூறியவர் அன்வர் இப்ராஹிம்.

2024ம் ஆண்டு பட்ஜெட் தாக்கலின்போது, ‘உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு’ என்ற திருக்குறளை கூறி பொருள் விளக்கம் கூறியது குறிப்பிடத்தக்கது.

ஷிரந்தி கைதானமை சட்டவிரோதம்?

தொடர்ச்சி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சட்டத்தரணிகள் சங்கம், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இது தொடர்பில் முறைப்பாடு ஒன்றை அளித்துள்ளது. ஷிரந்தி ராஜபக்ஷ கைது செய்யப்பட்ட விவகாரம் மனித உரிமை மீறல் என சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இது எவ்வித நியாயமான அடிப்படையும் இன்றி மேற்கொள்ளப்பட்ட கைதாகும் என அந்த சங்கத்தின் சட்டத்தரணி அமிதிகா ரத்நாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். ஷிராந்தி ராஜபக்ஷ கைது செய்யப்பட்டது சட்டவிரோதமானது எனவும், அதற்கு உரிய அடிப்படை எதுவுமில்லை எனவும் சட்டத்தரணி சமன் கலப்பத்தி கூறினார். மேலும், இது அவரது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரது கண் அறுவைச் சிகிச்சைக்கு அமைவாக தகுந்த மருத்துவரிடம் அவரை அனுப்பி பரிசோதிக்குமாறு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை சிறைச்சாலைகள் ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் புறக்கணித்து செயற்பட்டமை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாக சட்டத்தரணி மேலும் சுட்டிக்காட்டினார்.





உடலுக்கு உடனடி புத்துணர்ச்சி தரும் இயற்கை பானங்கள்

கொளுத்தும் வெயிலுக்கும் சோர்வான நாள்களுக்கும் உடனடி நிவாரணமாகவும் புத்துணர்ச்சியாகவும் கைகொடுப்பது இயற்கை நமக்கு வழங்கியுள்ள எளிய பானங்கள்தான்! அந்த வகையில், கிராமத்துப் பாரம்பரியம் கொண்ட அருகம்புல் சாறு, கரும்புச்சாறு மற்றும் தாகம் தீர்க்கும் இளநீர் ஆகியவை உடலுக்குத் தேவையான ஆற்றலைத் தரவல்லவை.

ஆனால், இந்த இயற்கைப் பானங்கள் பற்றிய சில பொதுவான அதீத நம்பிக்கைகளும் உண்மைகளும் என்ன? எந்த அளவுகளில் இவற்றைப் பருகுவது பாதுகாப்பானது? உடலுக்கு உண்மையான புத்துணர்வைத் தரும் இந்த அற்புதப் பானங்களின் பின்னுள்ள உண்மைகளைத் தெரிந்துகொள்ள தொடர்ந்து படியுங்கள்!

இயற்கை நமக்குக் கொடுத்திருக்கும் சில எளிய பானங்களை சரியான முறையில் எடுத்துக் கொண்டால், அவை உடலுக்கு புத்துணர்ச்சியையும் தேவையான சத்துக்களையும் அளிக்கக்கூடும். அந்த வரிசையில் அருகம்புல் சாறு, கரும்புச்சாறு, இளநீர் ஆகியவற்றுக்கும் தனிச்சிறப்பு உண்டு.

அருகம்புல் சாறு போன்ற இயற்கை பானங்கள் தரும் புத்துணர்ச்சி

கிராமங்களில் காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் இயற்கை உணவுப் பொருட்களில் அருகம்புல்லும் ஒன்று. அருகம்புல்லுடன் சிறிதளவு மிளகு, சீரகம், உப்பு சேர்த்து கொதிக்க வைத்து தயாரிக்கப்படும் பானத்தைப் பலர் பாரம்பரியமாகப் பருகி வருகின்றனர்.

அருகம்புல்லில் சில தாவரச் சத்துக்களும் நுண்ணூட்டங்களும் இருப்பதால், இது உடலுக்கு புத்துணர்ச்சி தரும் பானமாகக் கருதப்படுகிறது. சீரகம் செரிமானத்துக்கு உதவக்கூடும். மிளகு உடலுக்கு வெப்பத்தையும் மணத்தையும் சேர்க்கிறது.

ஆனால், சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால், ஆஸ்துமா போன்ற நோய்களை அருகம்புல் சாறு குணப்படுத்தும் என்று கூறுவதற்கு போதுமான மருத்துவ ஆதாரம் இல்லை. ஏற்கெனவே மருந்துகள் எடுத்துக்கொள்பவர்கள், இதை மருந்துக்கு மாற்றாக நினைக்காமல் மருத்துவரின் ஆலோசனையுடன் பயன்படுத்துவது நல்லது.

கரும்புச்சாறு போன்ற இயற்கை பானங்கள் குடிப்பதில் உள்ள எச்சரிக்கைகள்:

வெயில் காலத்தில் ஒரு டம்ளர் குளிர்ச்சியான கரும்புச்சாறு குடித்தால் உடலும் மனமும் புத்துணர்ச்சி பெறுவது போல இருக்கும்.

கரும்புச்சாற்றில் இயற்கையான சர்க்கரையும் சிறிதளவு தாதுக்களும் உள்ளன. அதனால் உடலுக்கு விரைவாக ஆற்றல் கிடைக்க உதவும். அதிக வெப்பத்தில் சோர்வாக இருப்பவர்களுக்கு இது புத்துணர்ச்சி தரக்கூடும்.

ஆனால், கரும்புச்சாறு இனிப்பான பானம் என்பதால் அளவோடு எடுத்துக்கொள்வது அவசியம். குறிப்பாக சர்க்கரை நோய் உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும்.

உடலுக்கு ஆற்றல் தரும் கரும்புச்சாறு:

கரும்புச்சாறு வெறும் இனிப்பான பானம் மட்டுமல்ல. கரும்பிலிருந்து இயற்கையாகக் கிடைக்கும் சாற்றில் சிறிதளவு பொட்டாசியம், கால்சியம், இரும்பு போன்ற தாதுக்களும் உள்ளன. உடல் சோர்வாக இருக்கும் நேரத்தில் ஒரு டம்ளர் கரும்புச்சாறு உடனடி ஆற்றலைத் தரக்கூடும்.

குறிப்பாக வெயில் அதிகமாக இருக்கும் நாட்களில் உடலுக்குத் தேவையான திரவத்தை வழங்குவதிலும் இது உதவுகிறது. இருப்பினும், இதில் இயற்கையான சர்க்கரை அதிகம் இருப்பதால் தினமும் அதிக அளவில் குடிப்பதைத் தவிர்ப்பது நல்லது.

கரும்புச்சாற்றைச் சுத்தமான இடத்தில் தயாரித்து உடனடியாகப் பருகுவது முக்கியம். அதிக நேரம் வைத்திருக்கும் சாற்றில் கிருமிகள் வளர வாய்ப்புள்ளது.

எனவே, சாலையோரங்களில் வாங்கும்போது தயாரிக்கும் இடத்தின் சுத்தத்தையும் கவனிக்க வேண்டும். இஞ்சி, எலுமிச்சை, ஐஸ் போன்றவற்றைச் சேர்க்காமல் இயற்கையான கரும்புச்சாற்றை அளவோடு பருகுவது ஒரு நல்ல பழக்கமாக இருக்கலாம். உடல் எடையைக் குறைக்கும் பானம் என்று நினைத்து அதிகமாகக் குடிப்பது மட்டும் சரியான அணுகுமுறை அல்ல.



இளநீர் போன்ற இயற்கை பானங்கள் வழங்கும் உண்மையான நன்மைகள்:

இளநீர் இயற்கையாகக் கிடைக்கும் புத்துணர்ச்சியான பானம். குறிப்பாக வெயில் காலத்தில் உடலில் நீர்ச்சத்து குறையும்போது இளநீர் உதவியாக இருக்கும்.

இதில் பொட்டாசியம் உள்ளிட்ட சில தாதுக்கள் இருப்பதால் உடலுக்குத் தேவையான மின்னியக்கச் சமநிலையைப் பராமரிக்க உதவுகிறது. அதிக இனிப்பு கொண்ட குளிர்பானங்களுக்கு மாற்றாக, அளவோடு இளநீரைத் தேர்ந்தெடுப்பது நல்லது.

ஆனால் சிறுநீரக நோய் போன்ற குறிப்பிட்ட உடல்நலப் பிரச்சனைகள் இருப்பவர்கள், பொட்டாசியம் அளவு தொடர்பான காரணங்களால் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

இளநீரின் சிறப்பு அதன் இயற்கையான தன்மையிலேயே இருக்கிறது. செயற்கை நிறமோ, மணமோ தேவையில்லை தேங்காயிலிருந்து கிடைக்கும் நீரையே நேரடியாகப் பருகலாம்.

இதில் உள்ள இயற்கையான சர்க்கரை உடலுக்கு சிறிதளவு ஆற்றலையும் அளிக்கிறது. உடற்பயிற்சிக்குப் பிறகு அல்லது அதிகமாக வியர்த்த நேரங்களில், சாதாரண தண்ணீருடன் சேர்த்து இளநீரையும் அளவோடு எடுத்துக்கொள்ளலாம்.

இளநீருடன் அதன் வழுவழுப்பான தேங்காய் வழுக்கையும் பலருக்குப் பிடித்தமானது. இதில் நார்ச்சத்து மற்றும் சில ஊட்டச்சத்துக்கள் இருப்பதால், பசியை ஓரளவு கட்டுப்படுத்தும் சிற்றுண்டியாகவும் அமையலாம்.

ஆனால் இளநீர் எல்லா நோய்களுக்கும் மருந்து என்ற எண்ணம் வேண்டாம். உடலுக்குத் தேவையான நல்ல உணவுகளில் ஒன்றாகவும், இயற்கையின் சுவையான கொடையாகவும் அதை ரசிப்பதே சிறந்தது.

அருகம்புல் சாறு, கரும்புச்சாறு, இளநீர் என இயற்கை நமக்குக் கொடுத்திருக்கும் பானங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தன்மை உண்டு. ஆனால் "இது குடித்தால் எல்லா நோய்களும் தீரும்" என்ற நம்பிக்கையை விட, அவற்றை சமச்சீர் உணவின் ஒரு பகுதியாக அளவோடு எடுத்துக்கொள்வதே சிறந்தது.

நோயைத் தடுப்பதிலும் உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதிலும் ஒரு பானத்தை மட்டும் நம்பாமல், நல்ல உணவு, போதுமான தண்ணீர், உடற்பயிற்சி, நல்ல தூக்கம் ஆகிய அனைத்தையும் இணைத்துக் கொண்டால்தான் உண்மையான பலன் கிடைக்கும்.

நம் முன்னோர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தவர்கள். அருகம்புல் சாறு, கரும்புச்சாறு, இளநீர் போன்ற எளிய பானங்களை அளவோடு எடுத்துக்கொள்வது உடலுக்கு புத்துணர்ச்சி தரும்.

ஆனால், எந்த ஒரு பானத்தையும் எல்லா நோய்களுக்கும் மருந்தாக நினைக்கக் கூடாது. இயற்கை உணவுகளோடு நல்ல உணவு, உடற்பயிற்சி, போதிய தூக்கம் ஆகியவற்றையும் சேர்த்துக்கொண்டால் ஆரோக்கியமான வாழ்க்கையை நாமும் சுவைக்கலாம்.

வாசகர்கள் செயற்கை குளிர்பானங்களைத் தவிர்த்து, இயற்கையான பானங்களைச் சரியான முறையில் தேர்ந்தெடுத்துப் பருகுவதன் மூலம் உடலுக்குத் தேவையான புத்துணர்ச்சியையும் நீண்டகால ஆரோக்கியத்தையும் பெறுவர்.

புத்தகத்தில் ஓர் உலகம்... வாழ்க்கையில் இன்னோர் உலகம்!

BEHIND ME MEDIA

கடந்த வார தொடர்ச்சி



இந்தக் கவலைகள் எல்லாமே காரண மில்லாதவை என்று சொல்ல முடியாது. குழந்தைகளின் பாதுகாப்பைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய உண்மையான காரணங்கள் இருக்கின்றன. ஆனால், அந்தப் பாதுகாப்பின் பெயரில், குழந்தை தானாக உலகத்தைப் பார்த்து, அனுபவித்து, தேடி, தவறி, மீண்டும் புரிந்துகொள்ளும் இடத்தை நாம் எவ்வளவு குறைத்துவிட்டோம்?

அந்தச் சிறுமி நாயைத் தேடிச் செல்கிறாள். தேடும்போது வழி மாறுகிறது. ஒரு புதிய மனிதரைச் சந்திக்கிறாள். அவருடைய வீட்டுக்குச் செல்கிறாள். அங்கே ஒரு புதிய அனுபவத்தைப் பெறுகிறாள். அடுத்த நாள் அவள் வீட்டுக்குத் திரும்புகிறாள். அவள் அந்த நாளில் ஒரு பாடப் புத்தகத்தைப் படிக்கவில்லை. ஆனால் அவள் வாழ்க்கையைப் படித்துக்கொண்டிருக்கிறாள். அதுதான் அந்தக் காட்சி எனக்கு உணர்த்தியது.

குழந்தையின் பாதுகாப்பு முக்கியம். ஆனால், பாதுகாப்பு என்பது குழந்தையை உலகத்தில் இருந்து முழுமையாகப் பிரித்து வைப்பதாக மாறிவிட்டால், உலகத்தைப் புரிந்துகொள்வதற்கான அனுபவங் களையும் நாம் குறைத்துவிடுகிறோம்.

ஒரு குழந்தை உலகத்தை நேரடியாக அனுபவிக்கும் போதுதான், அதிலிருந்து கேள்விகள் உருவாகின்றன. கேள்வியிலிருந்து தேடல் வருகிறது. தேடலில் இருந்து புரிதல் வருகிறது. அந்தப் புரிதல் பின்னர் வேறு ஒரு சூழ்நிலையில் பயன்படுத்தப்படும் அறிவாக மாறுகிறது. அதனால், இது வெறும் குழந்தைகளுக்குச் சுதந்திரம் கொடுப்பது பற்றிய கேள்வி அல்ல. இது குழந்தைகள் எப்படிக் கற்கிறார்கள் என்பதற்கான கேள்வி.

கலாச்சாரம் என்ன செய்கிறது?

ஒரு குழந்தை வீட்டில் எதைப் பார்க்கிறது என்பதும், அது பள்ளியில் எதைப் படிக்கிறது என்பதும் எப்போதும் ஒன்றாக இருக்காது.

பள்ளியில்: "கேள்வி கேள்."

வீட்டில்: "பெரியவர்கள் சொல்வதைக் கேள்."

பள்ளியில்: "ஆதாரத்தைப் பார்."

வாழ்க்கையில்:

"எல்லாரும் இப்படித்தான் செய்கிறார்கள்."

பள்ளியில்: "முயற்சி செய்து கண்டுபிடி."

வாழ்க்கையில்: "தவறு பண்ணாதே."

இப்படி இரண்டு விதமான செய்திகள் தொடர்ந்து கிடைக்கும்போது, குழந்தை எதை உள்வாங்குகிறது என்பது அதன் அனுபவத்தைப் பொறுத்தது. அதனால் கல்வியைப் பாடநூலில் மட்டும் தேட முடியாது.

ஒரு குழந்தை எதைப் படிக்கிறது என்பதோடு, அது எப்படிப்பட்ட சூழலில் வாழ்கிறது என்பதும் அது கற்றதை எப்படி அர்த்தப்படுத்துகிறது என்பதைத் தீர்மானிக்கிறது.

"படித்தால் போதும்" என்ற எண்ணம் நம்முடைய கல்வி அமைப்பில் ஒரு குறிப்பிட்ட அளவு அறிவை எல்லோரிடமும் கொண்டு சேர்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்காக பாடத்திட்டம், பாடநூல், தேர்வு போன்ற அமைப்புகள் உருவாகின்றன.

"இந்தப் பாடத்தில் தேர்ச்சி பெற இதைத் தெரிந்துகொள்ள வேண்டும்",

"இந்தப் பட்டத்தை முடிக்க இந்தக் கருத்துகள் தெரிந்திருக்க வேண்டும்" என்று ஒரு குறைந்தபட்ச அறிவு நிலை உருவாக்கப்படுகிறது.

இதில் தவறு இல்லை. ஆனால் ஒரு கட்டத்தில் "நான் இதைத் தெரிந்துகொண்டேன்" என்பதே "நான் இதைக் கற்றுக்கொண்டேன்" என்று கருதப்படத் தொடங்குகிறது. இங்கேதான் பிரச்சினை.

ஒரு மாணவன் ஒரு கணிதப் பிரச்சினையைப் பாடநூலில் கொடுத்திருக்கும் முறையில் தீர்க்கலாம். ஆனால் அதே கணிதச் சிந்தனையை வாழ்க்கையில் எங்கே பயன்படுத்துவது என்று அவனுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

ஒரு மாணவன் அறிவியலின் ஒரு கருத்தைத் தேர்வில் சரியாக எழுதலாம். ஆனால், தன்னைச் சுற்றியுள்ள ஒரு நிகழ்வைப் பார்த்து, அதே அறிவைப் பயன்படுத்தி கேள்வி எழுப்பாமல் இருக்கலாம். ஒரு மாணவன் சமூக அறிவியலில் சமூக அமைப்புகளைப் பற்றி படிக்கலாம். ஆனால் தன்னுடைய சமூகத்தில் நடக்கும் ஒன்றைப் பார்த்து, "இது ஏன் இப்படி இருக்கிறது?" என்று கேட்காமல் இருக்கலாம்.

அதனால் நாலெட்ஜ் அக்விசிஷன் (Knowledge acquisition) மற்றும் நாலெட்ஜ் அப்ளிகேஷன் (knowledge application) இரண்டும் ஒன்றல்ல.



அப்ளிகேஷன் தானாக வராது. நாம் பல நேரங்களில் ஒரு தவறான எண்ணத்தை வைத்திருக்கிறோம்.

பள்ளியில் படிப்பான். கல்லூரியில் இன்னும் கொஞ்சம் படிப்பான். பட்டம் முடிப்பான். பின்னர் வாழ்க்கைக்குள் சென்றவுடன் தானாக எல்லாவற்றையும் சமாளிக்கக் கற்றுக்கொள்வான்.

ஆனால், அப்ளிகேஷன் என்பது தானாக நடக்கும் செயல்முறை அல்ல.

ஒரு குழந்தை சிறு வயதிலிருந்தே ஒவ்வொரு விஷயத்துக்கும் ஒரு தயாரான பதிலை மட்டுமே பெற்றிருந்தால், தானாக ஒரு பிரச்சினையை அணுகும் திறன் எப்படி உருவாகும்?

ஒவ்வொரு வேலையும் "சீக்கிரம் முடி" என்பதற்காகச் செய்யப்பட்டிருந்தால், அந்த வேலையைப் பற்றி "ஏன் இப்படிச் செய்கிறேன்?" என்று யோசிக்கும் பழக்கம் எப்படி உருவாகும்?

ஒவ்வொரு தவறும் தோல்வியாகக் கருதப்பட்டால், புதிய ஒன்றை முயற்சி செய்யும் தைரியம் எப்படி உருவாகும்?

ஒரு குழந்தை எதையாவது தேடிச் செல்லும்போது, அது உடனடியாக ஒரு மதிப்பெண்ணாக மாற வேண்டிய அவசியமில்லை.

சில நேரங்களில் அது வெறும் அனுபவமாக இருக்கலாம். அந்த அனுபவத்திலிருந்து ஒரு கேள்வி வரலாம். அந்தக் கேள்வியிலிருந்து ஒரு தேடல் வரலாம். அந்தத் தேடலிலிருந்து ஒரு புரிதல் உருவாகலாம். அந்தப் புரிதல் பின்னர் ஒரு புதிய சூழ்நிலையில் பயன்படுத்தப்படும் அறிவாக மாறலாம்.

படிப்பிலிருந்து வாழ்க்கைக்கும், வாழ்க்கை யிலிருந்து வேலைக்கும்...

ஒரு மாணவன் படிக்கிறான். தேர்வு எழுதுகிறான். நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறுகிறான். கல்லூரிக்குச் செல்கிறான். பட்டம் பெறுகிறான். பின்னர் வேலைக்குச் செல்கிறான். அங்கே யாரும் அவனிடம், "இந்தப் பிரச்சினைக்கு இந்த அத்தியாயத்தைப் படித்திருக்கிறாயே, அதிலிருந்து இந்தக் கருத்தைப் பயன்படுத்து" என்று சொல்லப் போவதில்லை. வேலை உலகில் பாடநூல் கேள்விகள் கிடையாது.

ஒரு மனிதருடன் எப்படி பேசுவது? ஒரு பிரச்சினையை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாதபோது எப்படி முடிவெடுப்பது? தகவல்கள் முழுமையாக இல்லாதபோது என்ன செய்வது? ஒரு தவறு நடந்தால் அதை எப்படி சரிசெய்வது? புதிதாக வந்த ஒரு சூழ்நிலையில் முன்பு கற்றதை எப்படி பயன்படுத்துவது?

ஒரு பிரச்சினைக்கு ஒரே சரியான பதில் இல்லாதபோது எப்படி சிந்திப்பது? - இவை அனைத்தும் அப்ளிகேஷனைக் கேட்கின்றன.

"நான் இதைப் படித்திருக்கிறேன்" என்பது ஒரு தொடக்கம் மட்டுமே. "அதை நான் என்ன செய்ய முடியும்?" என்பதுதான் அடுத்த கட்டம்.

நாம் குழந்தைகளுக்கு நேரம் கொடுக்கிறோமா?

இன்றைய குழந்தையின் நேரம் பல நேரங்களில் ஏற்கெனவே நிரம்பியிருக்கிறது. பள்ளி, டியூஷன், வீட்டுப் பாடம், வகுப்புகள், தேர்வுகள், நுழைவுத் தேர்வுக்கான தயாரிப்பு, போட்டி....

ஓர் ஓட்டம். அந்த ஓட்டத்தில், "நான் ஏன் இதைப் படிக்கிறேன்?" என்று கேட்பதற்கான நேரம் எங்கே?

"இதைக் கொண்டு நான் என்ன செய்யலாம்?" என்று முயற்சி செய்வதற்கான நேரம் எங்கே?

"இது என்னுடைய வாழ்க்கையோடு எப்படி தொடர்புடையது?" என்று யோசிப்பதற்கான நேரம் எங்கே?

நாம் குழந்தைகளுக்கு பதில்களை விரைவாகக் கொடுக்கிறோம். ஆனால், அந்தப் பதிலைத் தேடுவ தற்கான அனுபவத்தை எவ்வளவு கொடுக்கிறோம்?

இதுதான் கல்வியை மீண்டும் சிந்திக்க வேண்டிய இடம். கல்வியின் நோக்கம் எல்லாவற்றையும் தெரிந்திருப்பதாக இருக்க முடியாது. அதேபோல், கல்வியின் நோக்கம் தேர்வில் நல்ல மதிப்பெண் பெறுவதோடு முடிந்துவிடவும் முடியாது.

கல்வி என்பது ஒரு மனிதனுக்கு உலகத்தைப் புரிந்துகொள்ளும் கருவிகளைக் கொடுப்பது என்றால், அந்தக் கருவிகளை உலகத்தில் பயன்படுத்து வதற்கான வாய்ப்பையும் அவனுக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஒரு குழந்தை பள்ளியை விட்டு வெளியே வரும்போது அதன் கையில் ஒரு சான்றிதழ் மட்டும் இருக்கக் கூடாது. அதனுடன் ஒரு கேள்வியும் இருக்க வேண்டும்:

"நான் கற்றதை வைத்து இந்த உலகத்தை இன்னும் கொஞ்சம் நன்றாகப் புரிந்துகொள்ள என்ன செய்ய முடியும்?" இந்தக் கேள்வி வந்துவிட்டால், படிப்பு ஒரு தேர்வைத் தாண்டிச் செல்கிறது. அது வாழ்க்கைக்குள் நுழைகிறது.


BEHIND ME MEDIA
BEHIND ME MEDIA
Now in JAFFNA
NEW OFFICE • NEW OPPORTUNITIES
SAME BIG VISION
யாழ்ப்பாணத்தில்
உங்கள் திறமையை
வெளிப்படுத்த
ஒரு புதிய வாய்ப்பு!
Behind Me International Media
நிறுவனத்தின் புதிய Jaffna Office
தற்போது திறக்கப்பட்டுள்ளது!
யாழ்ப்பாணம்
JAFFNA
219, Kandy Road, Jaffna – A9 Road
Join Our Team
STRATEGY
BRAND
GROWTH
Administration Officer
Marketing Executive
Video Editors
Video Jockeys – Presenters
WE'RE LOOKING FOR
Administration Officer & Marketing Executive
Relevant work experience
Strong English communication skills
Professional & hardworking attitude
IF YOU ARE A
Video Editor or Video Jockey / Presenter
Passionate about media and content creation
Ready to showcase your talent
Eager to grow in the media industry
This is your chance!
GROW YOUR CAREER
BE PART OF A CREATIVE TEAM
MAKE AN IMPACT THROUGH MEDIA
Media
Marketing
Digital Content
Your Future Starts Here!
APPLY NOW!
Send your Resume / CV to
info@behindmemedia.com
LET'S CREATE BIGGER STORIES TOGETHER!
FROM JAFFNA TO A BIGGER TOMORROW



அக்டோபர் மாதம்
மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம்

BREAST CANCER AWARENESS MONTH

Think Pink... Save Lives...

இந்த மாதத்திற்கும் மார்பகப் புற்றுநோய்க்கும் என்ன தொடர்பு?

ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதம் உலகளவில் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக அனுசரிக்கப்படுகிறது.

BEHIND ME MEDIA



உங்கள் ஆரோக்கியமே உங்கள் வலிமை

ஏன் இந்த மாதம் முக்கியமானது?

விழிப்புணர்வு
மார்பகப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துதல்.

ஆரம்பகாலக் கண்டறிதல்
நோயின் அறிகுறிகளை அறிந்து, உரிய நேரத்தில் மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள ஊக்குவித்தல்.

சிகிச்சைக்கான ஆதரவு
நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஆதரவு வழங்குதல்.

உயிர்களைக் காப்பாற்றுதல்
ஆரம்பத்திலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை பெறுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல்.

மார்பகப் புற்றுநோயின் முக்கிய அறிகுறிகள்

- மார்பகத்தில் அல்லது அக்குளில் கட்டி தோன்றுதல்.
- மார்பகத்தின் அளவு அல்லது வடிவத்தில் மாற்றம் ஏற்படுதல்.
- மார்பகத் தோலில் குழிவு, சிவத்தல் அல்லது மாற்றங்கள் தோன்றுதல்.
- காம்பிலிருந்து வழக்கத்திற்கு மாறான திரவம் அல்லது இரத்தம் வெளியேறுதல்.

ஏன் இளஞ்சிவப்பு நிறம்?

இளஞ்சிவப்பு ரிப்பன் (Pink Ribbon) மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வின் உலகளாவிய அடையாளமாக விளங்குகிறது.

Early Detection Saves Lives

தடுப்பு மற்றும் விழிப்புணர்வு

ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதும், மருத்துவ ஆலோசனையின்படி பரிசோதனைகளை மேற்கொள்வதும் முக்கியம். மார்பகத்தில் ஏற்படும் புதிய மாற்றங்களைக் கவனித்து, உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், சிகிச்சையின் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும்.



விழிப்புணர்வைப் பகிர்வோம்... பெண்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்போம்...

இந்த அக்டோபரில் விழிப்புணர்வை பகிர்வோம்; பெண்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்போம்!

கலை – இலக்கியம்

BEHIND ME MEDIA

தமிழ் இலக்கிய வரலாற்றிலும் சிந்தனை மரபிலும் தனித்துவமாகத் திகழ்ந்த ‘மு.வ.’!

20-ம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவரும் கல்வியாளர், இலக்கிய ஆராய்ச்சியாளர், படைப்பாளர் என பன்முகப் பரிமாணம் கொண்டவருமான மு.வரதராசன் அவர்களின் நினைவுநாள் கடந்த ஒன்க்டோர் 10ஆம் திகதியாகும்.

மு.வரதராசனார் ஒரு தமிழாசிரிய மரபை உருவாக்கியவர். “1975 வாக்கில் தமிழ்நாட்டிலே இரண்டு முக்கிய மாணவர் பரம்பரைகள் இருந்தன. ஒன்று தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பரம்பரை, மற்றது மு. வரதராசன் பரம்பரை. தம் புலமைச் சிறப்பால், அறிவாற்றலால், மொழியியல் அறிவினால் தமக்கென ஒரு மாணவர் பரம்பரையை தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் உண்டாக்கினார் என்றால் மாணவர்களை நடத்தும் முறை வாயிலாக, அற நோக்கின் வாயிலாக, பண்பட்ட வாழ்க்கையின் வாயிலாக, எளிய நடை வாயிலாகத் தமக்கென ஒரு மாணவர் பரம்பரையை உண்டாக்கியவர் மு. வரதராசனார்”

மு. வரதராசன் அவரது காலகட்டத்தில் காந்திய இயக்கம் முன்வைத்த மரபார்ந்த அறத்தையும் ஒழுக்கவியலையும், திராவிட இயக்கம் முன்வைத்த மரபுப்பெருமிதத்தையும் அன்றைய இளம் வாசகனுக்கு கதைவடிவில் கொண்டுசென்றவர்.

அவருடைய நாவல்கள் அறவிவாதங்கள். அவை மரபான பார்வையில் இருந்து சற்றே மேலெழும்படி அறிவுறுத்துபவை. ஆனால் முன்னரே திட்டமிட்ட கதைக்கட்டமைப்பும், ஆசிரியரே பேசுவதுபோல் தோன்றும் உரையாடல்களும் மு.வரதராசனின் நாவல்களைப் பாடநூல்தன்மை கொண்டவையாக ஆக்கின. நவீன இலக்கியத்திற்குரிய கதைமாந்தரின் உளஆழத்துக்குச் செல்லும் பயணமோ, மானுட உறவுகளின் அரிய நுண்தருணங்களைத் தொட்டுணரும் தன்மையோ, ஒட்டுமொத்தப் பார்வையின் விரிவோ மு.வரதராசன் எழுதிய நாவல்களில் இருக்கவில்லை.

அவை பாடநூல்களாகவே பரவின, பாடநூல்களாகவே எஞ்சின. ஆனால் பெண்சுதந்திரம், தனிமனித அறம், பொதுக்குடிமைப்பண்புகள் போன்றவற்றை பிரச்சாரம்செய்யும் ஆக்கங்களாக அமைந்த அவருடைய நாவல்கள் ஒருகாலகட்டத்தின் இலட்சியங்களை கல்விச்சூழலுக்கு எடுத்துச் சென்ற அளவில் தமிழ்ச் சிந்தனை மரபிலும் இலக்கிய வரலாற்றிலும் இடம் பெற்றவை.

மு.வரதராசனின் மரபிலக்கிய ஆய்வுகள் விரிவான வரலாற்றாய்வுத் தன்மை கொண்டவை அல்ல. இலக்கிய ஆய்வுகளென்னும் தளத்திலும் அவை பிற ஆய்வாளர்களால் பெரிதாக கருதப்படுவதில்லை. அவை இலக்கிய ரசனைக்குறிப்புகள் மட்டுமே.

பொதுவாசகர்கள் மரபிலக்கியங்களை அணுகுவதற்குரிய பொதுவான, எளிமையான வழியை முன்வைப்பவை. மரபிலக்கிய தளத்தில் மு. வரதராசனின் முக்கியமான சாதனை என்று சொல்லப்பட வேண்டியது அவரது நூலான திருக்குறள் தெளிவுரை.

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத் தூரில் வேலம் என்ற சிற்றூரில் பிறந்தார் (1912). இவரது இயற்பெயர் திருவேங்கடம், ஆனால் தாத்தாவின் பெயரான வரதராசன் என்ற பெயரே நிலைத்துவிட்டது. வேலூர் மாவட்டம் வாலாஜாபேட்டையில் ஆரம்பக் கல்வி கற்றார். திருப்பத்தூரில் உயர்நிலைக் கல்வி கற்றார். 1931-ல் வித்வான் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் தானே பயின்று 1935-ல் வித்வான் தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணவராக தேர்ச்சி பெற்று, திருப்பனந்தாள் மடத்தின் ஆயிரம் ரூபாய் பரிசும் பெற்றார். திருப்பத்தூர் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

காந்தியடிகள், திரு.வி.க., தாயுமானவர், ராமதீர்த்தர், ராமலிங்க சுவாமிகள், ராமகிருஷ்ணர், விவேகானந்தர், தாகூர், காண்டேகர் ஆகியோரின் கருத்துகளால் கவரப்பட்டார். 1939-ல் பி.ஓ.எல். தேர்ச்சி பெற்றார். அதே ஆண்டில் பச்சையப்பன் கல்லூரியில் கீழ்த்திசை மொழிகளில் விரிவுரையாளர் என்ற பொறுப்பேற்றார்.

1944-ல் ‘தமிழ் வினைச் சொற்களின் தோற்றமும் வளர்ச்சியும்’ என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை எழுதி பட்டம் பெற்றார். 1948-ல் ‘சங்க இலக்கியத்தில் இயற்கை’ என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை எழுதி, சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன் முறையாகத் தமிழில் முனைவர் பட்டம் பெற்றார்.



சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் சென்னை பல்கலைக்கழகத்திலும் தமிழ்த்துறைத் தலைவராக செயல்பட்டார். பின்னர் மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பணியாற்றி ஓய்வுபெற்றார்.

நெடுந்தொகை விருந்து, குறுந்தொகை விருந்து, நற்றிணை விருந்து, திருக்குறள் உரை, தமிழ் இலக்கிய வரலாறு, கள்ளோ காவியமோ, நெஞ்சில் ஒரு முள், அகல் விளக்கு, கரித்துண்டு, உள்ளிட்ட குறிப்பிடத்தக்க நூல்களை எழுதியுள்ளார்.

இவரது திருக்குறள் தெளிவுரை 100-க்கும் மேற்பட்ட பதிப்புகளாக வெளிவந்துள்ளன. சாகித்ய அகாடமி, பாரதிய ஞானபீடம், தேசியப் புத்தகக் குழு, இந்திய மொழிக் குழு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம்-தமிழ் அகராதிக் குழு உள்ளிட்ட ஏராளமான அமைப்புகளில் அங்கம் வகித்துள்ளார்.

தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். தூய தமிழில் பிறமொழிக் கலப்பு இல்லாமல் கதை எழுதியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

கல்வித் துறை ஆய்வு மாநாடுகளில் பங்கேற்பதற்காக இந்தியா சார்பில், ரஷ்யா, பாரீஸ், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளுக்குச் சென்றுள்ளார். 1972-ல் அமெரிக்க ஹூஸ்டர் கல்லூரி இவருக்கு டி.லிட். பட்டம் வழங்கியது.

‘அகல் விளக்கு’ என்ற நாவலுக்காக இவருக்கு 1961-ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. இவரது ‘கள்ளோ காவியமோ’, ‘அரசியல் அலைகள்’, ‘மொழியியல் கட்டுரைகள்’ ஆகிய 3 நூல்களுக்கு தமிழக அரசின் விருது கிடைத்தது. இவரது பல நூல்கள் ஆங்கிலம், இந்தி, மராத்தி, சிங்களம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மு.வரதராசன் இளமையில் ஆர்வம் கொண்டிருந்தது சிறார் இலக்கியத்தில். அவருடைய முதல் நூல் குழந்தைப் பாடல்கள் 1939-ல் வெளியிடபட்டது. பின்னர். வி.ச.காண்டேகரின் செல்வாக்கால் கதைகளையும் நாவல்களையும் எழுதத் தொடங்கினார். திரு.வி.கல்யாணசுந்தர முதலியாரிடமிருந்து தனித்தமிழியக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தமையால் நாவல்களை தனித்தமிழில் எழுதினார்.

மு.வரதராசனின் நாவல்கள் முன்னரே திட்டமிட்ட கட்டமைப்பு கொண்டவை. பெரும்பாலும் உரையாடல்கள் வழியாக ஆசிரியரின் கருத்துக்களை முன்வைக்கும் நோக்கம் கொண்டவை. நிகழ்வுகள் யதார்த்த, அன்றாடத்தன்மை கொண்டவை. ஆனால் கதைசொல்லும் நடையும், கதைமாந்தர் பேச்சும் தூய தமிழ்நடையில் அமைந்திருந்தமையால் அவற்றுக்கு யதார்த்தத் தன்மை உருவாகவில்லை.



தன் நாவல்கள் வழியாக மு.வரதராசன் தன் பண்பாட்டு, அற, ஒழுக்க விளக்கங்களை முன்வைத்தார். அவை சமூகத்தின் முன்னேற்றத்தில் அக்கறைகொண்ட ஒரு நல்லாசிரியருடைய பார்வைகள். மரபின் எல்லைகளுக்குள் நின்று புதுமையை வரவேற்கும் தன்மை கொண்டவை.

உதாரணமாக, கரித்துண்டு என்னும் நாவலில் “கற்பு என்பது ஒருவனுடன் வாழும்போது அவனுக்கு உண்மையாக வாழ்வது மட்டும்தான்“ என்று வலியுறுத்துகிறார். மு.வரதராசனின் கள்ளோ காவியமோ, கரித்துண்டு, கயமை, அல்லி, பாவை, நெஞ்சில் ஒரு முள், அகல்விளக்கு போன்ற நாவல்கள் எழுபதுகளில் புகழ்பெற்றிருந்தன.

மு.வரதராசன், தான் எழுதிய நூல்கள் பெரும்பாலானவற்றை தனது சொந்த நிறுவனமான தாயக பதிப்பகத்தின் வழியாக வெளியிட்டார்.

மு.வரதராசனின் இலக்கிய ரசனைக்குறிப்புகள் வெவ்வேறு இதழ்களில் வெளிவந்து பின்னர் நூல்வடிவம் பெற்றன. தமிழ் மரபிலக்கியங்கள் பாடநூல்களாக வெவ்வேறு கல்விநிலையங்களில் அமைந்திருந்த அக்காலகட்டத்தில் அவற்றை பொருள்கொள்ளவும் ரசிக்கவும் வழிகாட்டியாக அமைந்தன.

மு.வரதராசன் சாகித்ய அக்காதமிக்காக எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு இந்திய இலக்கியச் சூழலுக்கு தமிழிலக்கிய வரலாற்றை எடுத்துரைத்த குறிப்பிடத்தக்க நூல்

மு.வரதராசனின் நூல்களில் மிகப்பெரிய அளவில் விற்பனையானதும், தொடர்ந்து விற்பனையாவதும் திருக்குறளுக்கு எழுதிய எளிய உரை. சுருக்கமான, எளிமையான தமிழ் உரைநடையில் திருக்குறளுக்கு உரைவிளக்கம் அளித்திருந்தார்.



மு.வரதராசனின் பெற்றமனம் நாவல் 1960-ல் திரைப்படமாக வெளிவந்தது. ஏ.பீம்சிங் இயக்கத்தில் சிவாஜி கணேசன், புஷ்பவல்லி ஆகியோர் நடித்திருந்தார்கள்.

காலம் தவறாமையை இறுதிவரைக் கடைபிடித்தவர். அனைவராலும் ‘மு.வ.’ என நேசத்துடன் அழைக்கப்பட்டார். இறுதிவரை தமிழ்ப் பணியாற்றி வந்தவருமான மு.வரதராசனார், 1974-ம் ஆண்டு 62-வது வயதில் மறைந்தார்.



செம்மணி 582 மனித எச்சங்கள் : ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அரசாங்கம் என்ன சொல்லியுள்ளது?

யாழ்ப்பாணம் செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இருந்து 582 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளமை மற்றும் சர்வதேச தடயவியல் உதவி ஆகியவை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அரசாங்கம் என்ன நிலைப்பாட்டை குறிப்பிட்டுள்ளது? உள்ளக பொறிமுறையை பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ச்சியாக புறக்கணித்து வரும் நிலையில் உள்ளக பொறிமுறை ஊடாகவே தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் சர்வதேச அரங்கில் குறிப்பிடுகிறது. இவ்வாறான நிலையில் பாதிக்கப்பட்டோருக்கு எவ்வாறு நீதி கிடைக்கும். பொறுப்புக்கூறல் விவகாரத்தில் அரசாங்கத்தின் நகர்வுகள் அதிருப்திக்குரியதாகவே காணப்படுகிறது என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது நிலையியல் கட்டளை இருபத்தேழு இரண்டின் கீழ் கேள்விகளை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், மோதல் தொடர்பான மனித உரிமைமீறல்கள் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கும், போதுமான ஆதாரங்கள் உள்ள நபர்களை தகுதியான நீதிமன்றங்களின் முன் கொண்டுவருவதற்கும் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாகக் கூறுகிறது. மனித உரிமைகள் பேரவையின் முன் அரசாங்கம் இந்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளதா? மேலும் பொறுப்புக்கூறல் தொடர்பான உயர்ஸ்தானிகரின் கவலைகளை நிவர்த்தி செய்ய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானவை என்று அரசாங்கம் கருதுகிறதா?







2018ஆம் ஆண்டின் சட்டம் ஏதேனும் வழக்கிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதா, மற்றும் அரசு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட நம்பகமான குற்றச்சாட்டுகள் தொடரப்படுகிறதா என்பது உட்பட பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதற்கான வழக்குகள் தொடர்பாக சர்வதேச அளவில் அரசாங்கம் என்ன நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது?

உள்நாட்டு விசாரணைகள் மீது பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு நம்பிக்கை இல்லை என்பதாலும், அந்தச் சமூகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி என்ற முறையிலும், பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகம் உள்நாட்டு வழிமுறைகளை மட்டுமே போதுமான பதிலாக ஏற்பதை நிராகரிக்கிறது என்பதை நான் பதிவு செய்கிறேன். அர்த்தமுள்ள சர்வதேச பங்களிப்பு, சுயாதீன அரசு வழக்கறிஞர்கள், சர்வதேச தடயவியல் நிபுணத்துவம், பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு மற்றும் தீவிர மனித உரிமைமீறல்கள் மற்றும் சர்வதேச குற்றங்களை விசாரித்தல் (கட்டளைப் பொறுப்பு) தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அரசாங்கம் என்ன நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது?

யாழ்ப்பாணம் செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இருந்து 582 மனித எச்சங்கள் மீட்கப்பட்டதாகக் கூறப்படுவது மற்றும் சர்வதேச தடயவியல் உதவி ஆகியவை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அரசாங்கம் என்ன நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது?

பாதுகாப்புப் படையினரால் முன்னர் பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான நிலங்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகிறது.

இராணுவம், தொல்பொருள், வனம், வனவிலங்கு மற்றும் மகாவலி அதிகாரசபைகளின் கீழ் உள்ள நிலங்கள் உட்பட அரசு வசமுள்ள அல்லது அரசு உரிமை கோரும் அனைத்து நிலங்கள் குறித்தும் சர்வதேச அளவில் என்ன தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை அமைச்சர் தெரிவிப்பாரா?

பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக இரத்து செய்தல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் மற்றும் அதை இரத்து செய்தல் தொடர்பாக சர்வதேச அளவில் அரசாங்கம் என்ன உறுதியைத் தெரிவித்துள்ளது? மாகாண சபை தேர்தல்கள், வாக்குறுதியளிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு அரசாங்கம் என்ன நிலைப்பாட்டையும் கால அட்டவணையையும் தெரிவித்துள்ளது?

500க்கும் மேற்பட்ட சாட்சிகள் மற்றும் ஆதாரங்களில் இருந்து 123,000க்கும் மேற்பட்ட உருப்படிகளைக் கொண்ட களஞ்சியத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு கொண்டிருந்தபோதிலும், அதனுடன் ஈடுபட அரசாங்கம் மறுத்துவிட்ட நிலையில், இந்த மறுப்பை பொறுப்புக்கூறல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான அதன் கூறப்பட்ட அர்ப்பணிப்புடன் அரசாங்கம் எவ்வாறு சமரசம் செய்கிறது?

யாழ்ப்பாணம் சித்துபாத்தி செம்மணி மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிடுகிறார். ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளக விசாரணைகளை கோரவில்லை. சர்வதேச ரீதியான விசாரணைகளையே கோருகிறார்கள்.

செம்மணி மனித புதைகுழி தொடர்பில் ஏன் சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் பின்வாங்குகிறது. ஏன் சர்வதேச நிபுணர்களுடனான ஒத்துழைப்புடன் டி.என்.ஏ. பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இது குறித்து அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்வதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தற்போது புதிய சட்டமூலம் தயாரிக்கப்படவில்லை. நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தைக் காட்டிலும் பாரதூரமான அம்சங்களை இந்த சட்டமூலம் கொண்டுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை கருத்திற்கொள்ளாமல் பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. இதன் உண்மைத்தன்மை என்ன?

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெருமளவிலான காணிகளை விடுவித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிடுகிறார். காணி விடுவிப்புக்கான போராட்டங்கள் இன்றும் வடக்கு மற்றும் கிழக்கில் தொடர்கின்றன.

மயிலிட்டி, வசவளான் பகுதி மக்கள் காணி விடுவிப்புக்காக தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். ஒருசில வீதிகளை மாத்திரம் விடுவித்துவிட்டு அதனை முழுமையான காணி விடுவிப்பு என்று குறிப்பிட முடியாது. ஆகவே காணி விடுவிப்பு விவகாரத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கு இன்றும் நீதி கிடைக்கவில்லை. காணாமல்போனோரின் உறவுகள் பல வருடங்களாக போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்று குறிப்பிட்டார், நல்லாட்சி அரசாங்கம் உள்ளக விசாரணை அதனூடாக தீர்வு என்று குறிப்பிட்டது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏதும் செய்யவில்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்று குறிப்பிட்டார்.

ஆனால் ஏதும் நடக்கவில்லை. இவை அனைத்தும் உள்ளக பொறிமுறையை உள்ளடக்கியதாகவே காணப்பட்டது. இதனை நாங்கள் ஏற்கவில்லை. இந்த அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் சென்று வெளியக பொறிமுறையை புறக்கணிப்பதாகவும், உள்ளக பொறிமுறையில் செயற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளக பொறிமுறையை நிராகரிக்கும்போது அதனூடாக எவ்வாறு நீதி கிடைக்கும். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் எவரும் காணாமல் ஆக்கப்படவில்லை என்பதை குறிப்பிடுவோம்.

ஆனால் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் அதிருப்தியான நிலையே காணப்படுகிறது. காணாமல் போனோரின் விவகாரத்துக்கு தீர்வு காண எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகள் இதுவரை காலமும் முன்னெடுக்கப் படவில்லை.

மாகாண சபைத் தேர்தல் பற்றி அமைச்சர் குறிப்பிட்டார். செயற்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் நடத்தப்படும். நானும் அந்த குழுவில் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். மாகாண சபைத் தேர்தல் பற்றி ஆராயும் பாராளுமன்ற செயற்குழுவில் இருந்து நான் விலகியுள்ளேன்.

எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் அனைவரும் அந்த குழுவில் இருந்து விலகியுள்ளார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் இதனை அறிவித்துள்ளார். இந்த குழுவின் செயற்பாடுகள் காலத்தை இழுத்தடிப்பு செய்வதால் அதில் தொடர்ந்து அங்கம் வகிப்பது பயனில்லை என்பதால் குழுவில் இருந்து விலகியுள்ளேன் என்றார்.

நேர்காணல்

BEHIND ME MEDIA

“ஓவியம்” உலகை மாறுபட்டதொரு கண்ணாடியினூடாய் காணச்செய்கிறது - ஓவியர் ரஞ்ஜனா ரமேஷ்



ஒரு கலையை அறிந்தவருக்கு அப்படி அறிந்திருத்தலே ஆனந்தமளிப்பதா? அல்லது, அவரது கலைத்திறனின் மூலம் அவருக்கு உரிய பெயரும் புகழும் கிடைப்பதுதான் ஆனந்த மளிப்பதா? அதுவும், ஒருவரது கலைத்திறன் அவரது வாழ்வாதார வழியாகவும் ஆகிவிட்டால், பின் அவரது கலைத்திறனின் மூலம் அவருக்குக் கிடைக்கும் வருமானம் தான் அவரது கலைத்திறனின் மூலம் அவருக்குக் கிடைக்கும் ஆனந்தத்தை நிர்ணயிப்பதாகிறதா?

பல வருடங்களுக்கு முன்பு படித்த கதை நினைவுக்கு வருகிறது. ஆங்கிலத்திலா, தமிழிலா – சட்டென்று ஞாபகப்படுத்திக்கொள்ள இயலவில்லை. ஆனந்தமாக படுவேக மாக ஓடித்திரியும் பையனை ஓட்டப்பந்த வீரனாக்கவேண்டும் என்று பிறர் முயற்சியெடுத்து அதில் வெற்றியும் பெறுவார்கள். அந்தச் சிறுவன் பந்தயத்தில் வெற்றி பெறுவான். ஆனால் ஓடுவதில் அவன் அடையும் ஆனந்தத்தைப் பறிகொடுத்துவிடுவான்.

ரஞ்ஜனா ரமேஷ் என்ற முன் அறிமுகமில்லாத உறவினரின் ஓவியங்களைப் பார்த்த சமயம் மேற்கண்ட கேள்விகளெல்லாம் தவிர்க்கமுடியாமல் மனதில் எழுந்தன. ஆனால் ரஞ்ஜனா வெகு இயல்பாக, மிக எளிமையாக “எனக்குப் பிடிச்சிருக்கு – வரையறேன். எனக்குப் பிடிச்ச நட்பினருக்கு, உறவினர்களுக்கு என் ஓவியங்களைப் பரிசளிக் கிறேன். நான் வரைந்ததில் / வரைவதில் எனக்குப் பிடித்த ஓவியங்கள் சிலவற்றை வீட்டில் ஃப்ரேம் போட்டு மாட்டிவைக்கிறேன். அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு மகிழ்ச்சியும், புத்துணர்ச சியும் ஏற்படுகிறது. வேறென்ன வேண்டும் எனக்கு?” என்று கூறினார்.

ரஞ்ஜனாவுடன் ஒரு சிறிய நேர்காணல்:

“ஓவியப்பள்ளி எதிலாவது சேர்ந்து கற்றுக் கொண்டீர்களா?”

இல்லை. சுயமாகத்தான் கற்றுக்கொண்டேன். சிறுமியாக இருந்தபோதே ஓவியம் வரைவதில் எனக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. முறையாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பினேன். ஆனால், சரியான வழிகாட்டல் கிடைக்க வில்லை.

ஓர் ஓவியப்பள்ளியை அணுகியபோது பத்தாவது வகுப்புக்குப் பிறகு வரச்சொன்னார்கள். பின், பன்னிரெண்டாவது வகுப்புக்குப் பிறகு வரச்சொன்னார்கள். மீண்டும் போனபோது 12வது வகுப்பில் கணிதத்தைப் பாடமாக எடுக்காததால் என்னை சேர்த்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

ஆனாலும், நானே ஓவியங்களைப் பார்த்து வரைந்து பழகிக்கொண்டேன். கற்பனை யாகவும் வரையக் கற்றுக்கொண்டேன். பள்ளியில் அறிவியல் பாட வரை படங்கள் தீட்ட என்னுடைய நட்பினரெல்லாம் அவர்களுடைய நோட்டுப் புத்தகங்களை என்னிடம் தந்துவிடுவார்கள்!

என்னவிதமான ஓவியங்களை வரைவீர்கள்?”

என் மனநிலைக்கேற்ப என்னவிதமான ஓவியத்தை வரையவேண்டும் என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வேன். எனக்கு மிகவும் பிடித்தவை ஃப்ரீஹாண்ட், கார்ட்டூன், அப்ஸ்ட்ராக்ட் பெயிண்டிங்”



தொழில்முறை ஓவியராக அல்லது ஃப்ரீலான்ஸ் ஓவியராக செயல்பட்டிருக் கிறீர்களா?

வீட்டையும் குழந்தைகளையும் பார்த்துக்கொண்டு, உகந்த மனநிலை வாய்த்தபோது வரைந்து கொண்டிருந்ததால் அப்படி முழுநேர அல்லது பகுதிநேர தொழில்முறை ஓவியராகச் செயல்பட்டதில்லை.

ஆனால், இன்று குழந்தைகள் வளர்ந்த மனிதர்களாகிவிட்ட நிலையில் ஃப்ரீலான்ஸ் ஓவியராகச் செயல்பட வாய்ப்பு கிடைத்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியும். அப்படியில்லை யென்றாலும் நான் ஓவியம் வரைவது தொடர்ந்துகொண்டிருக்கும்!

ஓவியந்தீட்டும் ஆர்வத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும் தொடரவும் என்ன தேவை?

ஓவியந்தீட்டலை, அதற்கான ஆர்வத்தைத் தொடரவும் தக்கவைத்துக்கொள்ளவும் ஆதரவும் ஊக்கமளிப்பும் தேவையாக இருக்கிறது. அதைவிட முக்கியம் ஓவியந்தீட்டுபவரிடம் அதற்கான தணியாத தாகம் இருக்க வேண்டும். பொறுமையும் இன்றியமையாதது

ஓவியம் வரைவதில் உங்களுக்கு என்ன கிடைக்கிறது?

மனநிறைவு. அதைவிட வேறென்ன வேண்டும்? கடையில் விற்கும் பரிசுப்பொருட்களை வாங்கி நட்பினருக்கும் உறவினர்களுக்கும் அன்பளிப்பாகக் கொடுப்பதை விட நானே வரைந்த ஓவியங்களை அழகாக ஃப்ரேம் போட்டுத் தருவது அவர்களுக்குத் தனி முக்கியத்துவது அளிப்பதாக அமைகிறது.

அவர்கள் என் ஓவிய ஆர்வத்திற்கு எப்போதுமே ஊக்கமளித்திருக்கிறார்கள்.



ஓவியம் தீட்டுவது என்னுடைய மன நிலையை மாற்றுகிறது மேம்படுத்துகிறது. ஓவியந் தீட்டல் என்னுடைய நினைவாற்றலை மேம்படுத்துகிறது. தன்னம்பிக்கையை வளர்க்கிறது. என்னை சுதந்திரமானவளாக உணரவைக்கிறது.

உலகை மாறுபட்டதொரு கண்ணாடியினூடாய் காணச்செய்கிறது.

என்னுடைய உணர்வுகளையும் எண்ணங்க ளையும் காட்சிரூபமாய் என்னால் வெளிப்படுத்த முடிகிறது. ஓவியந்தீட்டல் என் வாழ்வில் POSITIVITYI அதிகரிக்கச் செய்கிறது..

என்னுடைய ஓவியங்களை பொக்கிஷமாகக் பாவிக்கிறேன். அவை விலைமதிப்பற்றவை!

நன்றி :- இணையம்



ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றான பிரான்ஸ் தேசம் தனது நாட்டு மாணவர்களால் அச்சமடைந்துவிட்டது?



விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உயரிய தத்துவங்களை உலகுக்கு அளித்த ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றான பிரான்ஸ் தேசம் இன்று தனது கல்வி அமைப்பின் எதிர்காலத்தைக் காக்க வீதியில் இறங்கிப் போராடும் மாணவர்களைக் கண்டு அஞ்சிக் கொண்டிருக்கிறது.

சுமார் 3.6 டிரில்லியன் யூரோக்கள் என்ற பிரம்மாண்ட பொதுக்கடன் சுமையின் கீழ் பிரான்ஸ் அரசு தள்ளாடுகிறது. பொருளாதாரத்தை மீட்க அரசு கொண்டுவந்த கடுமையான நிதிச் சிக்கன நடவடிக்கைகள், நாட்டின் கல்வித் துறையை முடக்கி, மாணவர்களை வெகுண்டு எழச் செய்துள்ளன.

ஒருபுறம் பொருளாதாரச் சரிவும், வரலாறு காணாத கடன் சுமையும் அரசின் கழுத்தை நெருக்குகின்றன. மறுபுறம் உள்கட்டமைப்புச் சீர்கேடு, ஆசிரியர் பற்றாக்குறை, ஊதியம் வழங்க முடியாத நிலை எனத் திணறும் கல்வித் துறை, மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விகுறியாக்கியுள்ளது.

சுவர்களில் விரிசல்கள், பழுதடைந்த வகுப்பறைகள், போதிய ஆசிரியர்கள் இல்லாத பாடவேளைகள் என ஏதோ ஓர் ஏழை நாட்டில் இருப்பது போன்ற அவல நிலையில்தான் பிரான்ஸின் பள்ளிகள் இருக்கின்றன.

மாணவர்கள் தங்கள் உரிமைகளுக்காகவும் பாதுகாப்பான கல்விச் சூழலுக்காகவும் வகுப்புகளைப் புறக்கணித்து ஒரு வாரமாகப் போராட்டத்தில் ஈடுபட்டு, அரசையே நிலைகுலைய வைத்துள்ளனர்.

செலவினங்களைக் குறைக்க அரசு எடுத்த முடிவுகள் வகுப்பறைகளைப் பாதித்ததால், மாணவர்களோடு ஆசிரியர்களும் அரசுக்கு எதிராக அணிதிரண்டுள்ளனர். 1,000-க்கும் மேற்பட்ட பள்ளிகள் கதவடைப்பு, பல்கலைக்கழக முற்றுகை, காவல் துறை மோதல் எனப் பிரான்ஸ் நாடு முன்னெப்போதும் கண்டிராத கல்வி நெருக்கடியைச் சந்திக்கிறது.

மாணவர் போராட்டம் அரசுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்த முதன்மை காரணம், நாட்டின் பொருளாதாரச் சரிவு மற்றும் அரசியல் ஸ்திரமின்மை.

பிரான்ஸின் பொதுக்கடன் 3.596 டிரில்லியன் யூரோக்களாக (4.08 டிரில்லியன் அமெரிக்க டாலர்) உயர்ந்துள்ளது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 119% ஆகும். கடனுக்கான வட்டி மட்டுமே ஆண்டுக்கு 67 முதல் 77 பில்லியன் யூரோக்கள் வரை ஆகிறது. இது அரசு தனது ராணுவத்துக்கு ஒதுக்கும் நிதியை விட அதிகம்.

தொடர் பட்ஜெட் பற்றாக்குறை: 1974-க்குப் பிறகு பிரான்ஸ் உபரி பட்ஜெட் தாக்கல் செய்யவில்லை. வருவாயை விட மக்கள் நலச் செலவுகள் ஆண்டுதோறும் அதிகமாகவே இருந்து வருகின்றன.

பிரான்ஸ் முழுவதும் பள்ளிகளின் உள்கட்டமைப்பு படுமோசமடைந்துள்ளது. பள்ளிகளுக்குப் போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. மேலும், காலை 8 மணிக்குச் செல்லும் மாணவர்கள் மாலை 6 மணி வரை பள்ளியிலேயே இருக்க வேண்டிய கட்டாய நிலை அவர்களுக்கு எரிச்சலூட்டியுள்ளது.

BEHIND ME MEDIA

ஆசிரியர்கள் இல்லாமல் பள்ளி நேரத்தில் பெரும் பகுதி நேரத்தைச் சும்மா கழிப்பது மாணவர்களுக்கு மனச்சோர்வையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக, கடந்த ஒரு வாரமாக மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் சாலையில் இறங்கிப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். பாரீஸின் புறநகரில் உள்ள பள்ளிகளில் தொடங்கிய போராட்டம், சமூக ஊடகங்களின் தாக்கத்தால் படிப்படியாக அதிகரித்து நாடு முழுவதும் பரவிவிட்டது. இன்று பள்ளி மாணவர்களோடு சேர்ந்து கல்லூரி மாணவர்களும் களத்தில் இறங்கிவிட்டனர்.

இதுவரை 3,000-க்கும் மேற்பட்ட மாணவர்களைக் காவல் துறையினர் கைது செய்துள்ளனர். நாட்டில் உள்ள 3,700-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் 1,000-க்கும் மேற்பட்ட பள்ளிகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன.

பள்ளிகளில் சுகாதாரமில்லாத கழிப்பறைகள், சில பள்ளிகளில் கழிப்பறைகளே இல்லாத நிலைகளில்தான் நிர்வாகம் இயங்குகிறது. பள்ளிகளில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும், கல்விச் சூழலைச் சீரமைக்க வேண்டும், பள்ளி பாடவேளையை வரையறை செய்ய வேண்டும், கூடுதலான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்பவைதான் மாணவர்களின் முக்கியக் கோரிக்கைகளாகும்.

போராட்டம் தீவிரமடைந்ததால் பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னு அவசர ஆலோசனை நடத்தி வகுப்புகளை இணையவழியில் நடத்த உத்தரவிட்டுள்ளார். இந்தப் போராட்ட மோதல்களில் 85 காவலர்கள் காயமடைந்துள்ளனர் சில பள்ளிகளுக்குத் தீ வைக்கப்பட்டு டிராம் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

உள்துறை அமைச்சர் லாரன்ட் நுனெஸ், வன்முறையைத் தூண்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியுள்ளார். எதிர்க்கட்சியான 'லா பிரான்ஸ் இன்சோமிஸ்' இந்தப் போராட்டத்தைத் தூண்டுவதாக அரசு குற்றம் சாட்டுகிறது.

அதேவேளையில், கல்வி அமைச்சகம் மாணவர்கள் மற்றும் பெற்றோர் சங்கங்களைச் சந்தித்துப் பேசியதுடன், சீர்திருத்தக் கருத்துகளைப் பெற புதிய ஆன்லைன் தளத்தையும் அமைத்துள்ளது. இந்தப் போராட்டத்தின் தாக்கம் அண்டை நாடான பெல்ஜியத்திற்கும் பரவி, அங்குள்ள லியேஜ் நகரிலும் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன.



பார்வையற்ற வாக்காளருக்கு ரகசியமாக வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது?
Ontario மனித உரிமைகள் தீர்ப்பாயத்தில் விசாரணை!

வாக்களிக்கும் போது தனது வாக்கின் ரகசியத்தன்மையையும் சுயாதீனத்தையும் உறுதிசெய்யத் தவறியதன் மூலம், 'ஒன்டாரியோ தேர்தல் ஆணையம்' தனது மனித உரிமைகளை மீறிவிட்டதாகப் பார்வையற்ற வாக்காளர் ஒருவர் ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாய விசாரணையின் போது வாதிட்டுள்ளார்.

வழக்கின் பின்னணி: மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகளுக்காகப் போராடும் ஓய்வுபெற்ற வழக்கறிஞரான டேவிட் லெபோ.்ப்ஸ்கி 2018 ஒன்டாரியோ தேர்தலின் போது ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை அடுத்து, ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இம்மாநில மனித உரிமைகள் புகாரைப் பதிவுசெய்தார்.

உரிமை மீறல் சம்பவம்: 2018 தேர்தலில் உதவி வாக்களிப்பு முனையத்தைப் பயன்படுத்தி வாக்களிக்க முயன்ற போது, தேர்தல் அதிகாரி ஒருவர் அவர் யாருக்கு வாக்களித்தார் என்பதைத் தற்செயலாகப் பார்த்ததாக லெபோ.்ப்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார்.

செயல்திட்டத்திற்கான கோரிக்கை: பார்வையற்ற வாக்காளர்கள் எவ்வித உதவியுமின்றி ரகசியமாக வாக்களிப்பதை உறுதிசெய்ய ஒன்டாரியோ தேர்தல் ஆணையம் ஒரு முறையான 'செயல்திட்டத்தை' உருவாக்க உத்தரவிட வேண்டும் என்றும், அதைக் கண்காணிக்கச் சுயாதீனக் கண்காணிப்பாளர் ஒருவரைத் தீர்ப்பாயம் நியமிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடரும் விசாரணை: பார்வையற்ற நபர்களுக்குச் சமமான சேவை வழங்குவதில் ஒன்டாரியோ தேர்தல் ஆணையம் தோல்வியடைந்துள்ளதாக அவர் வாதிட்ட நிலைக் குறித்த இந்த விசாரணை பல நாட்கள் நடைபெறவுள்ளதுடன், இவ்வார இறுதியில் இரு தரப்பினரின் இறுதிச் சமர்ப்பிப்புகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.





BEHIND ME MEDIA











தமிழ் - English அருஞ்சொற்கள்

1. அறம் - Virtue
2. அன்பு - Love
3. அறம் சார்ந்த ஒழுக்கம் - Morality
4. விடாமுயற்சி - Perseverance
5. தன்னம்பிக்கை - Self-confidence
6. நன்றியுணர்வு - Gratitude
7. பொறுமை - Patience
8. நேர்மை - Honesty
9. ஒற்றுமை - Unity
10. மனிதநேயம் - Humanity



இன்றைய தலைமுறையினருக்கான சில பொன்மொழிகள்

1. கல்வி என்பது வேலைக்கான வழி மட்டுமல்ல் வாழ்க்கைக்கான வழிகாட்டியும் ஆகும்.
2. தோல்வியைக் கண்டு துவளாதே அது வெற்றிக்கான முதல் படி.
3. நேரத்தை மதிப்பவன் வாழ்க்கையில் உயர்வான்.
4. உன் கனவுகளை நம்பு அவற்றை நனவாக்க உழை.
5. பிறரை மாற்ற நினைப்பதற்கு முன் உன்னை நீ மாற்றிக்கொள்.
6. அறிவு உனக்குச் செல்வம் பண்பு உனக்குப் பெருமை.
7. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்து அது உன்னை ஆள அனுமதிக்காதே.
8. சமூக ஊடகங்களில் புகழ் தேடுவதைவிட, வாழ்க்கையில் சாதனை படைக்க முயற்சி செய்.
9. வெற்றி என்பது பிறரை முந்துவதில் இல்லை நேற்றைய உன்னை இன்றைய நீ முந்துவதில்தான் இருக்கிறது.
10. விமர்சனங்களைக் கண்டு பயப்படாதே அவற்றிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்.
11. பணம் வாழ்க்கைக்கு அவசியம் ஆனால் மனிதநேயம் வாழ்க்கையின் அடையாளம்.
12. பெற்றோரின் தியாகத்தைப் புரிந்துகொள் ஆசிரியர்களின் வழிகாட்டுதலை மதித்திடு.
13. கோபத்தில் பேசும் வார்த்தைகள் உறவுகளை உடைக்கும் அன்புடன் பேசும் வார்த்தைகள் இதயங்களை இணைக்கும்.
14. பிறருடைய வெற்றியைக் கண்டு பொறாமைப்படாதே அதிலிருந்து உந்துதலைப் பெற்றுக்கொள்.
15. வாசிப்பைப் பழக்கமாக்கு சிந்தனையை வளர்த்துக்கொள் அறிவால் உயர்ந்திடு.

புலனாய்வுப் பக்கங்கள்

ஊழல் வழக்குகளில் சிக்கித் தவிக்கும் ராஜபக்ஷ குடும்பம்!



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியும், நாட்டின் முன்னாள் முதன்மைப் பெண்மணியுமான சிரந்தி ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, ஒரு காலத்தில் நாட்டின் மிக அதிகாரம் மிக்க குடும்பமாகத் திகழ்ந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் அவர்களது நெருங்கிய ஆதரவாளர்கள் மீதான சட்ட நடவடிக்கை மீண்டும் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்பஸ் ஊழல், கொடூரக் குற்றவியல் வழக்குகள், பணச்சலவை மற்றும் அரச நிதியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டுகள் எனப் பல வழக்குகளை அரசாங்கம் மீண்டும் தீவிரமாகத் தூசு தட்டி வருகிறது.

1. சிரந்தி ராஜபக்ஷவின் கைதும் “சிரிலிய சவிய“ வழக்கு விவரங்களும்

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் 73 வயதான சிறாந்தி ராஜபக்ஷ, கொழும்பு கிருலப்பனையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைத்து வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டார். கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை, எதிர்வரும் அக்டோபர் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ரூ. 10 மில்லியன் நிதித் துஷ்பிரயோகம்: கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு “கணினிசார் வரைவி“ இயந்திரம் ஒன்றைக் கொள்வன செய்வதாகக் கூறி, தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து 1 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது.

போலி வாக்குறுதியும் திசைதிருப்பலும்: ஆனால், குறித்த மருத்துவமனை நிர்வாகம் அப்படியொரு ஸ்கேனர் இயந்திரத்தைக் கேட்கவே இல்லை என்றும், அப்போதே அங்கு அத்தகைய இயந்திரம் செயல்பாட்டில் இருந்ததாகவும் மருத்துவமனைப் பணிப்பாளர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர். பெறப்பட்ட நிதியைக் கொண்டு இயந்திரம் எவையும் வாங்கப்படாமல், “சிரிலிய சவிய“ (Siriliya Saviya) அமைப்பின் மூலம் அரச நிதி தனிப்பட்ட ரீதியில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

வங்கித் தலைவருக்குப் பிணை: இவ்விவகாரத்தில் முறைகேடாக நிதியை வழங்கி உடந்தையாக இருந்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவர் பிரதீப் காரியவசம் (Pradeep Kariyawasam) கைது செய்யப்பட்ட போதிலும், பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

2. ராஜபக்ஷ குடும்பத்தினர் மீதான ஏனைய முக்கிய வழக்குகள்

சிறாந்தி ராஜபக்ஷவின் கைதுடன் நின்றுவிடாமல், ராஜபக்ஷ குடும்பத்தின் பிற உறுப்பினர்கள் மீதான வழக்குகளும் வேகம் பெற்றுள்ளன:

ரோஹித ராஜபக்ஷ : குடும்பத்தின் இளைய மகனான ரோஹித ராஜபக்ஷ மீது, சட்டவிரோதமான முறையில் சொத்துக்களைக் குவித்தது மற்றும் பணச்சலவை தொடர்பான விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாமல் ராஜபக்ஷ : நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ மீது, 2013 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு 2.3 பில்லியன் அமெரிக்க டாலர் செலவில் எயார்பஸ் விமானங்களைக் கொள்வன செய்ததில் இடம்பெற்ற பிரம்மாண்ட ஊழல் வழக்கு நிலுவையில் உள்ளது.

மர்மமான முறையில் இறந்த முக்கிய சாட்சி: இதே எயார்பஸ் ஒப்பந்தத்தில் மஹிந்த ராஜபக்ஷவும் கையூட்டல் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில், இவ்வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்கவிருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முன்னாள் பிரதான நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன , கடந்த மே மாதம் தனது இல்லத்தில் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

வசீம் தாஜுதீன் படுகொலை வழக்கு: பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் படுகொலை தொடர்பில் ராஜபக்ஷ குடும்பத்தினரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளும் மீண்டும் முழு வீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

3. ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் “ஊழல் ஒழிப்பு“ கொள்கை



ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தில், ஊழலை முழுமையாக ஒழிப்பது மிக முக்கிய முன்னுரிமையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ராஜபக்ஷ குடும்பத்தினர் மட்டுமன்றி, 2015 முதல் 2019 வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற 50 முக்கிய ஊழல், மோசடி மற்றும் குற்றவியல் வழக்குகளின் பட்டியல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் டீழுஐ தலைவர் மீது நடவடிக்கை: இலங்கை முதலீட்டுச் சபையின் முன்னாள் தலைவர் திலன் விஜேசிங்க உட்படப் பல முக்கிய உயர் அதிகாரிகளும் கைது செய்யப்படக் கூடிய பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

ஊடகவியலாளர் லசந்த படுகொலை மற்றும் பொலிஸ் மா அதிபர்: ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கில் தடயங்களை அழித்து, விசாரணையைச் சீர்குலைக்க முயன்றதாகக் குற்றம்சாட்டப் பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்ன மீதும் கைது நடவடிக்கை பாயவுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

4. ராஜபக்ஷ தரப்பின் மறுப்பு

தம் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் ராஜபக்ஷ குடும்பத்தினரும் அவர்களது அரசியல் தோழர்களும் முற்றாக மறுத்துள்ளனர். அரசியல் ரீதியாகத் தங்களைப் பழிவாங்குவதற்காகவும், தங்களது புகழைச் சீர்குலைப்பதற்காகவுமே தற்போதைய அரசாங்கம் இவ்வாறான ஜோடிக்கப்பட்ட வழக்குகளைத் தூசு தட்டி வருவதாக அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்ற பெயரில் புத்தசாசனத்தின் கௌரவத்தைச் சீர்குலைக்க முடியாது!

சிறைச்சாலையிலுள்ள கலபொட அத்தே ஞானசார தேரரின் துறவற ஆடையை அகற்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய சம்பவமானது மிகவும் பாரதூரமானது என “தேசத்தைக் காக்கும் தலைமுறை அமைப்பு தெரிவித் துள்ளது.

அரசியலமைப்பின் மூலம் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவது அரச கடமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு நாட்டில், இச்சம்பவம் பாரிய கேள்விகளை எழுப்பி யுள்ளதாக அவ்வமைப்பின் செயலாளர் காஞ்சன டி சில்வா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பௌத்த துறவிகளின் கருத்துக்கள் தமது தரப்பின் கருத்துக்களுடன் ஒத்துப்போகாத போது அவர்களைத் தூற்றுவதும், விமர்சிக்கும் போது இழிவுபடுத்துவதும், இறுதியாக அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி துறவற ஆடையின் மீது கை வைப்பதும் தற்போதைய காலத்தில் சாதாரணமான ஒன்றாக மாற்றப்பட்டு வருகின்றது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இருப்பினும், ஞானசார தேரர் சட்டத்துக்கு மேலானவர் எனத் தாம் ஒருபோதும் கூறவில்லை என்றும், ஒரு நபருக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பு இருக்குமாயின் அது சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது. எனினும், சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்ற பெயரில் பௌத்த தேரர்களின் துறவற ஆடையை இழிவுபடுத்துவதற்கு எந்தவொரு அரச நிறுவனத்துக்கும் அதிகாரம் அளிக்க முடியாது எனச் சுட்டிக்காட்டியுள்ள அந்த அமைப்பு, சிறைச்சாலைத் திணைக்களம் அத்தகையதொரு செயலையே மேற்கொண்டு ள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.



அத்தியாயம் - 4

மாண்டவ்வியர் என்ற முனிவர் ஊரின் அருகே உள்ள வனத்ததில் ஆச்சிரமம் அமைத்துத் தவம் செய்து கொண்டிருந்தார்.

ஒருநாள் அவர் நிஷ்டையில் இருந்தபோது சில திருடர்கள் முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்தார்கள்.

அவர்கள் அரண்மனையில் திருடிக்கொண்டிருந்த போது காவலர்கள் அவர்களைக் கண்டு விட்டார்கள். திருடிய பொருட்களுடன் தப்பி ஓடிய திருடர்களை அரண்மனைக் காவலர் துரத்திவந்தனர்.

காவலர்கள் தம்மைத் துரத்தி வருவதை அறிந்த திருடர்கள் ஆச்சிரமத்துள்ப் புகுந்து மறைந்து கொண்டனர். வெளியே மரத்தின் கீழ் நிஷ்டையில் இருந்த மாண்டவ்வியரைப் பார்த்துக் காவலர்களின் தலைவன் ‘‘இப்பக்கமாக யாராவது திருடர்கள் ஓடி வந்தார்களா?’’ என்று கேட்டான்.

மாண்டவ்வியருக்கு வெளியே நடைபெற்ற எதுவும் தெரியவில்லை. அதனால் கோபங்கொண்ட போர்வீரன் ‘‘அதோ ஒரு குடிசை தென்படுகிறது. அதைச் சோதனையிடுங்கள்’’ என்றான்.

குடிசையின் உள்ளே சென்ற காவலாளிகள் அங்கே திருடப்பட்ட பொருட்கள் இருப்பதைக்கண்டு தமது தலைவனுக்கு அறிவித்தனர்.

அவன் வந்து பார்த்து விட்டு மாண்டவ்வியர் தான் திருடர்களின் தலைவர் என நினைத்து அவரைக் கைதுசெய்து கொண்டு சென்று அந்நாட்டு அரசன் முன் நிறுத்தினான்.

நாட்டில் பல காலமாகத் திருட்டுக்கள் நடைபெற்று வந்தன.

அவற்றிற்குக் காரணம் மாண்டவ்வியர் என்று அரசன் முடிவு செய்து ‘‘உடனே அவரைச் சூலத்தில் ஏற்றுங்கள்’’ எனக் கட்டளையிட்டான்.

படைவீரர் மாண்டவ்வியரை இழுத்துச்சென்று சூலத்தில் ஏற்றினர்.

சூலத்தில் ஏற்றப்பட்ட மாண்டவ்வியர் பலநாட்கள் சென்றும் இறக்கவில்லை. இதையறிந்த முனிவர்கள் பலர் அவ்விடத்திற்கு வந்து மாண்டவ்வியர் படும் வேதனையைக் கண்டு துடிதுடித்தனர்.

முனிவர்கள் வந்து கூடியதைச் சேவகர்கள் மூலம் அறிந்துகொண்ட அவ்வூர் மன்னன், திகைத்துத் திகிலடைந்து அவ்விடத்திற்குச் ஓடோடி வந்தான்.

முனிவர் சூலத்தில் ஏற்றப்பட்டுப் பல நாட்கள் கழிந்தும் உயிரோடு இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்து அவரைச் சூலத்திலிருந்து இறக்கி, அவரின் காலில் விழுந்து மன்னிப்புக்கோரினான்.

மாண்டவ்வியர் அரசனின் மீது கோபம் கொள்ளாது அவனை மன்னித்துவிட்டுத் தனக்கேன் இத்துன்பம் வந்ததெனக் கேட்கத் தரும தேவதையிடம் சென்றார்.

‘‘மாண்டவ்வியாரே, நீர் சிறுவனாக இருக்கும் காலத்தில் பறவைகளையும், வண்டுகளையும் பிடித்துச் சித்திரவதை செய்து விளையாடினீர்.

சிறுவனாக இருந்தாலும் செய்த பாவத்திற்கான தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்.

அது உமக்குத் தெரியாததல்ல’’ என்றது தருமதேவதை.

அதைக்கேட்ட மாண்டவ்வியர் ‘‘தருமதேவதையே, அறியாப் பருவத்தில் நான் செய்த குற்றத்திற்கு இவ்வளவு பெரிய தண்டனையா?

இது தகாது. இதற்காக நீ மனிதப் பிறப்பெடுப்பாய்’’ என்று சபித்தார்.

இவ்வாறு மாண்டவ்வியரால் சபிக்கப்பட்ட தருமதேவதை விசித்திர வீரியனின் மனைவி அம்பாலிகையின் வேலைக்காரியின் கருவில் உற்பத்தியாகி வேலைக்காரியின் புதல்வன் விதுரனாகப் பூமியில் பிறந்தது.

தர்ம தேவதையின் அவதாரமான விதுரன் சிறந்த தர்மவானாகவும் நீதிமானாகவும் எதிர்காலத்தில் நடப்பவற்றை உணர்ந்தவனாகவும் இருந்தான்.

விதுரனைத் திருதராட்டின மகாராஜாவுக்கு முதல் மந்திரியாகப் பீஷ்மர் நியமித்தார்.

அதனால் விதுரனிடம் ஆலோசனை பெற்றே திருதராடின மன்னன் அரசாட்சி செய்து வந்தான்.

அடுத்த வாரம் தொடரும்



இந்தியச் செய்திகள்

BEHIND ME MEDIA

வீட்டுக் காவலில் மருத்துவப் பணியாளர்கள்?



போராட்டம் நடத்தவிருந்த மருத்துவப் பணியாளர்கள் வீட்டுக் காவலில் வைத்ததைக் கண்டித்து எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கை தேர்தல் முறைகேடுகளுக்கு எதிராக டில்லிக்கு போராட செல்லும் இளைஞர்களை ஆங்காங்கே கைது செய்யும் ஓனர்களின் பாணியில், பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னைக்கு வந்து போராடவிருந்த மருத்துவப் பணியாளர்களை ஆங்காங்கே வீட்டுக்காவலில் வைக்கும் இந்த ஷோபா மாடல் அரசை வன்மையாக கண்டிக்கிறேன்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மருத்துவப்பணியாளர் களுக்கு தந்த வாக்குறுதிகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு போராட்டத்திற்குப் புறப்படும் முன்பே வீட்டில் வைத்து கைது செய்யும் அளவுக்கு இந்த ரீல்ஸ் அரசு அராஜகம் செய்வது ஏன்?

விவசாயிகள், மாணவர்கள், செவிலியர்கள் என ஜனநாயக வழியில் போராட்டம் செய்யும் எந்தப் பிரிவினரையும் நேரில் அழைத்துப் பேசாமல் அடக்குமுறையை ஏவுவதற்குப் பெயர் தான் மாற்றமா? மருத்துவப்பணிகளின் முதுகெலும்பாக இருக்கும் பன்னோக்கு பணியாளர்களை உடனே விடுதலை செய்து, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த டம்மி முதல்வர் முன்வர வேண்டும்.

அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இடைத்தேர்தல் வெற்றி: ஆளும் கட்சி மகிழ்ச்சியில்



தமிழகத்தில் காலியாக இருந்த தாராபுரம், மதுராந்தகம் தொகுதி களில், கடந்த 6ம் தேதி இடைத் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில், த.வெ.க., - தி.மு.க., - அ.தி.மு.க., - நாம் தமிழர் கட்சி -கம்யூனிஸ்ட் கட்சிகள் என, ஐந்து முனைப் போட்டி நிலவிய நிலையில், இரு தொகுதி களிலும் ஆளும் கட்சியான த.வெ.க., வெற்றி பெற்றுள்ளது.

முதல்வர் விஜய் தலைமையிலான த.வெ.க., அரசு பொறுப்பேற்ற பிறகு, அந்தக் கட்சி சந்தித்த முதல் இடைத்தேர்தல் களம் இதுவே. இந்த தேர்தலில், த.வெ.க., வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளதும், ஆளம் கட்சியின் எம்.எல்.ஏ.,க்கள் பலம் அதிகரித் திருப்பதும், அக்கட்சி யினருக்கு உற்சாகத்தை தந்துள்ளது.

மதுராந்தகத்தில் த.வெ.க., வேட்பாளர் மரகதம் குமரவேல், 74,048 ஓட்டுகளும், தாராபுரத்தில் சத்யபாமா 66,841 ஓட்டுகளும் பெற்று வெற்றி பெற்றுள்ளனர்.

இது, விஜய்யின் அரசியல் நகர்வு களுக்கும், அரசின் லஞ்ச ஒழிப்பு போன்ற நிர்வாக நடவடிக்கைகளுக்கும் கிடைத்த மக்கள் ஆதரவாகவே பார்க்கப் படுகிறது.

'தோல்வி பயத்தில் முதல்வர் விஜய் தெருத்தெருவாக பிரசாரம் செய்கிறார். ஆளும் கட்சியினர் ஓட்டுக்கு பணம் தருகின்றனர்.

அ.தி.மு.க., சார்பில் சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், மக்கள் அளித்த ஆதரவை புறந்தள்ளி விட்டு, குதிரை பேரத்திற்கு அடிமையாகி, எம்.எல்.ஏ., பதவியை உதறி விட்டு, ஆளும் கட்சி பக்கம் சாய்ந்து விட்டனர். அப்படிப்பட்டவர்கள் ஆளும் கட்சி சார்பில் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டதால், அவர்களை புறக்கணிக்க வேண்டும்.

படுதோல்வி அடையச் செய்ய வேண்டும்" என, தி.மு.க., - மற்றும் அ.தி.மு.க., தலைவர்கள் செய்த பிரசாரம், மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

தொழிலாளர் உரிமையை பாதுகாக்க டிசம்பர் முதல் தொடர் போராட்டங்கள்



தொழிலாளர்களின் வேலை நிறுத்த உரிமையைப் பாதுகாக்க டிசம்பர் முதல் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் என ஏஐடியுசி அகில இந்திய பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் தெரிவித்துள்ளார்.

ஓசூரில் ஏஐடியுசியின் 21-வது மாநில மாநாடு நடைபெற்றது. இதில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தேர்தல் ஆணையத்தை மத்திய அரசு தவறாகப் பயன்படுத்து வது, வாக்காளர் பட்டியலில் முறைகேடுகளைச் செய்ய முயல்வது போன்ற செயல்களால் மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப் படுகின்றன.

தேர்தல் ஆணையர் நியமனத் தேர்வுக் குழுவிலிருந்து தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு, தங்களுக்குச் சாதகமான அதிகாரிகளை நியமித்ததன் மூலம் தேர்தல் ஆணையம் கைப்பாவையாக மாற்றப் பட்டுள்ளது.

தொகுதி மறுவரையறை மற்றும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்ற பெயரில், கல்வி, சுகாதாரம், மனிதவளக் குறியீடுகள் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் தென் மாநிலங்களின் மக்களவைப் பிரதிநிதித்துவத்தைக் குறைத்துத் தண்டிக்க மத்திய அரசு திட்டமிடுகிறது. இதற்கு எதிராக அனைத்துக் கட்சிகளும் மக்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். சர்வதேச நீதிமன்றமும் அரசியலமைப்பும் உறுதி செய்துள்ள தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையைப் பாதுகாக்க வலியுறுத்தி, டிசம்பர் முதல் நாடு தழுவிய அளவில் தொடர் வேலைநிறுத்தப் போராட்டங்களையும் தொடர் மறியல் போராட்டங்களையும் விவசாய சங்கங் களுடன் இணைந்து முன்னெடுக்க மத்தியத் தொழிற்சங்கங்கள் திட்டமிட்டு ள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

திமுக தோல்விக்கு காரணம்... - மாணிக்கம் தாகூர் கருத்து

வரலாறு காணாத ஊழல், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, பெண்களுக்கு எதிரான தவறான பேச்சுகள், கூட்டணிக் கட்சிகளை அவமதித்து தான் திமுகவின் உண்மையான தோல்விக்குக் காரணம் என தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில், "திமுக தோல்விக்கு ஊழல், சட்டம் ஒழுங்கு சீரழிவு, பெண்களைப் பற்றி தவறாகப் பேசிய பேச்சுகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளை நடத்திய விதம்தான் காரணம். 21.2.2026 அன்று மதுரையில் நடைபெற்ற திமுக தென் மண்டல வாக்குச்சாவடிக் குழு உறுப்பினர்களுக்கான 'என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி' பயிற்சி மாநாட்டில் பேசிய திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், சிறப்பு வாக்காளர் திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) மூலம் பல்வேறு மாநிலங்களில் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர்.

ஆனால், தமிழ்நாட்டில் யாருடைய வாக்குகளையும் நீக்க விடாமல், பம்பரமாக உழைத்த இயக்கம் திமுக. தமிழ்நாடு முழுவதும், திமுக சார்பில் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர் களான BLA2-க்களைச் சந்தித்து வருகிறேன்.

திமுக சார்பில் 75,032 BLA2-க்கள், 5,50,000 வாக்குச்சாவடிக் குழு உறுப்பினர்கள் (BLC), 75,032 வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) உள்ளனர். வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுகவின் வெற்றியை உறுதி செய்யப் போவது இந்த 7 லட்சம் பேர்தான் என்றார்.

திமுக சார்பில் 75,032 BLA2-க்கள், 5,50,000 வாக்குச்சாவடிக் குழு உறுப்பினர்கள் (BLC), 75,032 வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) உள்ளனர்.

வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுகவின் வெற்றியை உறுதி செய்யப் போவது இந்த 7 லட்சம் பேர்தான் என்றார்.

ஆனால், 2026 சட்டமன்றத் தேர்தலிலும் தற்போது நடைபெற்ற இடைத்தேர்தல்களிலும் மக்கள் திமுகவை முற்றிலுமாகப் புறக்கணித்துத் தோல்வியைத் தந்தவுடன், இப்போது எஸ்ஐஆர் மூலம் வாக்காளர்கள் நீக்கப்பட்டதே தங்களது தோல்விக்குக் காரணம் என்று திமுகவின் செய்தித் தொடர்பாளர்கள் பேசி வருகின்றனர். தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் எவ்வாறு நடைபெற்றன என்பதற்கு, அன்றைய முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் மதுரைக் கூட்டத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட்டார்.

தேர்தலுக்கு முன்னால் "வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளைச் சிறப்பாக முடித்துவிட்டோம், எந்தப் பிரச்சனையும் இல்லை" என்று கூறிவிட்டு, தேர்தல் முடிந்து மக்கள் தீர்ப்பு எதிராக வந்த பிறகு மட்டும் வாக்காளர் திருத்தப் பணி மீது பழியைப் போடுவது என்ன வகையான அரசியல்? குடியரசுத் தலைவரிடம் அளிக்கப்பட்ட மனுவின் 4-வது கோரிக்கையில் கூட, எங்கு வாக்குத் திருட்டிற்கான திட்டவட்டமான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோ, அந்த மாநிலங்களின் தேர்தல்களை மட்டுமே ரத்து செய்யக் கோரப் பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் அப்போதைய முதலமைச்சர் மம்தா பானர்ஜி எஸ்ஐஆ-ரைச் செயல்படுத்த மறுத்தபோதிலும், 'ஊடுருவல்காரர்கள்' என்ற பெயரைப் பயன்படுத்தி வலுக்கட்டாயமாகப் பல லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். அதேபோல அசாமிலும் பிஹாரிலும் முறைகேடுகள் நடைபெற்றன. மகாராஷ்டிரா மற்றும் ஹரியானாவில் வேறு வகையான வாக்குத் திருட்டு நடைபெற்றுள்ளது! ஆனால், தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி ஆகிய இடங்களில் எஸ்ஐஆர் தொடர்பாக எந்தப் புகாரும் இல்லை. வரலாறு காணாத ஊழல், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, பெண்களுக்கு எதிரான தவறான பேச்சுகள், கூட்டணிக் கட்சிகளை அவமதித்து தான் திமுகவின் உண்மையான தோல்விக்குக் காரணம்.

இப்போதுகூட எஸ்ஐஆரை எதிர்ப்பதாக திமுக செய்தித் தொடர்பாளர்கள் பேசி வருகிறார்களே தவிர, தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலகக் கோரி நடைபெறும் போராட்டத்தில் திமுக எம்பிக்கள் பங்கேற்கவில்லை. தமிழ்நாட்டில் உள்ள இடதுசாரிக் கட்சிகள், விசிக, மதிமுக ஆகிய கட்சிகளின் தலைவர்கள் டெல்லிப் போராட்டத்தில் கலந்துகொண்டு கைதானார்கள்.

ஆனால், திமுக சார்பில் ஒரு எம்பி கூட பங்கேற்கவில்லை. இதற்கு என்ன காரணம்? எஸ்ஐஆருக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்றால் பாஜகவை பகைத்துக்கொள்ள நேரிடும் என்ற அச்சம்தான் இதற்குக் காரணம்.

தமிழ்நாட்டின் நலன், ஜனநாயகம், மதச்சார்பின்மை ஆகியவற்றில் திமுகவுக்கு உண்மையிலேயே அக்கறை இருந்தால், தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலகக் கோரி நடைபெறும் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும். மாறாக, தமிழ்நாட்டில் வாக்காளர்கள் நீக்கப்படுவதைத் தடுத்துவிட்டதாகப் பேசிவிட்டு, இப்போது வாக்காளர்கள் நீக்கப்பட்டதே திமுகவின் தோல்விக்குக் காரணம் என்று கூறுவதை மக்கள் ஏற்க மாட்டார்கள்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

உலகக் கண்ணோட்டம்

BEHIND ME MEDIA

ரஷ்யாவிடம் இருந்து டீசல் கொள்முதல் செய்ய அமெரிக்கா முடிவு!



அமெரிக்காவில் அதிகரித்து வரும் எரிபொருள் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ரஷ்யாவிடம் இருந்து அதிகளவில் டீசல் கொள்முதல் செய்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கு பெற்ரோலியப் பொருட்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குவது, உக்ரைன் மீதான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பதிலாக அதனை நீடிப்பதற்கு உதவும் என ஜெலன்ஸ்கி விமர்சித்துள்ளார்.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் நிலையில், அதனை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. எனினும், இதுவரை நிரந்தரத் தீர்வு எட்டப்படவில்லை.

முன்னதாக, ரஷ்யாவிடம் இருந்து சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் எரிபொருளைக் கொள்முதல் செய்வதன் மூலம் அந்த நாட்டுக்கு வருவாய் கிடைப்பதாக டிரம்ப் விமர்சித்திருந்தார். ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் கொள்முதல் செய்யும் நாடுகளுக்கு எதிராக வரி விதிக்கும் நடவடிக்கைகளையும் அமெரிக்கா முன்னெடுத்திருந்தது.

இந்நிலையில், அமெரிக்காவே ரஷ்யாவிடம் இருந்து டீசல் கொள்முதல் செய்யத் திட்டமிட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் சர்வதேச அரசியல் வட்டாரத்தில் கவனத்தை ஈர்த்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் தொலைபேசியில் உரையாடிய பின்னர், அமெரிக்கா மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு டீசல் விநியோகிக்க ரஷ்யா ஒப்புக்கொண்டதாக டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இதன்படி, உடனடியாக 300,000 மெட்ரிக் தொன் னுக்கும் அதிகமான டீசல் விநியோகிக்கப்படும் என்றும், நவம்பர் மாதத்தில் மேலும் 500,000 மெட்ரிக் தொன் வழங்கப்படும் என்றும், அதனைத் தொடர்ந்து கூடுதலாக ஒரு மில்லியன் மெட்ரிக் தொன் டீசல் விநியோகிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் சரக்கு வாகன ஓட்டுநர்கள் உள்ளிட்டோர் எரிபொருள் விலை உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உள்நாட்டில் எரிபொருள் விலையைக் குறைப்பதே தனது முக்கிய நோக்கம் என டிரம்ப் தெரிவித்துள்ளார்.

டிரம்பின் இந்த முடிவை விமர்சித்துள்ள ஜெலன்ஸ்கி, புட்டினுக்கு வழங்கப்படும் சலுகைகள் அமைதியைக் கொண்டுவராது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவுக்கு பெற்ரோலியப் பொருட்களை விற்பனை செய்ய அனுமதிப்பது, முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டிய போரை நீடிப்பதற்கான முதலீடாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ரஷ்யாவுக்கு எதிரான தடைகளைத் தளர்த்துவதற்குப் பதிலாக, இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றத்தைக் குறைப்பதற்கும் பரஸ்பர அடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனவும் ஜெலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

இந்திய பைலட் ஸ்மித் மச்சாருக்கு இஸ்ரேல் அரசின் வீரதீர விருது



விமான கடத்தலை தடுத்த இந்திய பைலட் ஸ்மித் மச்சாருக்கு உலகம் முழுவதிலும் இருந்து பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. இந்நிலையில் இஸ்ரேல் அரசின் வீரதீரச் செயல் விருது ஸ்மித் மச்சாருக்கு வழங்கப்படவுள்ளது. இதற்கான அறிவிப்பை இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்ஸாக் வெளியிட்டுள்ளார்.

.ிபளை துபாய் விமானத்தையும் பயணிகளையும் காப்பாற்றிய 6 பேருக்கு டெல் அவிவ் நகரிலுள்ள அதிபர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் விருது வழங்கப்பட்டது.

அப்போது அதிபர் ஐசக் ஹெர்சாக்,''இஸ்ரேலின் உயரிய வீரதீரச் செயல் விருது விரைவில் பைலட் ஸ்மித் மச்சாருக்கு வழங்கப்படும். அவர் விரைந்து குணமடைய நான் வாழ்த்துகிறேன். அவர் குணமடைந்து வீடு திரும்பியதும் அவருக்கான விருது வழங்கப்படும்" என்றார்.

ஹவுதி இலக்குகள் மீது பாகிஸ்தான் வான்வழி தாக்குதல்



மெக்கா ஒப்பந்தத்தின்படி ஏமனில் உள்ள ஹவுதி இலக்குகளை குறிவைத்து பாகிஸ்தான் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

சவுதி அரேபியாவுடன் புதிதாக செயல்பாட்டுக்கு வந்துள்ள மெக்கா பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ், ஏமனில் செயல்படும் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இலக்குகள் மீது பாகிஸ்தான் விமானப் படை வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

மேலும், சவுதி அரேபியாவில் சுமார் 8,000 பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன. மத்திய கிழக்கு பிராந்திய மோதலில் தற்போது பாகிஸ்தானும் நேரடியாக களமிறங்கியுள்ளது. நியூயார்க் டைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியின்படி, சவுதி அரேபியாவுக்கு வழங்கப்படும் ராணுவ ஆதரவை இஸ்லாமாபாத் தீவிரப்படுத்தியுள்ளது என பாகிஸ்தான் மூத்த ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஹவுதி கிளர்ச்சியாளர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் பாகிஸ்தான் போர் விமானங்கள் பயன்படுத்தப்பட்டதையும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இருப்பினும், பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சகம் இந்த செய்தியை மறுத்துள்ளதுடன், ஹவுதிகளுக்கு எதிராகப் பாகிஸ்தான் போர் விமானங்கள் பயன்படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது. அதேநேரம், பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் ஏற்கெனவே சவுதி அரேபியாவில் தங்கியிருப்பதை சிஎன்என் செய்தி நிறுவனத்திடம் பாகிஸ்தான் ராணுவத்தின் ஊடகப் பிரிவு தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் அகமது ஷரீ.ப் சவுத்ரி உறுதிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், பாதுகாப்பு காரணங்களுக்காக வீரர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களை அவர் வெளியிடவில்லை.

உள்ளூர் அதிகாரிகள் அதிகாரப்பூர்வமாக வெளியிடும் வழிகாட்டுதல்களைச் சரியாகப் பின்பற்ற வேண்டும். தற்போதைய சம்பவங்கள் தொடர்பான எந்தவொரு வீடியோக்கள் அல்லது செய்திகளையும் சமூக வலைதளங்களில் பகிரவோ, ரீபோஸ்ட் செய்யவோ வேண்டாம்" என கூறப்பட்டுள்ளது.

இங்கிலாந்து விலங்கியல் பூங்காவில் புலி கூண்டிற்குள் நுழைந்த நபர் புலி தாக்குதலில் பலி

இங்கிலாந்தின் வட பகுதியில் உள்ள விலங்கியல் பூங்கா ஒன்றில், புலிக் கூண்டிற்குள் நுழைந்த நபர் ஒருவர் அங்கிருந்த புலி தாக்கியதில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

South Yorkshire பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில், Doncaster நகரத்திற்கு அருகில் உள்ள யார்க்ஷயர் வைல்ட்லை.ப் பூங்காவில் பிற்பகல் 1:35 மணியளவில் இச்சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததையடுத்து, அவசர மருத்துவக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இருப்பினும், பாதிக்கப்பட்ட நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது புலிக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றும், அது கூண்டிற்குள்ளேயே இருந்ததாகவும் பொலிஸ் படை தெரிவித்துள்ளது. தாக்குதலைத் தொடர்ந்து விலங்கியல் பூங்காவிலிருந்த பார்வையாளர்கள் வெளியேற்றப்பட்டதுடன், அதிகாரிகள் சனிக்கிழமை இரவு வரை சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

"துல்லியமாக என்ன நடந்தது என்பதை கண்டறிய நாங்கள் அதிகாரிகளுடன் இணைந்து நெருக்கமாகச் செயல்பட்டு வருகிறோம்" என அந்த விலங்கியல் பூங்கா தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. யார்க்ஷயர் வைல்ட்லை.ப் பார்க் 2009 ஆம் ஆண்டில் தனது செயல்பாடுகளைத் தொடங்கியது, அதன் "லேண்ட் ஆ.ப் தி டைகர்ஸ்" ஈர்ப்பு மையம் 2011 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது.

பார்வையாளர்கள் புலிகள் காடுகள் மற்றும் புல்வெளிகளில் உலாவுவதையோ அல்லது நீர்வீழ்ச்சிக் குளத்தில் விளையாடுவதையோ கவனிக்கும் வகையில், 300 மீட்டர் நீளமுடைய உய உயர்த்தப்பட்ட நடைபாதை (raised walkway) இந்த கூண்டுப் பகுதியில் அமைந்துள்ளதாக பூங்கா தனது இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளது.

சினிமா

BEHIND ME MEDIA

ஹீரோக்களுக்கு நிகரான சம்பளம் வாங்கும் நடிகை



சமூக வலைதளங்களில் திரை நட்சத்திரங்களின் புகைப்படங்கள் அவ்வப்போது வைரலாவது வழக்கம். அந்த வகையில், தென்னிந்தியத் திரையுலகின் முன்னணி நடிகையான நயன்தாராவின் புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

நயன்தாராவின் இயற்பெயர் டயானா மரியம் குரியன். இவர் நடிகையாவதற்கு முன்பு, மலையாளத் தொலைக்காட்சியில் ஆங்கராக பணிபுரிந்திருந்தார். பின்னர், 2003-ம் ஆண்டு வெளியான “மனசினக்கரே“ என்ற மலையாளத் திரைப்படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமானார்.

தமிழில் சரத்குமார் நடிப்பில் வெளியான ‘ஐயா’ படத்தின் மூலம் அறிமுகமானார். தொடர்ந்து ரஜினிகாந்த், விஜய், அஜித் உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்து, தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்தார்.

தெலுங்கில் வெளியான ‘ஸ்ரீ ராம ராஜ்ஜியம்’ திரைப்படத்தில் சீதையாக நடித்த நயன்தாராவின் நடிப்பு பெரும் கவனத்தைப் பெற்றது. இந்தப் படத்திற்காக அவர் சிறந்த நடிகைக்கான பிலிம்பேர் விருதையும் வென்றார்.

‘ராஜா ராணி’, ‘நானும் ரௌடி தான்’, ‘அறம்’, ‘கோலமாவு கோகிலா’, ‘விஸ்வாசம்’, ‘பிகில்’ உள்ளிட்ட படங்களில் நடித்ததன் மூலம் நயன்தாரா ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றார்.

கதாநாயகர்களுக்கு இணையான முக்கியத்துவம் கொண்ட கதாபாத்திரங்களிலும், கதாநாயகியை மையமாகக் கொண்ட திரைப்படங்களிலும் நடித்து தனது திறமையை வெளிப் படுத்தினார். இதன் மூலம் தென்னிந்தியத் திரையுலகில் ‘லேடி சூப்பர்ஸ்டார்’ என்ற அடையாளத்தையும் பெற்றார்.

அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான் நடிப்பில் வெளியான ‘ஜவான்’ திரைப்படத்தின் மூலம் நயன்தாரா பாலிவுட்டிலும் அறிமுகமானார். இந்தப் படத்தின் மூலம் இந்தி ரசிகர்கள் மத்தியிலும் அவர் கவனம் பெற்றார்.

தற்போது நயன்தாரா ஹீரோக்களுக்கு நிகரான சம்பளம் வாங்கும் நடிகையாக உருவெடுத்துள்ளார். அவர் ஒரு படத்திற்கு 10 முதல் 12 கோடி ரூபாய் வரை சம்பளம் வாங்குவதாக கூறப்படுகிறது.



சிக்மா திரைப்படம் நஷ்டமா?

நடிகர் விஜய், அரசியல் கட்டி துவங்கி தேர்தலில் போட்டியிட்டு இப்போது முதலமைச்சராகிவிட்டார்.

இதனால் விஜய் சினிமா பக்கமே வருவதில்லை, அவரின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்றாலும் அவரின் மகன் சிக்மா படத்தின் மூலம் சினிமாவில் இயக்குனராக அவதாரம் எடுத்துள்ளார்.

விஜய்யின் மகன் சினிமாவில் வந்ததை ரசிகர்கள் கொண்டாடினார்கள், அவரின் சிக்மா படத்திற்காகவும் ஆர்வம் காட்டினார்கள் ரசிகர்கள். ஜேசன் சஞ்சய், சந்தீப் கிஷன் மற்றும் /பரியா அப்துலாவை வைத்து சிக்மா என்ற படத்தை இயக்கினார்.

பிரம்மாண்ட படங்களை இயக்கிய லைகா நிறுவனம் தான் இந்த படத்தையும் தயாரித்துள்ளது.

படமுதல் நாள் ரிலீஸின் போது ஜேசன் சஞ்சய் அம்மா மற்றும் தங்கை இருவரும் ரசிகர்களுடன் அமர்ந்து படம் பார்த்தார்கள்.

ரசிகர்களும் படத்திற்கு பெரிய ஆதரவு தெரிவித்து வந்த நிலையில் படம் வெளியாகி 7 நாள் ஆகிவிட்டது. படம் பெரிய அளவில் வசூலிக்கும் என எதிர்ப்பார்க்கையில் சுமாரான வரவேற்பை தான் பெற்றுள்ளது.

இதுவரை படம் 10 கோடி ரூபாவுக்கு மேலான வசூலை தான் ஈட்டியுள்ளதாம், இந்த வசூல் படத்திற்கு நஷ்டம் என கூறப்படுகிறது.

இந்தியன் 3 படத்தின் புதிய அப்டேட்



பிரம்மாண்ட இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் கமல் ஹாசன் நடிப்பில் உருவாகியுள்ள இந்தியன் 3 திரைப்படத்தின் அப்டேட்டை லைகா நிறுவனம் தற்போது வெளியிட்டுள்ளது.

ஷங்கர் - கமல் ஹாசன் கூட்டணியில் உருவாகி கடந்த 1996 ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் இந்தியன். இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து கிட்டத்தட்ட 28 ஆண்டுகளுக்கு பின் இந்தியன் 2 வெளியானது.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு வெளியான இப்படம் படுதோல்வியைச் சந்தித்தது. மேலும், கடுமையான விமர்சனங்களையும் எதிர்கொண்டது. இந்தியன் 2 திரைப்படம் தோல்வியை சந்தித்தாலும் கூட, இந்தியன் 3 திரைப்படத்திக்கென்று தனி எதிர்பார்ப்பு இருந்தது. ஆகையால் இந்தியன் 3 அப்டேட் எப்போது என தொடர்ந்து ரசிகர்கள் கேள்வி எழுப்பி வந்தனர்.

இந்நிலையில், லைகா நிறுவனம் இந்தியன் 3 திரைப்படத்திற்கான அப்டேட்டை அதிகாரப்பூர்வமாக போஸ்டருடன் வெளியிட்டுள்ளது. ”Senapathy is back with zero tolerance. The resurgence begins in Indian 3 War Mode” என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியன் 3 அப்டேட்டிற்காக காத்திருந்த ரசிகர்களுக்கு இது மிகுந்த மகிழ்ச்சியை தந்துள்ளது. அதே சமயம் இந்த படத்தையாவது சொதப்பாமல் மக்களுக்கு பிடித்தவாறு எடுங்கள் என பலரும் விமர்சனங்களையும் கூறி வருகின்றனர்.